## இதழ்களின் பார்வையில் ஈரோடு புத்தகத் திருவிழா

வெள்ளிக்கிழமை, 2 ஆகஸ்ட் 2019 தினமணி


# ஈரோடு புத்தகத் திருவிழா இன்று தொடக்கம்

ஈரோடு, ஆக.1: தமிழகத்தில் பாதி மாவட்டங்களில் புத்தகத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்ற போதிலும் ஈரோடு புத்தகத் திருவிழா வெகுஜன மக்களால் கொண்டாடப்படும் புத்தகத் திருவிழாவாக இருப்பதால் 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு புத்தகத் திருவிழா வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 2) தொடங்குகிறது.

தமிழகத்தில் சென்னை புத்தகத் திருவிழாவுக்கு அடுத்து ஈரோடு புத்தகத் திருவிழா என்பது புத்தகப் பிரியர்களுக்கு கொண்டாட்டமான நிகழ்வாக உள்ளது. இந்த ஆண்டு புத்தகத் திருவிழா வரும் வெள்ளிக்கிழமை(ஆகஸ்ட் 2) தொடங்கி 13 ஆம் தேதி வரை 12 நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் புத்தகத் திருவிழாவில் தமிழகத்தில் பல்வேறு புத்தக வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்களுடன் இந்தியாவின் முக்கியப் பதிப்பகங்களும் கலந்துகொள்கின்றன. இதற்காக 230 புத்தக அரங்குகள் அமைக்கப்பட்டு லட்சக்கணக்கான புத்தகங்கள் விற்பனைக்காகக் குவிக்கப்பட்டுள்ளன.

உலகெங்கும் உள்ள தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புகளை விற்பனை செய்வதற்கென உலகத் தமிழர் படைப்பரங்கம், புதிய புத்தகங்களை வெளியிட விரும்புபவர்களுக்கென புத்தக வெளியீட்டு அரங்கம், மக்களை சிந்திக்கத் தூண்டும் சொற்பொழிவு



(கோப்புப் படம்).

நிகழ்ச்சிகள், படைப்பாளர்கள் வாசகர்களைச் சந்திக்கும் சிறப்பு மேடை, படைப்பாளர் பாராட்டு நிகழ்வுகள், ஈரோடு மாவட்ட படைப்பாளர் அரங்கம் போன்றவை பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ளன. தினமும் காலை 11 மணி முதல் இரவு 9.30 மணி வரை நடைபெறும் இந்தப் புத்தகத் திருவிழாவைக் காண நுழைவுக் கட்டணம் இல்லை.

ஆகஸ்ட் 2 ஆம் தேதி மாலை 6 மணிக்கு நடைபெறும் தொடக்க விழா நிகழ்வுக்கு தேசிய நல விழிப்புணர்வு இயக்கத் தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன் தலைமை வகிக்கிறார். மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றுகிறார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி வாழ்த்திப் பேசுகிறார்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் உலகத் தமிழர் படைப்பரங்கினைத் திறந்துவைத்துப் பேசுகிறார். சாகித்திய அகாதெமி விருதுபெற்ற எழுத்தாளர் பொன்னீலன் புத்தக அரங்கினைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றுகிறார்.

**வெகுஜன மக்கள் திரளும் திருவிழா:**

இதுகுறித்து மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தெரிவித்ததாவது: கடந்த 2005 ஆம் ஆண்டில் ஈரோட்டில் உள்ள திருமண மண்டபத்தில் 75 அரங்குகளுடன் நடத்தப்பட்ட புத்தகத் திருவிழா, அடுத்த ஆண்டு முதல் வஉசி பூங்கா மைதானத்துக்கு மாற்றப்பட்டது. இதன்பிறகு அரங்குகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டது. சில ஆண்டுகளாக அரங்குகளின் எண்ணிக்கை தொடர்ந்து 230 என்ற எண்ணிக்கையில் உள்ளது. சென்னைக்கு அடுத்தபடியாக லட்சக்கணக்கான வாசகர்களை ஈர்க்கும் சக்தி படைத்துள்ளது ஈரோடு புத்தகத் திருவிழா.

வெளிநாடு வாழ் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் அடங்கிய உலகத் தமிழர் படைப்பரங்கம் இந்தத் திருவிழாவின் சிறப்பம்சம். இதில் பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கு தங்களது அனுபவங்களை வெளிப்படுத்த நாள்தோறும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஈரோடு புத்தகத் திருவிழாவின் சிறப்பம்சமான சிந்தனை அரங்கில் பல்வேறு துறைகளின் புகழ்பெற்ற ஆளுமைகள் நாள்தோறும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

மேலும் புதிய அறிவியல் கண்டுபிடிப்பாளரைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில், அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு விருது( ஒரு லட்ச ரூபாய் பரிசு) வழங்கும் நிகழ்வும் நடைபெறுகிறது.

அறிவியல், இலக்கியம், விஞ்ஞானம், கணினித் துறை உள்ளிட்ட துறை நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் கிடைக்கின்றன. ரூ.250-க்கு மேல் புத்தகங்களை வாங்கும் மாணவர்களுக்கு புத்தக ஆர்வலர் என்ற பாராட்டுச் சான்று வழங்கி மக்கள் சிந்தனைப் பேரவை கௌரவிக்கிறது.

இந்த ஆண்டில் சிறப்பு நிகழ்வாக பட்டிமன்றம், பாரதி குறித்த நாடகம், மகளிர் ஆளுமைகள் பங்கேற்கும் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாணவர்கள், இளைஞர்களிடம் வாசிப்பு பழக்கத்தை உருவாக்க மக்கள் சிந்தனைப் பேரவை உண்டியல் திட்டம்,பேச்சுப் போட்டி, மாணவர்களை புத்தகத் திருவிழாவுக்கு அழைத்து வருதல் போன்றவற்றை செய்து வருகிறது. இதன் மூலம் ஈரோடு புத்தகத் திருவிழா வெகுஜன மக்கள் பங்கேற்கும் திருவிழாவாக மாறி வருகிறது என்றார்.

230 அரங்குகளுடன்

# ஈரோடு புத்தகத்திருவிழா தொடங்கியது

## கண்காட்சியை எழுத்தாளர் பொன்னீலன் திறந்து வைத்தார்

ஈரோடு, ஆக.3-
230 அரங்குகளுடன் தொடங்கிய ஈரோடு புத்தகத்திருவிழா கண்காட்சியை எழுத்தாளர் பொன்னீலன் திறந்து வைத்தார்.



ஈரோடு புத்தக திருவிழா கண்காட்சியை, அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தலைவர் பொன்னீலன் திறந்து வைத்த போது எடுத்த படம். அருகில் மலேசியா முன்னாள் மந்திரி டத்தோஸ்ரீ எம்.சரவணன், மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன், தேசிய நல விழிப்புணர்வு இயக்கத்தின் தலைவர் எஸ்கேஎம். மயிலானந்தன் உள்பட பலர் உள்ளனர்.

### புத்தகத்திருவிழா

மக்கள் சிந்தனை பேரவை சார்பில் 15-வது ஆண்டு ஈரோடு புத்தகத்திருவிழா நேற்று தொடங்கியது. இதன் தொடக்க விழாவுக்கு தேசிய நல விழிப்புணர்வு இயக்க தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன் தலைமை தாங்கினார். புத்தகத்திருவிழா குறித்து மக்கள் சிந்தனை பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் விளக்க உரையாற்றியதுடன், வரவேற்று பேசினார்.

விழாவில் மலேசிய நாட்டின் முன்னாள் மந்திரியும் தற்போதைய எம்.பி.யுமான டத்தோஸ்ரீ எம்.சரவணன் கலந்து கொண்டு உலகத்தமிழர் படைப்பரங்கத்தை திறந்து வைத்தார். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளருமான பொன்னீலன் விழாவில் கலந்து கொண்டு பிரமாண்ட புத்தக அரங்கத்தினை திறந்து வைத்தார்.

### மகத்தானது

அதைத்தொடர்ந்து முக்கிய விருந்தினர்கள் புத்தக ஸ்டால்களை பார்வையிட்டனர். பின்னர் சிந்தனை அரங்க நிகழ்ச்சிகள் நடந்தன. இதில் எழுத்தாளர் பொன்னீலன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

மனிதனின் கண்டுபிடிப்புகளில் மகத்தானது எழுத்துக்களை உருவாக்கியது. அடுத்து மனிதன் எழுதியது, வாசித்தது, புத்தகங்களை உருவாக்கியது என அனைத்தும் மகத்தானது. புத்தகம் என்பது அறிவுக்களஞ்சியம். புத்தகங்களை வாசிப்பதால் அறிவு சிறக்கும். சிந்தனை மேம்படும். மனித மாண்பு மேம்படும்.

### வைகுண்டசாமி

புத்தகத்தை வாசிப்பவர்கள் மிகப்பெரிய வளர்ச்சி அடைவார்கள். அவர்களுக்கு தனிமை என்பது இருக்காது. புத்தகம் அல்லது இலக்கியம் என்பது அறிவு, அறம், அழகு நிறைந்தது. அறிவும், அறமும், அழகும் நிறைந்த வாழ்க்கையை புத்தகங்கள் தரும்.

எல்லா வரலாறுகளும் புத்தகங்களில்தான் இருக்கின்றன. "தாழக்கிடப்பவர்களை தற்காப்பதே தர்மம்" என்று அய்யா வைகுண்டசாமி கூறியது புத்தகத்தில்தான் இருக்கிறது.

### நூலகம்

வாழ்வுக்கான அறமும், அருளும் திருக்குறளில் இருக்கிறது. திருக்குறளும், கம்பராமாயணமும் அனைத்து வீடுகளிலும் இருக்க வேண்டும்.

சாதாரண நிகழ்ச்சிகளைக்கூட கம்பன் தமிழில் படிக்கும்போது அதைவிட வேறு எதுவும் வேண்டாம் என்ற வகையில் இருக்கும். பாரதி பாடல்களை சத்தமாக பாடினால் நோய்விட்டுப்போகும். வீடுகளில் நூலகம் வேண்டும்.

இவ்வாறு எழுத்தாளர் பொன்னீலன் கூறினார்.

### உற்சாக மூட்ட வேண்டும்

விழாவில் வாழ்த்தி பேசிய ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி ஆர்.பாலமுரளி பேசும்போது, ஈரோடு புத்தத்திருவிழாவால் அதிகம் பயன் பெறுபவர்கள் பள்ளிக்கல்வித்துறையினர் தான். மாணவர்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த ஆசிரியர்கள் புத்தக வாசிப்பை உற்சாகமூட்ட வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறோம்.

மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு ஏற்ற ஆட்சி தான் அமையும் என்பார்கள். இதை மக்கள் உணர வேண்டும். வருங்கால தலைமுறையான மாணவ-மாணவிகள் புத்தக வாசிப்பை மேற்கொள்ள தேவையான அனைத்து உதவிகளையும் செய்யவும், வாசித்தலுக்கான நல்ல சூழலை பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தவும் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறோம்.

இவ்வாறு மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி ஆர்.பாலமுரளி கூறினார்.

### 230 அரங்குகள்

விழாவில் சேலம் சரக மதுவிலக்கு அமலாக்க போலீஸ் சூப்பிரண்டு ஆர்.சிவக்குமார், கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஈரோடு புத்தகத்திருவிழாவில் 230 அரங்குகள் உள்ளன. தமிழகத்தின் அனைத்து முக்கியமான பதிப்பகங்கள், இந்திய அளவில் சிறந்த பதிப்பகங்கள் பங்கேற்று உள்ளன. அனைத்து வகையான புத்தகங்களும் குவிக்கப்பட்டு இருக்கின்றன. இன்று (சனிக்கிழமை) பகல் 11 மணி முதல் புத்தக அரங்கம் திறக்கப்படும். மாலையில் சிந்தனை அரங்க நிகழ்வில் சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஆர்.மகாதேவன் கலந்து கொண்டு பேசுகிறார்.




'தினத்தந்தி' அரங்கில் வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை மக்கள் ஆர்வத்துடன் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

புத்தகத்திருவிழாவில்

## 171-ம் எண்ணில் 'தினத்தந்தி' அரங்கு

ஈரோடு புத்தகத்திருவிழா நேற்று தொடங்கியது. இதில் 171-ம் எண் அரங்கில் 'தினத்தந்தி' பதிப்பக புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளன.

இந்த ஆண்டு பல புதிய புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. மரண பயத்தில் இருந்து மீட்டு, மகிழ்ச்சியுடன் வாழவைக்கும் இதுவும் கடந்து போகும் என்ற புத்தகம், நமக்குள் சில கேள்விகள், பழைய சோறு ஆகிய புத்தகங்களும் விற்பனைக்கு உள்ளன. சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம், ஆயிரம் ஆண்டு அதிசயம், தமிழ் சினிமா வரலாறு(பாகம் 1), ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு, மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள், ஆளுமைத்திறன், சிறகை விரிக்கும் மங்கள்யான், பரபரப்பான வழக்குகள், நம்ப முடியாத உண்மைகள், உலகை உலுக்கிய வாசகங்கள், கலாம் ஒரு சரித்திரம், 27 நட்சத்திர தலங்கள் பரிகார முறைகள், மகாசக்தி மனிதர்கள், சினிமாவின் மறுபக்கம், வாழ்வை வளமாக்கும் பூஜை-விரதமுறைகள், அதிசயங்களின் ரகசியங்கள், தூரமில்லை தொட்டுவிடலாம், இதயம் தொட்ட பழமொழிகள், பழங்கால இந்தியர்களின் விஞ்ஞானம், இலக்கியத்தில் இன்பரசம், பழகிப்பார்போம் வாருங்கள், உடலும் உணவும், நலம்தரும் மூலிகை சமையல், ஆதிச்சநல்லூர்-கீழடி மண் மூடிய மகத்தான நாகரிகம், நோய் தீர்க்கும் சிவாலயங்கள், மருத்துவ பூங்கா, அதிகாலை இருட்டு, ஆலய வழிபாடு ஏன்? எதற்கு? எப்படி?, ஆயுளை அதிகரிக்கும் ஆரோக்கிய உணவுகள், பைபிள் மாந்தர்கள், கேள்வியும் நானே பதிலும் நானே, உலக நாயகன், அறிவோம் இஸ்லாம், சிகரம் தொடும் சிந்தனைகள், செய்தி தரும் சேதி, 23 தோஷங்கள் பரிகார ஆலயங்கள், அமானுஷ்ய ஆன்மிகம், நானும் சினிமாவும், வாருங்கள் சீரடி சாய்பாவை தரிசிப்போம், ரகசியமான ரகசியங்கள், புரட்டிப் போடும் புலன் விசாரணை, இறையருள் தரும் சாதனங்கள், சினிமாவின் மறுபக்கம் (பாகம்-2), திரை உலக அதிசயங்கள், நதி போல ஓடிக்கொண்டிரு, அருள்தரும் அதிசய சித்தர்கள், நீங்களும் தலை ஆகலாம், உலகம் பிறந்தது உனக்காக, இதயம் கவர்ந்த இலக்கிய காட்சிகள், விதியை மாற்றும் 40 சித்தர்கள் ஆகிய புத்தகங்கள் 'தினத்தந்தி' அரங்கில் பார்த்து வாங்கலாம். புத்தக திருவிழாவையொட்டி இங்கு வாங்கும் புத்தகங்களுக்கு விலையில் தள்ளுபடி உண்டு.



புத்தகத்திருவிழா தொடங்கியபோது எடுத்தபடம்.

# கோலாகலமாக தொடங்கியது ஈரோடு புத்தகத்திருவிழா

## சென்னை ஐகோர்ட்டு நீதிபதி இன்று மாலை பங்கேற்கிறார்

ஈரோடு, ஆக. 3-

ஈரோடு வ.உ.சி மைதான திடலில் மக்கள் சிந்தனை பேரவை சார்பில் நேற்று மாலை 15-ஆண்டு புத்தகத் திருவிழா தொடங்கியது.

விழாவில் மலேசிய நாட்டின் முன்னாள் மந்திரியும் எம்.பி.யுமான டத்தோஸ்ரீ எம்.சரவணன் கலந்து கொண்டு உலக தமிழர் படைப்பரங்கை திறந்து வைத்தார். சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் புத்தக அரங்கை திறந்து வைத்தார்.

மக்கள் சிந்தனை பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் விளக்கவுரையாற்றினார். விழாவுக்கு தேசிய நல விழிப்புணர்வு இயக்க தலைவர் எஸ்.கே.எம். மயிலானந்தன் தலைமை தாங்கினார்.

விழாவில் எழுத்தாளர் பொன்னீலன் பேசும்போது; "புத்தகம்" என்பது அறிவுக் களஞ்சியம். புத்தகங்கள் வாசிக்க வாசிக்க அறிவு சிறக்கும் சிந்தை மேம்படும். அனைத்து வரலாறுகளும் புத்தகங்களில் தான் இருக்கிறது" என்று கூறினார்.

மேலும் விழாவில் ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஐகோர்ட்டு நீதிபதி

விழாவையொட்டி தினமும் மாலை சிறப்பு பேச்சாளர்கள் பேசுகிறார்கள். இன்று (சனிக்கிழமை) நடக்கும் 2-வது நாள் விழாவில் மாலை 6 மணிக்கு "தமிழ்-அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஆர்.மகாதேவன் பேசுகிறார். மேலும் "வாசிக்கலாம் யோசிக்கலாம்" என்ற தலைப்பில் கே.அசோகன் பேசுகிறார்.

கோவை,
ஞாயிறு, ஆகஸ்ட் 4, 2019
தினசெய்தி

# புத்தகங்கள் மனிதகுலத்தை வளர வைக்கும் ஏணி

## எழுத்தாளர் பொன்னீலன் பேச்சு

ஈரோடு, ஆக.4-
மனிதகுலத்தை வாழவைக்கும், வளர வைக்கும் ஏணியாக புத்தகங்கள் உள்ளன என சாகித்யா அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் கூறினார்.

### புத்தகத் திருவிழா

மக்கள் சிந்தனைப் பேரவையின் 15 ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா நேற்று முன்தினம் தொடங்கியது. புத்தக அரங்கினைத் தொடங்கி வைத்து சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் பேசியதாவது:-

அறிவு, அறம், அழகு ஆகிய மூன்றும் இல்லாவிட்டால் மனித வாழ்க்கை இல்லை. இந்த 3 அம்சங்களும் புத்தகங்களில் இருந்துதான் கிடைக்கிறது. மிகச்சிறந்த சிந்தனையாளர்கள், தலைவர்கள், ஆன்மிகவாதிகளின் வாழ்வில் நடந்த அரிய சம்பவங்கள் புத்தகங்கள் மூலமே நமக்கு தெரியவருகிறது. ஆன்மிகவாதிகள் பற்றி நாம் புத்தகங்களின் மூலம் படித்தவற்றை, குழந்தைகளுக்குச் சொன்னால் தான் எது ஆன்மிகம் என்பதை அறிவார்கள். புத்தகம் இல்லையேன்றல் இவற்றை நாம் படித்து குழந்தைகளுக்குச் சொல்ல முடியாது.

### வாசிப்பதால் வளர்ச்சி

நாம் எத்தகைய அறவாழ்வு வாழவேண்டும் என்பதை, புத்தகங்களில் இருந்துதான் தெரிந்து கொள்ள முடியும். திருக்குறள் இல்லாவிட்டால் வாழ்வுக்கான அறத்தை நாம் அறிந்து இருக்க முடியாது. அன்பும் அருளும் புத்தகங்களில் அடங்கியுள்ளன. அவற்றை வாசிக்க, வாசிக்கத்தான் நாம் வளர்கிறோம். ஒவ்வொரு வீட்டிலும் கம்பராமாயணம், திருக்குறள் கட்டாயம் இருக்க வேண்டும். பாரதியின் பாடலை வாய்விட்டுப் பாடினால் மன அழுத்தங்கள் போய்விடும்.

இலக்கியத்தில் உள்ள அழகு, அறம், அன்பு மனித குலத்தின் வளர்ச்சிக்கு உதவும். புத்தகம் என்பது மனித குலத்தை வாழவைக்கும், வளர வைக்கும் ஏணி. இந்த ஏணியை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வீடுகளில் கட்டாயம் நூலகம் இருக்க வேண்டும். புத்தகங்களை குழந்தைகள் தொட்டுப்பார்க்க வேண்டும். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் புத்தகங்களை பரிசாகக் கொடுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார். இதனைத் தொடர்ந்து, உலகத்தமிழர் படைப்பரங்கினைத் தொடங்கி வைத்த மலேசிய எம்.பி. டத்தோஸ்ரீ எம்.சரவணன் பேசினார். புத்தகத் திருவிழா தொடக்க நிகழ்வில் தேசிய நல விழிப்புணர்வு இயக்கத் தலைவர் எஸ்.கே.எம்.மயிலானந்தன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலமுரளி, மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.




■ ஈரோடு வ.உ.சி பூங்காவில் புத்தக திருவிழாவை தொடங்கி வைத்து எழுத்தாளர் பொன்னீலன் பேசிய போது எடுத்தபடம்.

தினகரன் மாவட்டம் • கோவை 3.8.2019

# ஈரோட்டில் புத்தக திருவிழா



▶ மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோடு வஉசி பூங்கா மைதானத்தில் புத்தகக் கண்காட்சி நேற்று துவங்கியது. இதை மலேசியா முன்னாள் அமைச்சர் டத்தோ சரவணன் பார்வையிட்டார். அருகில், எழுத்தாளர் பொன்னீலன், மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் உள்ளனர்.

ஈரோடு, ஆக.3: 15வது புத்தக திருவிழா ஈரோடு வ உ சி மைதானத்தில் நேற்று துவங்கியது. விழாவிற்கு தேசிய நல விழிப் புணர்வு இயக்க தலைவரும், தொழிலதிபருமான மயிலானந்தம் தலைமை தாங்கினார்.

மக்கள் சிந்தனை பேரவை மாநில தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அறிமுக உரை யாற்றினார். முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி வாழ்த்துரை வழங்கினார். உலகத்தமிழர் படைப்பரங்கினை மலேசியாநாட்டின் முன்னாள் அமைச்சர் டத்தோ சரவணன் திறந்து வைத்தார். புத்தக அரங்கினை அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க தலைவர் பொன்னீலன் திறந்து வைத்தார். தொடர்ந்து 15ம் ஆண்டாக நடந்து வரும் இந்த புத்தகத் திருவிழாவில் மொத்தம் 230 அரங்குகள் இடம்பெற்றுள்ளது. வரும் 13ம் தேதி வரை 10 நாட்களுக்கு புத்தகத்திருவிழா தினமும் காலை 11 மணி முதல் இரவு 9.30 மணி வரை நடைபெறும்.

## ஸ்டால் 222ல் சூரியன் பதிப்பகம்

ஈரோடு புத்தக திருவிழாவில் சூரியன் பதிப்பகம் ஸ்டால் எண் 222ல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்டாலில் சூரியன் பதிப்பகத்தில் இருந்து வெளிவரும் அனைத்து புத்தகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. கண்காட்சி அரங்கு ஸ்டாலில் வாங்கப்படும் புத்தகங்களுக்கு 10 சதவீத சிறப்பு தள்ளுபடியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சன் குழுமத்தில் இருந்து வெளியாகும் நாளிதழ்களான தினகரன், தமிழ்முரசு, குங்குமம், டாக்டர், தோழி ஆகியவற்றிற்கான ஆண்டு சந்தா மெகா சலுகையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'புத்தகத்தில் ருசி கண்டவர்கள் பாக்கியசாலிகள்'

## புத்தக திருவிழாவில் எழுத்தாளர் பொன்னீலன் பேச்சு



■ ஈரோடு, வ.உ.சி., பூங்கா மைதானத்தில், புத்தக திருவிழா அரங்கை, எழுத்தாளர் பொன்னீலன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

ஈரோடு, ஆக. 3-

'புத்தகத்தில் ருசி கண்டவர்கள் பாக்கியசாலிகள்,'' என, ஈரோடு புத்தக திருவிழா அரங்குகளை திறந்து வைத்து, எழுத்தாளர் பொன்னீலன் பேசினார்.

ஈரோடு வ.உ.சி., பூங்கா மைதானத்தில், நேற்று மாலை, புத்தக திருவிழா துவங்கியது. தேசிய நல விழிப்புணர்வு இயக்க தலைவர் மயிலானந்தன் தலைமை வகித்தார். மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் வரவேற்றார். அரங்குகளை திறந்து வைத்து, எழுத்தாளர் பொன்னீலன் பேசியதாவது:

சமுதாயத்தின் உயர்வு, புத்தகத்தில்தான் உள்ளது. புத்தகங்களை தினமும் படிக்க வேண்டும். புத்தகத்தின் ருசி கண்டவர்கள் பாக்கியசாலிகள். உலகில் சமாதானம் நிலவ, புத்தகங்கள் கைகொடுத்துள்ளன.

ஜீவாவின் சுதந்திர போராட்ட ஈடுபாட்டையும், குன்றக்குடி அடிகளாரின் ஒற்றுமைக்கான செயல்பாட்டையும், அவருடன் வாழ்ந்தவர்கள் தவிர மற்றவர்கள் அறிய, புத்தகங்கள் தேவைப்படுகிறது. திருக்குறளை தெரிந்து படித்தால், வாழ்க்கைக்கான அனைத்தும் புரியும். புத்தகங்களை வாசிக்க, வாசிக்க நாம் வளர்கிறோம். ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயமாக சில நூல்களை கொண்ட நூலகம் தேவை. குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் புத்தகங்களையே பரிசாக, அன்பு பொருளாக கொடுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

காலைக்கதிர்
மாணவர் பதிப்பு
தினமும்
உங்கள் பள்ளிகளில்...



# புத்தகங்கள் மனிதகுலத்தை வளர வைக்கும் ஏணி

## ● ஈரோடு புத்தகத் திருவிழாவில் எழுத்தாளர் பொன்னீலன் பேச்சு

■ ஈரோடு

மனித குலத்தை வாழவைக்கும், வளர வைக்கும் ஏணியாக புத்தகங்கள் உள்ளன என சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவையின் 15-ம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா வ.உ.சி. பூங்காவில் நேற்று மாலை தொடங்கியது. புத்தக அரங்கினை சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் திறந்து வைத்து பேசியதாவது:

அறிவு, அறம், அழகு ஆகிய மூன்றும் இல்லாவிட்டால் மனித வாழ்க்கை இல்லை. இந்த மூன்று அம்சங்களும் புத்தகங்களில் இருந்துதான் கிடைக்கிறது. மிகச்சிறந்த சிந்தனையாளர்கள், தலைவர்கள், ஆன்மிகவாதிகளின் வாழ்வில் நடந்த அரிய சம்பவங்கள் புத்தகங்கள் மூலமே நமக்கு தெரியவருகிறது. ஆன்மிகவாதிகள் பற்றி நாம் புத்தகங்களின் மூலம் படித்தவற்றை, குழந்தைகளுக்குச் சொன்னால் தான் எது ஆன்மிகம் என்பதை அறிவார்கள்.



▲ மக்கள் சிந்தனைப் பேரவையின் 15-ம் ஆண்டு புத்தகத் திருவிழா, ஈரோடு வ.உசி பூங்கா மைதானத்தில் நேற்று தொடங்கியது. சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் புத்தகத் திருவிழாவைத் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ எம்.சரவணன்,தேசிய நல விழிப்புணர்வு இயக்க தலைவர் எஸ்கேஎம்,மயிலானந்தன், மக்கள் சிந்தனைப் பேரவை மாநிலத்தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்பட பலர்.

மனித குலம் அன்பாக, அழகாக, நலமாக இருக்க வேண்டும் என உலக வரலாறு சொல்கிறது. நாம் எத்தகைய அறவாழ்வு வாழவேண்டும் என்பதை, புத்தகங்களில் இருந்துதான் தெரிந்து கொள்ள முடியும். திருக்குறள் இல்லாவிட்டால் வாழ்வுக்கான அறத்தை நாம் அறிந்திருக்க முடியாது. அன்பும், அருளும் புத்தகங்களில் அடங்கியுள்ளன. அவற்றை வாசிக்க, வாசிக்கத்தான் நாம் வளர்கிறோம்.

ஒவ்வொரு வீட்டிலும் கம்பராமாயணம், திருக்குறள் கட்டாயம் இருக்க வேண்டும். அழகும், அறமும் கம்பராமாயணப் பாடல்களில் முழுக்க நிரம்பியுள்ளன. பாரதியின் பாடலை வாய்விட்டுப் பாடினால் மன அழுத்தங்கள் போய்விடும். ஐக்கியநாடுகள் சபையில்நடந்தகூட்டத்தில்முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி பேசும்போது, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற புகழ்பெற்ற தமிழ் வாசகத்தை குறிப்பிட்டுப் பேசியுள்ளார். முதியோர்களை இல்லங்களுக்கு அனுப்பி விடுவதால், கிராமத்தில் உள்ள பழைய கதைகளை கேட்கும் வாய்ப்பை குழந்தைகள் இழந்து விட்டனர்.

இலக்கியத்தில் உள்ள அழகு, அறம், அன்பு மனித குலத்தின் வளர்ச்சிக்கு உதவும். புத்தகம் என்பது மனித குலத்தை வாழவைக்கும், வளர வைக்கும் ஏணி. இந்த ஏணியை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வீடுகளில் கட்டாயம் நூலகம் இருக்க வேண்டும். புத்தகங்களை குழந்தைகள் தொட்டுப்பார்க்க வேண்டும். புத்தகம் இல்லாத வீடு பாழ். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் புத்தகங்களை பரிசாகக் கொடுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, உலகத்தமிழர் படைப்பரங்கினைத் தொடங்கி வைத்து மலேசிய எம்பி டத்தோஸ்ரீ எம். சரவணன் பேசினார். புத்தகத் திருவிழா தொடக்க நிகழ்வில் தேசிய நல விழிப்புணர்வு இயக்கத் தலைவர் எஸ்கேஎம் மயிலானந்தன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி, மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஒவ்வொரு வீட்டிலும் கம்ப ராமாயணமும், திருக்குறளும் இருக்க வேண்டும்

**பொன்னீலன்**

ஈரோடு, ஆக. 2: ஒவ்வொரு வீட்டிலும் கம்ப ராமாயணமும், திருக்குறளும் கட்டாயம் இருக்க வேண்டும் என்றார் சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன்.

ஈரோடு, வஉசி மைதானத்தில், 15வது புத்தகத் திருவிழா வெள்ளிக்கிழமை தொடங்கியது. வரும் 13 ஆம் தேதி வரை நடைபெறும் புத்தகத் திருவிழாவில் 230 அரங்குகள் அமைக்கப்பட்டு, லட்சக்கணக்கான புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.



ஈரோடு புத்தகத் திருவிழாவில் உலகத் தமிழர் படைப்பரங்கைத் திறந்துவைத்துப் பார்வையிட்ட, மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ எம்.சரவணன், எழுத்தாளர் பொன்னீலன், தேசிய நல விழிப்புணர்வு இயக்கத்தின் தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன், மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர்.

புத்தகக் கண்காட்சி தொடக்க விழாவுக்கு தேசிய நல விழிப்புணர்வு இயக்கத்தின் தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன் தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுக உரையாற்றினார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி வாழ்த்திப் பேசினார்.

புத்தக அரங்கினைத் திறந்து வைத்து சாகித்திய அகாதெமி விருதுபெற்ற எழுத்தாளர் பொன்னீலன் பேசியதாவது:

அறிவு, அறம், அழகு ஆகிய மூன்றும் இல்லாவிட்டால் மனித வாழ்க்கை இல்லை. இந்த மூன்று அம்சங்களும் புத்தகங்களில் கிடைக்கின்றன. மிகச் சிறந்த சிந்தனையாளர்கள், தலைவர்கள், ஆன்மிகவாதிகளின் வாழ்வில் நடந்த அரிய நிகழ்வுகள் புத்தகங்கள் மூலமாகவே நமக்குத் தெரிய வருகின்றன.

மனித குலம் அன்பாக, அழகாக, நலமாக இருக்க வேண்டும் என உலக வரலாறு சொல்கிறது. நாம் எத்தகைய அற வாழ்வு வாழவேண்டும் என்பதை புத்தகங்களில் இருந்துதான் தெரிந்து கொள்ள முடியும். திருக்குறள் இல்லாவிட்டால் வாழ்வுக்கான அறத்தை நாம் அறிந்திருக்க முடியாது.

ஒவ்வொரு வீட்டிலும் கம்ப ராமாயணமும், திருக்குறளும் கட்டாயம் இருக்க வேண்டும். அழகும், அறமும் கம்ப ராமாயணத்தில் நிரம்பியுள்ளன.

புத்தகம் என்பது மனித குலத்தை வாழ வைக்கும், வளர வைக்கும் ஏணி. இந்த ஏணியை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். புத்தகத்தின் ருசி கண்டவர்கள் பாக்கியசாலிகள்.

வீடுகளில் கட்டாயம் நூலகம் இருக்க வேண்டும். புத்தகம் இல்லாத வீடு பாழ். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் புத்தகங்களை பரிசாகக் கொடுங்கள் என்றார்.

**டத்தோஸ்ரீ எம்.சரவணன்:** புத்தகத் திருவிழாவில் உலகத் தமிழர் படைப்பரங்கினைத் திறந்து வைத்த மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் பேசியதாவது:

2,000 ஆண்டுகளாக தமிழ்ச் சொத்துகளை நாம் பாதுகாத்து வந்துள்ளோம். உயர்ந்த பொருள்களை இயற்கை பாதுகாக்கும்.

புத்தகத் திருவிழா சமுதாயத்தை மாற்றி அமைக்கும் விழா. நல்ல புத்தகம் நல்ல சிந்தனையை உருவாக்கும். நல்ல சிந்தனை வந்தால் நல்ல செயல்கள் பிறக்கும். நல்ல செயல் பிறந்தால் நல்ல தலைமுறை கிடைக்கும். நல்ல தலைமுறையில் இருந்து நல்ல தலைவர்கள் கிடைப்பார்கள். நல்ல தலைவர்களால் நாட்டில் சரித்திரம் படைக்கப்படும் என்றார்.

## புத்தகத் திருவிழாவில் இன்று

ஈரோடு புத்தகத் திருவிழாவின் 2 ஆம் நாள் நிகழ்வில் சனிக்கிழமை (ஆக. 3) மாலை 6 மணிக்கு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் பங்கேற்று, 'தமிழ்- அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் பேசுகிறார். விழாவில் மொழிபெயர்ப்பாளர் பேராசிரியர் நா.தர்மராஜனுக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது.

மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்

# ஈரோடு புத்தகத் திருவிழா 2019



## தாக்குதல்களைத் தாங்கி நிற்கும் மொழியாக தமிழ் விளங்குகிறது

**நீதிபதி ஆர்.மகாதேவன்**



சிந்தனை அரங்க நிகழ்வில் பேசுகிறார் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன்.

**ஈரோடு, ஆக.3:** எத்தகைய தாக்குதல்கள் வந்தாலும் அவற்றைத் தாங்கி நிற்கும் மொழியாகத் தமிழ் விளங்குவதாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் தெரிவித்தார்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் இரண்டாம்நாள் சிந்தனை அரங்க நிகழ்வு வஉசி பூங்கா மைதானத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இதில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் 'தமிழ்–அன்றும், இன்றும்' என்ற தலைப்பில் பேசியதாவது:

உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவுக்கு அறச்சிந்தனை வாய்ந்த படைப்புகளைத் தந்தது தமிழ் மொழி. காலம் இதுதான் என்று அறுதியிட்டு சொல்ல முடியாத அளவுக்குப் பழமை பொருந்திய மொழியாக, பண்பாடு, கலாசாரம் போன்ற அனைத்திலுமே ஈடு இணை இல்லாத மொழியாக தமிழ் விளங்குகிறது.

தொல்காப்பியத்தில் 'எம்மனோர் புலவர்' என்ற வரி வருகிறது. தொல்காப்பியமே 2,000 ஆண்டுகளுக்கு முன்பு படைக்கப்பட்ட படைப்பு என்று அறிந்தால் தொல்காப்பியத்திற்கு முன்பும் படைப்புகள் இந்த மண்ணிலே இருந்திருக்கின்றன என்பதை அந்த வரி சுட்டிக்காட்டுகிறது. உலகத்தில் வேறு எந்த மொழியிலும் இல்லாத சிறப்பு வாய்ந்த, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே படைக்கப்பட்ட தமிழ் படைப்புகள் பல்வேறு காரணங்களால் அழிந்துபோயின.

கிறிஸ்து பிறப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒப்பற்ற படைப்பாக திருக்குறள் இந்த மண்ணுக்கு வந்தது. உலகத்தில் இருக்கும் படைப்புகளில் முகமற்ற மாந்தர்களுக்கான படைப்பாக அறியப்பட்டது திருக்குறள் மட்டும்தான்.

1 ஆம் நூற்றாண்டில் கபிலரும், பரணரும் இந்த மண்ணின் மாண்பை வியக்க செய்கிறார்கள், கபிலர் சங்கத் தமிழ் பாடல்களில் பெரும்பான்மையான பாடல்களைத் தந்து இந்த மண்ணின் மாண்பினை உயர்த்தினார் என்பது மட்டுமல்ல, படைப்பாளி துணிவு கொண்டவனாக இருப்பான் என்பதை அப்போதே பதிவு செய்தவர்.

2 ஆம் நூற்றாண்டில் இருந்து 4 ஆம் நூற்றாண்டு வரை தமிழகம் இருண்ட காலத்தை சந்திக்கிறது. களப்பிரர்கள் ஆட்சிக் காலம் அது. அந்தக் காலத்தில் ஏராளமான படைப்புகள் உருவானாலும் அதனை பதிப்பிக்க முடியவில்லை. இதனால் 4 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் என்ற உருவம் ஒதுக்கிவைக்கப்பட்டது.

4 ஆம் நூற்றாண்டு இறுதியில் மிகச்சிறந்த காப்பியமான சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகளும், அவரைத் தொடர்ந்து சீத்தலை சாத்தனாரும் வருகின்றனர்.

5 ஆம் நூற்றாண்டில் திருமூலர் வந்ததாக சரித்திரம் கூறுகிறது. காரைக்கால் அம்மையார் தோன்றியதும் அந்த நூற்றாண்டுதான். 6 ஆம் நூற்றாண்டு திருமுறைகளைத் தந்த ஞானசம்பந்த மூர்த்தி, திருநாவுக்கரசு பெருமான் தோன்றிய காலம். சுந்தரமூர்த்தி நாயனார் தோன்றியது 7 ஆவது நூற்றாண்டு. 8 ஆவது நூற்றாண்டு பெண்ணிய சிந்தனைகளைத் தூண்டிய ஆண்டாள் தோன்றிய காலம். 9 ஆம் நூற்றாண்டு யாப்பெருங்கலம்என்றபடைப்புதமிழ் மொழியின் சிறப்பையும், தமிழ் மக்களின், வாழ்க்கை, கலாசாரம், மொழியின் தன்மை அனைத்தையும் பதிவு செய்து காட்டுகிறது. 10 ஆம் நூற்றாண்டு பட்டினத்தார் தோன்றிய காலம்.

10 ஆம் நூற்றாண்டு வரையிலான படைப்புகள் மூலம், உன்னை நீ உணர, இறை தன்மையுடன் மாற, சிந்தனையில் தெளிவு பெற தேவையான அனைத்தையும் வழங்கினர். 19, 20ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கில அறிஞர்கள் எழுதிக்காட்டியவை அனைத்தும், நாம் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பே தெளிவுபடுத்தியவை.

11ஆம் நூற்றாண்டில், ஒட்டக்கூத்தரும், பவனும், மேலும் பலரும் வைணவம் சார்ந்த பல பாடல்களை தந்தாலும், தமிழ், அதன் பண்பாடு, கலாசாரம், தொன்மையை பிரதிபலிப்பவையாகவே வழங்கினர்.

வால்மீகி ராமகாவியத்தின் படைப்பில் 478 பாடல்களில் சைவநெறியை எழுதினாலும், மீதமுள்ளவை வைணவத்தை விளக்குபவையாகவே உள்ளன. அதன் மூலம் வைணவம், சைவம் என்பது முக்கியமல்ல. அவை கூறும் அறங்களை மட்டுமே பார்க்க வேண்டும் என உணர்த்தினர்.

12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமான் 63 தனியடியார்களையும், ஒன்பது தொகையடியார்களையும் சேர்த்து 4,896 பாடல்கள் தந்து பெருமை சேர்த்தார். 13, 14 இல் அருணகிரிநாதர் அலங்கரித்தார். 15 இல் என்ரிகோ, எல்லீஸ் என்ற ஆங்கிலேயர் வந்தனர். அவர்கள் நோக்கம் வணிகம் என்றாலும், தமிழ் மொழி, அதன் சிறப்பு, அவற்றின் படைப்புகளைப் பதிப்பிக்கத் துவங்கினர். 16 ,17ஆம் நூற்றாண்டில், ஜி.யூ. போப், கால்டுவெல், எல்லீஸ் போன்றோர், தமிழ் கற்று, தமிழ் படைப்புகளை தமிழில் அச்சாக்கம் செய்தனர். தமிழ் இலக்கியத்தையும் அச்சாக்கத்துக்கு உள்ளாக்கினர். பெப்ரீசியஸ் எனும் அகராதியை தரங்கம்பாடியில் தமிழில் தொகுத்து அச்சில் தந்தனர்.

18ஆம் நூற்றாண்டில் இறுதியில் மாறுபட்ட சிந்தனை வருகிறது. இலக்கியம், வேறுபட்ட படைப்புகள் போன்ற சிந்தனைகள் எழுகின்றன. வேற்று நாடுகளின் படைப்புகளை நாமும் அறிய முடிந்தது. 19ஆம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய நிகண்டுகள், பழமையானவை அனைத்தும் பதிப்பிக்கப்பட்டன.

அப்போதுதான் புதுமைப்பித்தன் போன்ற சிறுகதை படைப்பாளிகள், வ.ராமசாமி, மவுனி, ந.பிச்சைமூர்த்தி, கு.அழகிரிசாமி என பல படைப்பாளிகள் உருவானார்கள். உரைநடையில் உ.வே. சாமிநாதய்யர் பல படைப்புகளை வழங்கினார்.

கடந்த 1950–க்குப்பின், அரசியல், மதபோதகர்கள், பல வீரியமிக்க தாக்கங்களால் பல படைப்பாளிகள் வெளிவரத் துவங்கினர். மாறி நிற்கும் மொழித்தன்மை, மாற்று மொழியின் பிரயோகம், மார்க்சிய சித்தாந்தம், பெண்ணியம் என பலவும் எழுந்து நிற்கிறது. எத்தகைய தாக்குதல்கள் வந்தாலும் அவற்றை தாங்கி நிற்கும் மொழியாக தமிழ் விளங்குவதை காண முடிகிறது. அதற்கு முக்கிய காரணம் உலகின் உன்னதமான ஒழுக்கத்தை எடுத்துக் காட்டும் மொழியாக, தமிழ் விளங்கியதே யாகும் என்றார்.

தொழிலதிபர் எம்.சின்னசாமி தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் விழா அறிமுக வுரை நிகழ்த்தினர்.

**புத்தகத் திருவிழாவில் இன்று**

புத்தகத் திருவிழாவின் 3ஆவது நாள் சிந்தனை அரங்க நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் 4) மாலை 6 மணிக்கு தொடங்குகிறது. நிகழ்வுக்கு நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன் தலைமை வகிக்கிறார். பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் 'கற்றதைச் சொல்கிறேன்' என்ற தலைப்பிலும், இந்து தமிழ் திசை ஆசிரியர் கே.அசோகன் 'வாசிக்கலாம் யோசிக்கலாம்' என்ற தலைப்பிலும் பேசுகின்றனர்.

## களைகட்டியது ஈரோடு புத்தகத் திருவிழா





ஈரோடு புத்தகத் திருவிழாவின் இரண்டாவது நாளான சனிக்கிழமை புத்தகங்களைத் தேடி கண்காட்சி அரங்கில் குவிந்த வாசகர்கள் கூட்டம்.

**ஈரோடு, ஆக.3:** ஈரோடு புத்தகத் திருவிழா 2 ஆவது நாளான சனிக்கிழமை புத்தகப் பிரியர்களின் வருகையால் களை கட்டியது.

ஈரோடு புத்தகத் திருவிழா கடந்த 2 ஆம் தேதி தொடங்கியது. ஈரோடு வஉசி பூங்கா மைதானத்தில் வரும் 13 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த திருவிழாவில் அறிவியல்,தொழில்நுட்பம்,மருத்துவம்,கலை இலக்கியம்,காமிக்ஸ், குழந்தைகளின் நூல்கள், சமையல் புத்தகங்கள், இயற்கை விவசாயம் சார்ந்த நூல்கள் என வாசகர்களின் தேவைக்கேற்ப அனைத்து வகையான புத்தகங்களும் கிடைக்கின்றன. மேலும் அனைத்து புத்தகங்களுக்கும் 10 சதவீத கழிவு விலையில் விற்கப்படுகின்றன.

கண்காட்சியில் திட்டமிட்டு நூல்களை வாங்கும் வாசகர்கள், அனைத்து அரங்குகளையும் பார்வையிட்டு நூல்களை வாங்கும் வாசகர்கள், பார்வையாளர்களாக வருபவர்கள் என எல்லாவரையும் ஒருசேரக் காண முடிகிறது. எழுத்தாளர்களை வாசகர்கள் நேரில் சந்தித்து உரையாடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

230 அரங்குகளில் பெரும்பாலானவற்றில் பல்வேறு புதிய எழுத்தாளர்களின் புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆன்லைனில் புத்தக விற்பனை வந்தபிறகு தேவைப்படும் புத்தகங்களை வாங்கும் வாசகர்கள் இருந்தாலும் புத்தகக் கண்காட்சிக்கு வரும் வாசகர்கள் எண்ணிக்கை இந்த ஆண்டும் குறையவில்லை.

**எண் 18 இல் தினமணி அரங்கு:**

புத்தகத் திருவிழாவில் பாரதி புத்தகாலயம், காலச்சுவடு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், விகடன் உள்ளிட்ட பல்வேறு பதிப்பகங்களின் சார்பில் 230 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் தினமணி நாளிதழும் அரங்கு அமைத்து(எண்18) தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் வெளியீடுகளை விற்பனைக்காக வைத்துள்ளது.

## உலகத் தமிழர்களின் படைப்புகளுக்கு தனி அரங்கம்



உலகத்தமிழர் படைப்பரங்கில் புத்தகங்களை பார்வையிட்ட புத்தகப் பிரியர்கள்.

**ஈரோடு, ஆக.3:** உலகத் தமிழர்களின் படைப்புகளை தமிழக மக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், அந்தப் படைப்புகளுக்கு புத்தகத் திருவிழாவில் தனி அரங்கு அமைக்கப்பட்டு கடந்த 11 ஆண்டுகளாக போற்றி வருகிறது மக்கள் சிந்தனைப் பேரவை.

மக்கள் சிந்தனைப் பேரவை நடத்தும் ஈரோடு புத்தகத் திருவிழா ஈரோடு வஉசி பூங்கா மைதானத்தில் கடந்த 2 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. புத்தகங்கள் விற்பனைக்கு 230 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், உலகத் தமிழர்களின் படைப்புகளுக்கு தனியே அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

தலைசிறந்த அயலகத் தமிழ் படைப்பாளர் ஒருவரின் பெயரில் அமைக்கப்படும் இந்த படைப்பரங்கம் நிகழாண்டில் இலங்கையைச் சேர்ந்த மறைந்த பேராசிரியர் கே. சிவத்தம்பி பெயரில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கில் மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் ஜெர்மனி போன்ற நாடுகளில் வாழ்ந்த, வாழ்கின்ற படைப்பாளர்களின் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளது. நிகழாண்டில் மட்டும் 4,000 தலைப்புகளில் புத்தகங்கள் உள்ளன. இந்த நாடுகளில் தமிழுக்கு தொண்டாற்றிய தமிழ் அறிஞர்களின் புகைப்படங்களும் அவர்களைப் பற்றிய விவரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் படைப்பரங்கில் அயலகப் படைப்பாளர்களை அழைத்து உரை நிகழ்த்தவும், வாசகர்கள் கலந்துரையாடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிகழாண்டில் இதுபோன்ற 4 நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

**உலகத் தமிழர்களின் இணைப்பு பாலமாக ஈரோடு புத்தகத் திருவிழா:** உலகத் தமிழர் படைப்பரங்கை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது என்பது குறித்த கேள்விக்கு மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் கூறியதாவது:



15 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை சென்றபோது மல்லிகை என்ற இதழை நடத்தி வந்த டொமினிக் ஜீவா என்பவரை சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் மல்லிகை இதழின் அட்டைப் படங்களில் தமிழ் எழுத்தாளர்கள், படைப்பாளர்களின் இடம் பெற்றுள்ளதை என்னிடம் காண்பித்தார். தமிழகத்தில் உள்ள இதழ்களில் அயலகத் தமிழர்கள் போற்றப்படுவதில்லை, அழைக்கப்படுவதில்லை என்று வேதனையுடன் தெரிவித்தார். அதன் வெளிப்பாடாகதான் 2008 இல் ஈரோடு புத்தகத் திருவிழாவில் உலகத் தமிழர் படைப்பரங்கை ஏற்படுத்தினோம். மேலும் இந்த அரங்கு அயலகத் தமிழ் படைப்பாளர்களை கொண்டு திறந்து வைக்கப்படுகிறது.

உலகத் தமிழர்களின் படைப்புகளை மக்கள் சிந்தனைப் பேரவை தனது முன் முயற்சியில் வாங்கிச் சேர்த்து விற்பனைக்கு வைத்துள்ளது. இங்கு விற்பனையாகும் புத்தகங்களுக்கான தொகையை படைப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், மீதமுள்ள புத்தகங்களையும் அனுப்பி வைத்து விடுகிறோம்.


20–க்கும் மேற்பட்ட வெளி நாடுகளில் இலக்கிய கூட்டங்களில் பேசியுள்ளேன். அப்போது எனது முக்கிய வேண்டுகோளாக உலகத் தமிழர் படைப்பரங்கிற்கு புத்தகங்களை அனுப்பிவைக்க வேண்டும் என்பதாக இருக்கிறது. தவிர வெளி நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர்களை நேரடியாக சந்தித்து இந்த வேண்டுகோளை தெரிவித்து வருகிறேன். அதன் பலனாகத்தான் நிகழாண்டில் 4,000–க்கும் மேற்பட்ட தலைப்புகளில் அயலகத் தமிழர்களின் படைப்புகள் உலகத் தமிழர் படைப்பரங்கில் இடம் பெற்றுள்ளது.

புத்தக திருவிழாவுக்கு சில ஆண்டுகளாக அயலகத் தமிழர்கள் வருகை அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டில் 200–க்கும் மேற்பட்டோர் வந்து, 3 நாள்கள் இங்கு தங்கி புத்தகங்களை வாங்கிச்சென்றுள்ளனர். இதுபோல் ஈரோடு மாவட்டத்தை பூர்வீகமாக கொண்டு வெளிநாட்டில் வாழும் தமிழர்களும் தம்முடைய தாய் நாட்டு பயணத்தை புத்தகத் திருவிழா நடைபெறும் காலகட்டத்தை ஒட்டி திட்டமிடுகின்றனர்.

ஈரோடு புத்தகத் திருவிழா உலகத் தமிழர்களையும், தமிழக தமிழர்களையும் இணைக்கும் பாலமாக செயல்படும் இலக்கை நோக்கி பயணிக்க முடிவு செய்துள்ளது என்றார் த.ஸ்டாலின் குணசேகரன்.

# தாய்மொழி என்பது நமது அடையாளம்

## புத்தகத் திருவிழாவில் ஐகோர்ட்டு நீதிபதி மகாதேவன் பேச்சு



விழாவில் ஐகோர்ட்டு நீதிபதி மகாதேவன் பேசிய காட்சி.

ஈரோடு, ஆக. 4-

மக்கள் சிந்தனைப் பேரவை நடத்தும் ஈரோடு புத்தகத் திருவிழா வ.உ.சி மைதானத்தில் நடந்து வருகிறது.

2 -வது நாளான நேற்று சென்னை ஐகோர்ட் நீதிபதி மகாதேவன் புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்டு புத்தக அரங்குகள் பார்வையிட்டார்.

மாலையில் நடந்த சிந்தனை அரங்க கூட்டத்திலும் அவர் பங்கேற்றார்.

கூட்டத்திற்கு அக்னி ஸ்டீல்ஸ் இயக்குனரும் ஒளிரும் ஈரோடு அமைப்பு தலைவருமான சின்னசாமி தலைமை தாங்கினார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் முன்னிலை வகித்தார். ஐகோர்ட்டு நீதிபதி மகாதேவன் 'தமிழ் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

அப்போது அவர் கூறும்போது, தாய்மொழி என்பது நமது அடையாளம் .மொழியை தொலைத்தவர்கள் அடையாளத்தை தொலைப்பார்கள். உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் சிறந்த மொழி தமிழ் மொழி. கபிலர் சங்க தமிழ் பாடல் தந்து தமிழை உயர்த்தியவர். "பக்தி என்பது பயம் அல்ல முற்போக்கு சிந்தனை எனக் கூறியவர் திருநாவுக்கரசர். கடந்த 1950 க்குப் பின் அரசியல், மத போதகர்கள், பலவீரியமிக்க தாக்கங்களால் பல படைப்பாளிகள் வெளிவரத் தொடங்கினர். தமிழ் படைப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்த துவங்கியது. பலமொழிகள் வந்தாலும் அவற்றைத் தாங்கி நிற்கும் மொழியாக தமிழ் விளங்குவதைக் காண முடிகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) 'கற்றதை சொல்கிறேன்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஞானசம்பந்தன், 'வாசிக்கலாம் யோசிக்கலாம்' என்ற தலைப்பில் அசோகன் ஆகியோர் பேசுகிறார்கள்.

# ‘உங்களை அடையாளம் காட்டுவது மொழி’

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பெருமிதம்

ஈரோடு, ஆக. 4–

‘‘உங்களை, உங்களுக்கே அடையாளம் காட்டுவது மொழியாகும்,’’ என, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் பேசினார்.

ஈரோட்டில் நடந்து வரும் புத்தக திருவிழாவில் நேற்று மாலை சொற்பொழிவு நிகழ்ச்சியில், ‘தமிழ் – அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் பேசியதாவது:

ஒவ்வொரு கால கட்டங்களிலும் தமிழ் மூலம், ஆன்மிகம், கலாசாரம், பண்பாட்டை பலரும் உயர்த்திப்பிடித்துள்ளனர்.

கபிலர் சங்க தமிழ் பாடல் தந்து, தமிழை உயர்த்தியவர். ‘பக்தி என்பது பயம் அல்ல’ என முற்போக்கு சிந்தனை என கூறியவர் திருநாவுக்கரசர். பாரியை மூவேந்தர்கள் சிறைபிடிக்க முற்பட்டபோது, ‘தமிழைக்கூறி கேட்டால், அவர் தன்னையே தருவார்; அதை விடுத்து அவரை சிறைபிடித்தல் இயலாதது’ என கபிலர் கூறியதில், மொழி மாண்பின் வெளிப்பாட்டை அறியலாம். ஒன்றாம் நூற்றாண்டில் கபிலரும், களப்பிரர் காலத்துக்குப்பின் இளங்கோவும், சீத்தலை சாத்தனாரும், 7 ம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனாரும், 8 ம் நூற்றாண்டில் ஆண்டாளும், 4,000 திவ்ய பிரபந்தம் தந்த ஆழ்வார்களும் தமிழை உணர செய்தவர்கள். பத்தாம் நூற்றாண்டு வரையிலான படைப்புகள் மூலம், உன்னை நீ உணர, இறை தன்மையுடன் மாற, சிந்தனையில் தெளிவு பெற தேவையான அனைத்தையும் வழங்கினர். 19, 20ம் நூற்றாண்டுகளில் ஆங்கில அறிஞர்கள் எழுதிக் காட்டியவை அனைத்தும், நாம், பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பே தெளிவுபடுத்தியவை.



ஈரோட்டில், புத்தக திருவிழாவில், ‘தமிழ் – அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மகாதேவன் பேசினார்.

கடந்த, 1950க்குப்பின், அரசியல், மதபோதகர்கள், பல வீரியமிக்க தாக்கங்களால் பல படைப்பாளிகள் வெளிவரத்துவங்கினர். இருந்தும், தமிழ் படைப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்த துவங்கியது. மாறி நிற்கும் மொழித்தன்மை, மாற்று மொழியின் பிரயோகம், மார்க்சிய சித்தாந்தம், பெண்ணியம் என பலவும் எழுந்து நிற்கிறது. இருந்தும், எந்த இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்தாலும், சீனா, பாரசிக கடலின் ஓரத்திலும், தமிழர்கள் வாணிபம் செய்ததற்கான பதிவுகள் கிடைப்பதுடன், அங்கும் தமிழின் பதிவுகள் நமது பழமையை வெளிக்காட்டுகின்றன.

எத்தகைய தாக்குதல்கள், பல மொழிகள் வந்தாலும், அவற்றை தாங்கி நிற்கும் மொழியாக தமிழ் விளங்குவதை காண முடிகிறது. அதற்கு முக்கிய காரணம், உலகின் உன்னதமான ஒழுக்கத்தை எடுத்து காட்டும் மொழியாக, தமிழ் விளங்கியதேயாகும். இனிவரும் படைப்புகளும், அதை உறுதிப்படுத்துவதாகவே அமையும். காலங்கள் கடந்து தமிழ் வாழும் படியான படைப்புகளே வர வேண்டும். உங்களை, உங்களுக்கே அடையாளம் காட்டுவது மொழி என்பதை உணர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

THE HINDU COIMBATORE
SUNDAY, AUGUST 4, 2019

# Erode Book Festival begins



Visitors at the Erode Book Festival being held at V.O.C. Park Grounds in Erode on Saturday. ▪ M.GOVARTHAN

STAFF REPORTER
ERODE

The 15th edition of the Erode Book Festival, organised by Makkal Sindhanai Peravai, began at V.O.C Park Grounds here on Saturday.

As many as 230 stalls put by over 150 publishers from across the country with over a lakh of books on various titles were part of the festival. Book lovers have a variety of choice on various topics at a discount offered by sellers at the stalls.

T. Stalin Gunasekaran, president of Makkal Sindhanai Peravai, said that on an average over 50,000 students and the public were expected to visit the exhibition in the coming days. Apart from the stalls, the other key attraction would be the speech by eminent personalities in the evening.

The exhibition was formally inaugurated on Friday by writer Ponneelan in the presence of S.K.M. Maeilanandhan, founder of National Welfare Awareness Movement and Chief Education Officer R. Balamurali. Books by *The Hindu* Group of Publications are kept in the stall number 27 and visitors can avail themselves of discount for the purchases.

The exhibition is held from 11 a.m. to 9.30 p.m. on all days and there is no entrance fee. The exhibition is open till August 12.



ஈரோட்டில் நடந்து வரும் புத்தகத்திருவிழாவில் தினத்தந்தி சார்பில் அமைக்கப்பட்டு உள்ள அரங்கில் பெண்கள் மற்றும் சிறுவர்-சிறுமிகள் ஆர்வமுடன் புத்தகங்களை தேர்வு செய்த காட்சி.

### ஈரோடு புத்தகத்திருவிழா

# 'அனைத்துமொழிகளிலும் சிறந்தது தமிழ்'

## ஐகோர்ட்டு நீதிபதி மகாதேவன் பேச்சு

ஈரோடு. ஆக.4-

அனைத்து மொழிகளிலும் சிறந்த மொழி தமிழ் என்று ஈரோடு புத்தகத்திருவிழாவில் ஐகோர்ட்டு நீதிபதி மகாதேவன் பேசினார்.

### ஐகோர்ட்டு நீதிபதி

மக்கள் சிந்தனை பேரவை நடத்தும் ஈரோடு புத்தக திருவிழா வ.உ.சி.பூங்கா மைதானத்தில் நடந்து வருகிறது. 2-வது நாளான நேற்று சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஆர்.மகாதேவன் புத்தக திருவிழாவில் கலந்து கொண்டு புத்தக அரங்குகளை பார்வையிட்டார். மாலையில் நடந்த சிந்தனை அரங்க கூட்டத்திலும் அவர் பங்கேற்றார்.

இந்த கூட்டத்துக்கு அக்னி ஸ்டீல்ஸ் இயக்குனரும், ஒளிரும் ஈரோடு அமைப்பு தலைவருமான எம்.சின்னசாமி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஆர்.மகாதேவன், 'தமிழ் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.



புத்தத்திருவிழாவில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் பேசிய போது எடுத்த படம்.

### சிறந்த மொழி

அப்போது அவர் கூறும் போது, "வரலாற்றுக்கு முந்தைய காலம் தொட்டு 21-ம் நூற்றாண்டு வரை தமிழ் வளர்த்த அறிஞர்கள், இலக்கியங்கள், காப்பியங்கள் குறித்து பேசி, தமிழ் மொழியின் பெருமையை எடுத்துக்கூறினார்.

தாய் மொழி என்பது நமது அடையாளம். மொழியை தொலைத்தவர்கள் அடையாளத்தை தொலைப்பார்கள். உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் ஆகச்சிறந்த மொழி தமிழ் மொழி. அந்த தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்ட நாம் பெருமிதம் கொள்வோம்" என்றார்.

நிகழ்ச்சியில் மக்கள் சிந்தனை பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இன்று (ஞாயிற்றுக்கிழமை) சிந்தனை அரங்கில் 'கற்றதை சொல்கிறேன்' என்ற தலைப்பில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன், 'வாசிக்கலாம் யோசிக்கலாம்' என்ற தலைப்பில் கே.அசோகன் ஆகியோர் பேசுகிறார்கள்.

## வாசகர்களை கவரும் தினத்தந்தி அரங்கு

ஈரோடு புத்தகத்திருவிழா கடந்த 2-ந் தேதி தொடங்கியது. இங்கு 230 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 171-வது அரங்கில் 'தினத்தந்தி' அரங்கு உள்ளது. இங்கு 'தினத்தந்தி' பதிப்பகத்தின் அனைத்து புத்தகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளன. இங்கு வைக்கப்பட்டு உள்ள புத்தகங்கள் அனைத்து தரப்பினரையும் கவர்வதாக உள்ளன.

சீரடி சாய்பாபாவை தரிசிப்போம், பழகிப்பார்ப்போம் வாருங்கள், உலகம் பிறந்தது உனக்காக, ரகசியமான ரகசியங்கள், நீங்களும் தலைவர் ஆகலாம், ஆயிரம் ஆண்டு அதிசயங்கள், சிகரம் தொடும் சிந்தனைகள், சிறகை விரிக்கும் மங்கள்யான், புரட்டிப்போடும் புலன் விசாரணை, செய்தி தரும் சேதி, வாழ்வை வளமாக்கும் பூஜைவிரத முறைகள், நலம் தரும் மூலிகைகள், ஆதிச்சநல்லூர் கீழடி மண் மூடிய மகத்தான நாகரிகம், கேள்வியும் நானே பதிலும் நானே, மகாசக்தி மனிதர்கள், இதயம் தொட்ட பழமொழிகள், நோய் தீர்க்கும் சிவாலயங்கள், உடலும் உணவும் உள்ளிட்ட புத்தகங்கள் வாசகர்களை பெரிதும் கவர்கின்றன. மனதை வாட்டும் கவலை, தோல்வி, துக்கம், மரண பயம் ஆகியவற்றில் இருந்து வாசகர்களை மீட்டு மகிழ்ச்சியுடன் வாழவைக்கும் ரகசியங்களை கற்றுத்தரும் வகையில் புதிதாக வெளியிடப்பட்டு உள்ள 'இதுவும் கடந்து போகும்' என்ற புத்தகத்தை வாசகர்கள் அதிக அளவில் விரும்பி வாங்கிச்செல்கிறார்கள். புத்தக அரங்கு இன்று (ஞாயிற்றுக்கிழமை) பகல் 11 மணி முதல் திறக்கப்படுகிறது.

# கொங்கே முழங்கு..!

நம்மூரு சேதி நாலூருக்கும் கேக்கட்டும்...

# புத்தகத் திருவிழாவும், மண் உண்டியலும்...

## ஈரோட்டில் மனதை உருக்கிய தொழிலாளி!



ஆர்.கிருஷ்ணகுமார்

**அது ஒரு இனிய இரவுப் பொழுது. ஈரோட்டில் புத்தகத் திருவிழா நடைபெறும் வ.உ.சி. பூங்கா மைதானத்தில் ஒரு ஏழைத் தொழிலாளியும், அவரது குடும்பமும் கையில் ஒரு மண் உண்டியலுடன் நின்றுகொண்டிருந்தனர். புத்தகத் திருவிழாவை நடத்திக் கொண்டிருக்கும் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் ஸ்டாலின்குணசேகரன், அந்தக் குடும்பத்தாரிடம் பேசியபோது, உண்டியலைக் கொடுத்து, "பேரவைக்கு எங்களாலான சிறு உதவி" என்றனர். நெகிழ்ந்த அவர், அங்கிருந்த பேரவை பொறுப்பாளர்களிடம் கொடுத்து, உண்டியல் பணத்தை எண்ணி, அவர்களுக்கு ரசீது கொடுக்குமாறு தெரிவித்தார். ஓராண்டு முழுவதும் அந்தக் குடும்பத்தினர் உண்டியலில் சேமித்துக் கொடுத்த தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.25,976.**

செல்போன், இன்டர்நெட், ஃபேஸ்புக், வாட்ஸ்–அப் உள்ளிட்டவை புத்தக வாசிப்பை நசுக்கிக் கொண்டிருக்கின்றன என்றெல்லாம் அங்கலாய்க்கும் சூழலில், ஈரோட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புத்தகத் திருவிழாவில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் குவிந்த வண்ணம் இருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட்டு, தங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி வருகின்றனர்.

புத்தக வாசிப்பை நேசிக்க மட்டுமின்றி, மக்களை சுவாசிக்கவும் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் 15–வது ஆண்டாக வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது புத்தகத் திருவிழா. 2005–ல் 75 அரங்குகளுடன் தொடங்கிய புத்தகத் திருவிழா, தற்போது 230 அரங்குகளுடன் விரிவடைந்துள்ளது.

உள்நாடு மட்டுமின்றி, வெளிநாட்டுப் பதிப்பகங்களும் இங்கு அரங்குகளை அமைத்துள்ளன. பிரம்மாண்டமாக நடைபெறும் புத்தகத் திருவிழாவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு நாளும் மாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில், தமிழகத்தின் பெரும்பாலான சொற்பொழிவாளர்கள் பங்கேற்றுள்ளனர். அப்துல்கலாம் உட்பட தலைவர்கள், அறிஞர்கள், கலைத் துறையினர், சிந்தனையாளர்கள், விஞ்ஞானிகள், இதழாளர்கள் என வெவ்வேறு தரப்பினரும் புத்தகத் திருவிழா மேடையில் பேசியுள்ளனர். உலகம் முழுவதும் உள்ள தமிழ்ப் படைப்பாளிகளின் புத்தகங்களுக்காக 'உலகத் தமிழர் படைப்பரங்கம்' என்ற தனி அரங்கு இங்கு இடம்பெற்றுள்ளது.

ஒவ்வொரு நாளும் புத்தகத் திருவிழாவுக்கு வரும் சொற்பொழிவாளர்களையும், விருந்தினர்களையும் வரவேற்பது முதல், கிளம்பும்போது வழியனுப்புவது வரை பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்த ஸ்டாலின் குணசேகரனிடம் பேசினோம்.

### ஜெர்மனியிலிருந்து வந்த தமிழர்!

"மக்களை வாசிக்கச் செய்வதே புத்தகத் திருவிழாவின் நோக்கம். இதன் வீச்சு தமிழகத்தைத் தாண்டி, வெளிநாடுகளையும் சென்றடைந்துள்ளது. இலங்கைத் தமிழரான ஒரு படைப்பாளி, பல ஆண்டுகளுக்கு முன்பே ஜெர்மனியில் செட்டிலாகிவிட்டார். புத்தகத் திருவிழா நடைபெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பே எங்களை தொடர்புகொண்டு, 'ஈரோடு புத்தகத் திருவிழாவைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு வாரத்துக்கு ஈரோட்டில் தங்கி, புத்தகத் திருவிழாவில் பங்கேற்க விரும்புகிறேன்' என்று கூறினார். சொன்னதுபோலவே, புத்தகத் திருவிழா தொடங்குவதற்கு ஒரு நாளைக்கு முன்பே ஜெர்மனியில் இருந்து ஈரோட்டுக்கு வந்துவிட்டார்.

அதேபோல, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவர், மூன்றாவது ஆண்டாக புத்தகத் திருவிழாவில் பங்கேற்க வந்துள்ளார். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, ஐக்கிய அரபு நாடுகள் என பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் நடப்பாண்டு புத்தகத் திருவிழாவைக் காண வந்துள்ளனர்.

ஒவ்வொரு நாளும் மாலையில் நடைபெறும் 'சிந்தனை அரங்கம்' நிகழ்ச்சி கல்வியாளர்களையும், தொழிலதிபர்களையும், அதிகாரிகளையும், சிந்தனையாளர்களையும் மட்டுமின்றி, சாதாரண, ஏழை மக்களையும் பெரிதும் ஈர்த்து வருகிறது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானோர் சொற்பொழிவுகளைக் காண வருகின்றனர். பல்வேறு வெளி மாவட்டங்களில் இருந்து ஈரோட்டுக்கு வந்து தங்கி, சொற்பொழிவுகளைக் கேட்கின்றனர்.

### நெகிழச் செய்த கிராமத்துப் பெண்!

புத்தகத் திருவிழா லாபம் ஈட்டுவதற்காக நடத்தப்படவில்லை. உண்மையில், ஒவ்வோர் ஆண்டும் பல லட்சம் நஷ்டத்தில்தான் நடக்கிறது. ஆனாலும், எந்த மேடையிலும் மக்களிடம் நாங்கள் நன்கொடை கேட்கவில்லை. யாரும் மனமுவந்து மக்கள் சிந்தனைப் பேரவைக்கு நன்கொடை கொடுத்தால் மட்டும் ஏற்றுக்கொள்கிறோம். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன் புத்தகத் திருவிழாவில் ஒரு சொற்பொழிவாளர் எங்கள் நிலையை சுட்டிக் காட்டினார். புத்தகத் திருவிழாவில் குமாரபாளையம் அருகேயுள்ள ஒரு கிராமத்திலிருந்து வரும் ஒரு பெண் கலந்துகொண்டு, தினமும் சொற்பொழிவுகளைக் கேட்டுள்ளார். ஐந்தாம் வகுப்பு மட்டுமே படித்துள்ள அவர் இதைக்கேட்டுவிட்டு, ஏதாவது செய்ய வேண்டுமெனக் கருதியுள்ளார். பின்னர் ஒருநாள் மக்கள் சிந்தனைப் பேரவை அலுவலகம் வந்த அவர், ரூ.1 லட்சம் அளித்தார். 'ஐயா, எனது கணவர் விபத்தில் இறந்துவிட்டார். நீதிமன்ற உத்தரவு மூலம் எனக்கு கொஞ்சம் இழப்பீடு கிடைத்தது. அதில் ரூ.1 லட்சத்தை மக்கள் சிந்தனைப் பேரவைக்கு அளிக்கிறேன். கணவர் இறந்ததில் மனமுடைந்திருந்த எனக்கு, புத்தகத் திருவிழா சொற்பொழிவுகளே புரிதலை ஏற்படுத்தின. நான் மனமுவந்து தரும் இந்த தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்றார் கலங்கிய கண்களுடன்.

இதேபோல, ஒரு சாதாரண தொழிலாளி, தனது குடும்பத்தாருடன் மண் உண்டியலில் பணம் சேர்த்து, ஆண்டுதோறும் புத்தகத் திருவிழாவில் கொண்டுவந்து கொடுப்பார். நடப்பாண்டு உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். மகாதேவன் பங்கேற்ற நிகழ்ச்சிக்கு வந்த அவர், வழக்கம்போல உண்டியலைக் கொடுத்தார். அதில் ரூ.25,976 இருந்தது. இப்படி, மிகச் சாதாரண மக்கள் உள்ளிட்டோரின் பங்களிப்புடன்தான் புத்தகத் திருவிழா நடத்தப்படுகிறது.



### நூல் ஆர்வலராகும் மாணவர்கள்!

பள்ளி மாணவ, மாணவிகளிடம் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்க மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். ரூ.250–க்கு மேல் புத்தகங்களை வாங்கும் மாணவர்களுக்கு 'நூல் ஆர்வலர்' என்ற சான்றிதழ் வழங்குகிறோம். கடந்த ஆண்டு மட்டும் 60 ஆயிரம் மாணவர்களுக்கு இச்சான்றிதழ் வழங்கியுள்ளோம்.

அதேபோல, 'புத்தக சேமிப்பு உண்டியல்' என்ற திட்டத்தில், ரூ.12 மதிப்பிலான உண்டியலை பள்ளி மாணவர்களுக்கு ரூ.5–க்கு கொடுக்கிறோம். ஆண்டுமுழுவதும் அந்த உண்டியலில் சேர்க்கும் பணத்தை இங்கு கொண்டுவந்து, அதற்கு மாணவர்கள் புத்தகங்கள் வாங்கிச் செல்கின்றனர். புத்தக விற்பனையாளர்கள், பதிப்பாளர்களிடம் பேசி, மாணவர்களுக்கு கூடுதலாக தள்ளுபடி வழங்குகிறோம். புத்தக வாசிப்புடன், சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கம்.

### புத்தக அலமாரித் திட்டம்!

அதேபோல, தான் படித்த பள்ளி அல்லது தனக்குப் பிடித்த பள்ளிக்கு ஏதாவது செய்ய விரும்புவோருக்காக 'புத்தக அலமாரித் திட்டத்தை' செயல்படுத்துகிறோம். பள்ளிக்கு ரூ.10 ஆயிரம், ரூ.15 ஆயிரம் மதிப்பில் புத்தக அலமாரியும், அந்தப் பள்ளி ஆசிரியர்களைக் கொண்டே தேர்வு செய்யப்பட்ட புத்தகங்களையும், நன்கொடையாளர் கையாலேயே புத்தகத் திருவிழாவில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களிடம் ஒப்படைக்கிறோம். இந்த நூலகத் திட்டம், வேறெந்த புத்தகத் திருவிழாவிலும் செயல்படுத்தப்படுவதில்லை. இதுவரை சுமார் 200 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோல, பெரிய தொழில் நிறுவனங்களை அணுகி, நிர்வாகம் சார்பில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.100 வழங்குமாறு கேட்டுப்பெற்று, அந்த தொகைக்கு புத்தகங்களை வாங்கித் தருகிறோம். இதற்கு 'தொழிலாளர் புத்தகத் திட்டம்' என்று பெயர்.

புத்தகத் திருவிழாவில் 'படைப்பாளர் மேடை' என்ற நிகழ்ச்சியில், பிரபல எழுத்தாளர்களை, வாசகர்களுடன் கலந்துரையாடச் செய்கிறோம். சென்னைக்கு அடுத்தபடியாக, புத்தகத் திருவிழாவுக்காக புதிய புத்தகங்களை அச்சிடுவதும், வெளியிடுவதும் ஈரோடு புத்தகத் திருவிழாவில்தான்.

இப்படி மக்களிடம் புத்தகங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், வாசிப்புப் பழக்கத்தை மேம்படச் செய்யவும் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொள்கிறோம். இந்த திட்டங்களின் ஒட்டுமொத்த நோக்கமே வாசிப்பை மக்கள் இயக்கமாக மாற்றுவதாகும்" என்கிறார் நம்பிக்கையுடன் ஸ்டாலின் குணசேகரன்.

## மக்கள் சிந்தனைப் பேரவை வழங்கும் ஈரோடு புத்தகத் திருவிழா 2019



# கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும்

**பேராசிரியர் கு.ஞானசம்பந்தன்**





ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்கில் பேசுகிறார் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன். உடன், மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன். (வலது) நிகழ்ச்சியில் பங்கேற்ற பார்வையாளர்கள்..

**ஈரோடு, ஆக. 4:** கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும் என ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவையின் 15 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவை யொட்டி 3ஆம் நாள் சிந்தனை அரங்க நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன் பேசும்போது, 'ஆளுமைத் தன்மையும், தன்னம்பிக்கையும் இளைஞர்களுக்குத் தேவை. அவற்றை புத்தகங்களால் மட்டுமே அளிக்க முடியும்' என்றார்.

இதைத் தொடர்ந்து 'கற்றதைச் சொல்கிறேன்' என்ற தலைப்பில், பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசியதாவது:

புத்தகங்களைப் படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாரும் அளிக்க முடியாது. நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்குப் பகிர்வது என்பது தமிழனின் குணம். நாட்டில் உள்ள பள்ளங்களில் எல்லாம் நீரை நிரப்பி, அணை கட்டினால் உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என ஒரு மன்னனுக்கு புறநானூற்றுப் பாடல் சொல்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் நீர் மேலாண்மை குறித்து சொல்லப்பட்டுள்ளது. 'உடலுக்கு சாப்பாடு போடுகிறாயே, உன் உயிருக்கு என்ன கொடுக்கிறாய்' என்று கேட்ட திருவள்ளுவர் உயிருக்கு கொடை, வீரம், நற்செயல் மூலம் ஊதியம் கொடுப்பது சிறப்பு என்கிறார்.

நமக்கு சொற்களைக் கையாளத் தெரிய வேண்டும். கற்றல், படிப்பது இரண்டும் வேறுபட்டவை. கற்கும்போது இருக்கும் பெருமையில் இவ்விரண்டும் மாறுபடுகின்றன. நாம் பெருமையோடு இருந்தால் நம் பரம்பரை போற்றப்படும். நாம் இழிவாக இருந்தால் தூற்றப்படும். 7ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியக் காலமாக இருந்தது. பக்தி இலக்கியங்களில் பக்தி மட்டும் சொல்லப்பட்டு இருப்பதாக நினைத்து பலர் அதனைப் படிக்காமல் விட்டு விடுகின்றனர். ஆனால் பக்தியைத் தாண்டி பல விஷயங்கள் பக்தி இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளன. பலவற்றையும் கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும்.

சங்கப் பாடல்களில் குழல், யாழ், முழவு என மூன்று இசை வாத்தியங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த வாத்தியப் பெயர்களில் சிறப்பு ழகரம் இருப்பதால், நாம்தான் அதனைக் கண்டுபிடித்தோம் என உறுதியாகச் சொல்ல முடிகிறது. எத்தனை காலமானாலும் தமிழ் இனிமையாகவே இருந்து வருகிறது. நாம் படிப்பது எதற்காக என்றால் அதன்படி வாழ்வதற்கே. வாழப் பழக்கப் படிக்க வேண்டும்.

வாழ்க்கையும், வார்த்தையும் ஒன்றாக இருந்தால் அவர்களை உலகம் ஒருபோதும் மறக்காது. தனக்குள் இருக்கும் மிருகத்தை வெளியில் விடாமல் இருப்பதற்காகப் படிக்க வேண்டும். வாசித்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்றார்.

முன்னதாக 'வாசிக்கலாம் யோசிக்கலாம்' என்ற தலைப்பில் இந்து தமிழ் திசை ஆசிரியர் கே.அசோகன் பேசினார்.

**மாணவர்களுக்கு மரக்கன்றுகள்:** மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார். அப்போது அவர் புத்தகத் திருவிழாவிற்கு வரும் மாணவர்களுக்கு இறுதி நாளில் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான படிவத்தை அரங்கின் நுழைவாயிலில் உள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்து அளிக்க வேண்டும். மாணவர்கள் கேட்கும் மரக்கன்றுகளின் எண்ணிக்கை அளவுக்கு வில்லைகள் அளிக்கப்படும். புத்தகத் திருவிழாவின் இறுதி நாளில் வில்லைகளைப் பெற்றுக் கொண்டு மரக்கன்றுகள் அளிக்கப்படும். இதற்கான படிவம் திங்கள்கிழமை முதல் வழங்கப்படும் என்றார்.

### புத்தகத் திருவிழாவில் இன்று

புத்தகத் திருவிழாவின் நான்காம் நாள் மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வு திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. இதில், 'சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா?' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறுகிறது. சாலமன் பாப்பையா நடுவர் பொறுப்பேற்கும் இந்தப் பட்டிமன்றத்தில், 'பேச்சுக்கே' என்ற அணியில் பேராசிரியர் த.ராஜாராம், எம்.சண்முகம், எஸ்.ராஜா ஆகியோரும், 'எழுத்துக்கே' என்ற அணியில் மரபின் மைந்தன் ம.முத்தையா, கவிதா ஜவகர், பாரதி பாஸ்கர் ஆகியோரும் பேசுகின்றனர்.

# ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் புத்தகங்கள்!

**ஈரோடு, ஆக. 4:** ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் புத்தகங்கள் பலவும் உள்ளன என்கிறார் பேராசிரியர் நா.மணி.

கற்றல், கற்பித்தலில் சிறந்த அகல்விளக்கு புத்தகங்களே. ஓரேயொரு புத்தகம் ஓராயிரம் விஷயங்களை ஓர் ஆசிரியர் நெஞ்சில் பதித்துவிடும். மிகச் சிறந்த ஆசிரியராகப் புரட்டிப் போட்டுவிடும். இப்படிப்பட்ட புத்தகங்கள் கொஞ்ச காலத்துக்கு முன்பு வரை தமிழில் அதிகம் இல்லை. அந்தப் பெருங்குறை தற்போது பெருமளவு போக்கப்பட்டுவிட்டது.

அப்படி ஆசிரியர்கள் அவசியம் படிக்க வேண்டிய புத்தகங்கள் என்று சிலவற்றை பட்டியலிடுகிறார் பேராசிரியர் நா.மணி. இந்த புத்தகங்கள் அனைத்தும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் கிடைக்கின்றன என்கிறார் அவர்.

அவற்றுள் சில புத்தகங்களை அடையாளப்படுத்துகிறார் பேராசிரியர் நா.மணி:

பள்ளிக்கு முதல்முறையாக வரும் குழந்தையை எப்படி ஆராதிக்க வேண்டும். அரவணைக்க வேண்டும் என்று ருஷ்ய எழுத்தாளர் அம்னிஷ் வீலி எழுதிய 'குழந்தைகளைக் கொண்டாடுவோம்' நூல் விளக்குகிறது. ஒரு வகுப்பை எடுத்துக் கொண்டு தனது மாற்றுக் கல்விக்கான அனைத்து நடைமுறைகளையும் நிகழ்த்திக் காட்டிய பிஜுபாய் படேகா எழுதிய 'பகல் கனவு' நூலை வாசிக்கும் எந்த ஒரு ஆசிரியரும் வெற்றிகரமான நல்லாசிரியராக வாழ்நாள் முழுவதும் ஜொலிப்பார்.

ஆர்.நடராசன் எழுதிய 'ஆயிஷா' புத்தகத்தை ஒவ்வொரு ஆசிரியரும் அவசியம் படிக்க வேண்டும். ஜப்பான் மொழி பெயர்ப்பு நூலான 'டோட்டோசான்-ஜன்னலில் சிறுமி' ஆசிரியர்கள் அனைவரும் படிக்க வேண்டிய மற்றுமொரு சிறந்த நூல்.

அதேபோல் பேராசிரியர் ச.மாடசாமி எழுதியுள்ள நூல்களில் பெரும்பாலானவை கல்வி சார்ந்த ஆசிரியர்களுக்கான அடிப்படை நூல்களே. இந்த மாடசாமியே தமிழில் நமக்கு கிடைத்த கல்விக் கலைக்களஞ்சியம் என்று போற்றும் நூல் ஒன்று உண்டு. அது அது ஆயிஷா நடராசனின், 'இது யாருடைய வகுப்பறை?' என்ற நூல். 'வாத்தியார்' என்ற நாவல் ஆசிரியர்கள் படித்துப் பாதுகாக்க வேண்டிய நூல்களில் ஒன்று.

'நினைவுகள் அழிவதில்லை' என்ற நாவல், 'ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான கல்வி முறை', 'எதார்த்தத்தை எழுதுதலும் வாசித்தலும்' என்ற பாஃவ்லோ பிரைரே நூல்கள் போன்ற புத்தகங்களை ஆசிரியர்கள் தேடிப்பிடித்து படிக்க வேண்டும். கல்வி குறித்த தமிழில் வந்துள்ள நூல்களின் பட்டியல் இன்னும் நீளமானவை. இப்போது பரிந்துரைக்கும் நூல்களைப் படிக்கும் மனம் வந்துவிட்டால் மீதமுள்ள நூல்களைத் தேடிப் பிடித்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கைகூடும்.

இப்படிப் படிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் மிகச் சிறந்த நல்லாசிரியர் ஆகிவிடுவார்கள். எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் மாணவர்களுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்துக் கொட்டுவார்கள். எந்த அங்கீகாரம், விருதுகள் பற்றியும் கவலை கொள்ள மாட்டார்கள். அதற்கும் கூட ஒரு புத்தகம் இருக்கிறது. நூலின் பெயர் 'முதல் ஆசிரியர்' என்றார் பேராசிரியர் நா.மணி.

# இளைஞர்கள் தேடும் அரசியல், பொருளாதார புத்தகங்கள்

**ஈரோடு, ஆக. 4:** ஈரோடு புத்தகத் திருவிழாவில் இளைஞர்கள் பலர் அரசியல், பொருளாதாரம் சார்ந்த புத்தகங்களை ஏராளமாக வாங்கிச் செல்கின்றனர் என்று பதிப்பகத்தார் தெரிவித்தனர்.

புத்தகத் திருவிழாவில் இந்த ஆண்டு இளைஞர்களது வருகை கூடியுள்ளதைக் கவனிக்க முடிகிறது. ஆங்காங்கே இருக்கும் ஆங்கில நூல் அரங்குகளில் அரசியல் தொடர்பான நூல்களை வாங்கிப் படிப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டும் இந்த இளைஞர்கள், வாசிப்பினை ஒரு கூட்டுச் செயல்பாடாக நிகழ்த்துகின்றனர்.

நண்பர்களுக்குத் தாங்கள் வாங்கிய புத்தகங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், பிற நண்பர்கள் பரிந்துரைக்கும் நூல்களை வாங்கிப் படிப்பதன் மூலமும் ஓர் அலாதியான அனுபவமாக வாசித்தலை உருமாற்றுகின்றனர்.

சமூகம் சார்ந்த நேரடியான அரசியல் கருத்துகளைப் பேசும் புத்தகப் பதிப்பகங்களின் அரங்குகளில் வழக்கத்தைவிட இந்த ஆண்டு அதிகம்பேர் குழுமித் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிச் சென்றனர். இதுமாதிரியான அரசியல் பேசும் புத்தக அரங்குகளுக்குக் குறிப்பாக இளைஞர்களின் வருகை அதிகரித்துள்ளது கூடுதல் சிறப்பம்சமாகப் பார்க்கப்படுகிறது என்கின்றனர் பதிப்பகத்தார்.

இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது:

புத்தகத் திருவிழாவுக்கு இளைஞர்கள் நிறைய வருகிறார்கள் என்பது மட்டுமல்ல, வருகைதரும் இளைஞர்களின் புத்தக தேடல் சமூகப் பார்வை சார்ந்து இருக்கிறதென்பதுதான் மகிழ்ச்சியளிக்கக் கூடிய விஷயம். வெறும் புத்தகத்தை வாங்குவது என்றில்லாமல் புதிய கருத்துகளை சிந்திக்க முற்படுவது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

தமிழக இளைஞர்கள் வலைதளம், செல்லிடப்பேசி இது போன்ற விஷயங்களில்தான் கவனம் செலுத்துகிறார்கள் என்ற கருத்தை தகர்த்திருக்கிறார்கள் அன்றாடம் வருகைதரும் இளைஞர்கள்.

இளைஞர்கள் அரசியல் நூல்களைத் தேடி வாங்குகிறார்கள். அரசியல் சார்ந்த புத்தகங்களின் மீது முதியவர்களைக் காட்டிலும் இளைஞர்கள்தான், இந்த ஆண்டு அதிக ஆர்வமாக உள்ளனர். பொருளாதாரம் சார்ந்த மற்றும் பணமதிப்பிழப்பால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த புத்தகங்களும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் விற்பனையாகியுள்ளன.

இது மாதிரியான புத்தகங்களைத் தேடி வரும் இளைஞர்களில் பலரும் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் வேலை செய்பவர்களாக உள்ளனர். அவர்களுக்கு இதுவரை சமூகம் குறித்த பெரிய அளவிலான தெளிவு இல்லை என்றாலும் அதைத் தெரிந்து கொள்வதற்கான தேடல் அவர்களிடம் உருவாகியுள்ளது. இளைஞர்கள் மனதில் அரசியல் குறித்து எழுந்துள்ள பல கேள்விகளுக்கான விடைகளை இங்குக் கிடைக்கும் புத்தகங்களின் மூலம் தேடுகின்றனர் என்றனர்.

# புத்தகத் திருவிழாவில் திரண்ட அரசுப் பள்ளி மாணவர்கள்



நூல் ஆர்வலர் சான்றினை மயிலம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு வழங்குகிறார் மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன்.

**ஈரோடு, ஆக. 4:** ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஞாயிற்றுக்கிழமை அன்று அரசுப் பள்ளி மாணவிகள் ஏராளமானோர் வந்து புத்தகங்களை வாங்கிச் சென்றனர்.

ஈரோடு புத்தகத் திருவிழா கடந்த 2 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. வரும் 12 ஆம் தேதி வரை நடைபெறும் புத்தகத் திருவிழாவில் 3 ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை ஏராளமான மக்கள் திரண்டனர். ஈரோடு மாவட்டம், அந்தியூர் அருகே மயிலம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 மாணவிகள் 10-க்கும் மேற்பட்டோர் பெற்றோர், ஆசிரியர் துணை இல்லாமல் தனியாக புத்தகத் திருவிழாவுக்கு வந்து, அரங்குகளில் பாடம் தொடர்புடைய கையேடுகள் மற்றும் ரூ.10, ரூ.20 விலையில் கிடைக்கும் கதைப் புத்தகங்கள், தன்னம்பிக்கை புத்தகங்களை வாங்கிச் சென்றனர்.

இதுகுறித்து மாணவிகள் கூறியதாவது:

ஆண்டுமுழுவதும் பணம் சேர்த்து அதை கொண்டுவந்து புத்தகங்களை வாங்கியுள்ளோம். பாடம் தொடர்பான ஒப்பீட்டுப் புத்தகங்களை வாங்கிச் செல்கிறோம். இத்தகையப் புத்தகங்கள் வழக்கான புத்தகக் கடைகளில் கிடைக்குமா என தெரியவில்லை. அதனால் பள்ளி தொடங்கி 2 மாதங்கள் முடிந்தாலும் இப்போது வாங்கிச் செல்கிறோம். இந்த புத்தகங்களை நாங்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்வோம் என்றனர்.

ரூ.250-க்கு மேல் புத்தகம் வாங்கிய மாணவிகளுக்கு மக்கள் சிந்தனைப் பேரவை மூலம் அளிக்கப்படும் நூல் ஆர்வலர் என்ற சான்றினை அதன் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வழங்கி பாராட்டினார்.

அப்போது அவர் புத்தகத் திருவிழாவுக்கு வந்து செல்லும் மாணவர்கள் வெறும் கையுடன் திரும்பக்கூடாது என்பதற்காக குறைந்த விலையில் திருக்குறள் புத்தகங்களை வழங்க முடிவு செய்துள்ளதாகவும். நன்கொடையாளர்கள் மூலம் இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

**மாணவர்களுக்கான சிடிக்கள்:** புத்தகக் கண்காட்சியில் எல்கேஜி முதல் பிளஸ் 2 வரையிலான பள்ளி மாணவர்களுக்கு பாடம் தொடர்புடைய ஒப்பீடு, பயிற்சிப் புத்தகங்கள், டிவிடிகளுக்கு என 50-க்கும் மேற்பட்ட அரங்குகள் உள்ளன.

இதில் சமச்சீர் மற்றும் சிபிஎஸ்இ பாடங்கள், ஆங்கில மற்றும் தமிழ் வழி மாணவர்கள் பயன்படக்கூடிய வகையில் பல்வேறு வகையான 2 டி மற்றும் 3 டி டிவிடிக்கள் தயாரித்து குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பயன்படக்கூடிய வகையில் வைக்கப்பட்டுள்ளன.

1 முதல் பிளஸ் 2 வரை வகுப்பு சமச்சீர் டிவிடிக்கள் மாணவர்கள் மனதில் பதியும் வகையில் திரைப்படம்போல் பாடங்களை எளிதாக புரிந்துகொள்ள உதவும். 10 மற்றும் 12ஆம் வகுப்புக்கு 1, 2, 5, 10 மார்க் வினா வங்கி தலைப்பு வாரியாக நமக்கு நாமே பயிற்சி எடுத்துக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இவை அதிக மதிப்பெண்கள் பெற மாணவர்களுக்கு உதவும்.

மேலும் ஸ்போக்கன் இங்கிலீஷ், ஆங்கில இலக்கணம், ஸ்போக்கன் ஹிந்தி போன்றவற்றை தமிழ் மொழியின் மூலம் எளிதாக கற்கலாம். பிரெஞ்ச், பொதுஅறிவு, என்சைக்ளோபிடியா என அனைத்து விதமான டிவிடிக்களும் விற்பனைக்கு உள்ளன. 1 முதல் 10ஆம் வகுப்பு வரை ஒலிம்பியாட் சிடிக்களும், 6 முதல் 10ஆம் வகுப்பு வரை தேர்வுக்கு தயார்படுத்தும் சிடிக்களும், யூபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி, என்டிஎஸ்சி உள்ளிட்ட அனைத்து நுழைவுத்தேர்வுக்கு தயார்படுத்தும் சிடிக்களும், போட்டோஷாப், ஆட்டோகேட், மாயா, சி, விபி, ஜாவா போன்ற டியுட்டர் மற்றும் கேம்ஸ் சிடிக்களும் இடம் பெற்றுள்ளன.

குழந்தைகளுக்கான நர்சரி, செல்லப் பாப்பா பாடல்கள், உடற்பயிற்சி, நடனம், சுற்றுலாத் தலங்கள் பற்றிய விவரங்கள் போன்ற எண்ணற்ற தலைப்புகளில் சிடிக்கள் உள்ளன. ரூ.99 முதல் பல்வேறு விலையில் சிடி மற்றும் டிவிடிக்கள் உள்ளன. இந்த கண்காட்சியில் அனைத்து வகையான சிடிக்களுக்கும் 10 முதல் 20 சதவீதம் முதல் சிறப்பு தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

இந்து தமிழ் திசை
KOVAI
திங்கள், ஆகஸ்ட் 5, 2019

# நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்கு பகிர்வது தமிழனின் குணம்

● ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேச்சு

■ ஈரோடு

நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்கு பகிர்வது என்பது தமிழனின் குணம். புத்தகங்களைப் படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாரும் அளிக்க முடியாது என ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவையின் 15-ம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவையொட்டி நேற்று மாலை சிந்தனை அரங்க நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன் பேசும்போது, ஆளுமைத்தன்மையும், தன்னம்பிக்கையும் இளைஞர்களுக்குத் தேவை. அவற்றை புத்தகங்களால் மட்டுமே அளிக்க முடியும், என்றார்.

விழாவில், 'வாசிக்கலாம் யோசிக்கலாம்' என்ற தலைப்பில், 'இந்து தமிழ் திசை' நாளிதழ் ஆசிரியர் கே.அசோகன் பேசியதாவது:

புத்தகத் திருவிழாவிற்கு வரும் ஒரு வாசகர் அதனை நூறு பேருக்கு பகிர்ந்து கொள்வார். பலரையும் புத்தகப் பிரியராக அவர் மாற்றுவார். வாசிப்பது என்பது மிகச்சிறந்த ரசனை. இலக்கியச் சுவை, வரலாற்றுப் பின்னணியுடன் வாசிப்பு பழக்கத்தை வாசகர்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்து தமிழ் திசை ஆரம்பிக்கப்பட்டது. இலக்கிய ரசனை உள்ள, எதிர்பார்க்க முடியாத வாசகர் கூட்டத்தை நாங்கள் அடையாளம் கண்டு கொண்டோம். இலக்கிய ரசனை இல்லாத வாசகர்கள் கூட, தற்போது அதன் சுவையை ருசிக்கப் பழகி விட்டனர். இலக்கிய ஆர்வலர்களாக மாறிவிட்டனர்.




▲ ஈரோடு புத்தகத் திருவிழாவில் நடந்த சிந்தனை அரங்கில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசினார். அருகில், மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன், இந்து தமிழ் திசை ஆசிரியர் கே.அசோகன், நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன்.

புத்தகம் படிக்க நம்மை நாமே தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான மனோநிலை சுலபத்தில் வாய்க்காது. சிந்திக்கிற திறனை வளர்க்க உதாரணமாய் மக்கள் சிந்தனைப் பேரவை விளங்குகிறது. நல்ல மனிதர்களை உருவாக்கும் களமாக இந்த அமைப்பு உருவாகிறது.

### காட்சி ஊடங்களால் பாதிப்பு இல்லை

வாசிக்கும் பழக்கத்திற்கு தடையாக தொலைக்காட்சி மற்றும் இணையம் இருக்கிறதா என்ற சந்தேகம் தொடர்ந்து இருந்து வருகிறது. காட்சி ஊடகங்கள் வெளிப்படுத்தும் காட்சிகள் கற்பனையோடு நின்று விடுகிறது. அச்சு ஊடகம் மட்டுமே சிந்தனையைத் தூண்டி சிந்தனையாளராக்குகிறது. நல்ல எழுத்துகள் இருக்கும்வரை, காட்சி ஊடங்களால் எந்த பாதிப்பும் ஏற்படாது.

அடுத்த தலைமுறைக்கு நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு பெற்றோர் வழிகாட்டுதல் அவசியம் தேவை. வாசிக்கும் பழக்கத்தை குழந்தைகளுக்கு ஏற்படுத்த பெற்றோர் உறுதிமொழி ஏற்க வேண்டும். நூல் வாசிப்பால் உயர்ந்த சிந்தனை, நல்ல நோக்கம் வளரும், என்றார்.

விழா நிறைவில், 'கற்றதைச் சொல்கிறேன்' என்ற தலைப்பில், பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசியதாவது:

புத்தகங்களைப் படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாரும் அளிக்க முடியாது. நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்கு பகிர்வது என்பது தமிழனின் குணம். நாட்டில் உள்ள பள்ளங்களில் எல்லாம் நீரை நிரப்பி, அணை கட்டினால் உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என ஒரு மன்னனுக்கு புறநானூற்றுப்பாடல் சொல்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் நீர் மேலாண்மை குறித்து சொல்லப்பட்டுள்ளது.

நமக்கு சொற்களை கையாளத் தெரிய வேண்டும். கற்றல் வேறு; படிப்பது வேறு. இரண்டும் வேறுபட்டது. கற்கும் போது இருக்கும் பெருமையில் இவ்விரண்டும் மாறுபடுகிறது. நாம் பெருமையோடு இருந்தால் நம் பரம்பரை போற்றப்படும். நாம் இழிவாக இருந்தால் தூற்றப்படும்.

### தமிழ் இனிமையானது

சங்கப்பாடல்களில் குழல், யாழ், முழவு என மூன்று இசை வாத்தியங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வாத்தியப் பெயர்களில் சிறப்பு ழ கரம் இருப்பதால், நாம் தான் அதனைக் கண்டுபிடித்தோம் என உறுதியாகச் சொல்ல முடிகிறது. எத்தனை காலமானாலும் தமிழ் இனிமையாகவே இருந்து வருகிறது. நாம் படிப்பது எதற்காக என்றால், அதன்படி வாழ்வதற்கே. வாழப்பழக படிக்க வேண்டும்.

வாழ்க்கையும், வார்த்தையும் ஒன்றாக இருந்தால் அவர்களை உலகம் ஒருபோதும் மறக்காது. தனக்குள் இருக்கும் மிருகத்தை வெளியில் விடாமல் இருப்பதற்காகப் படிக்க வேண்டும். வாசித்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம், என்றார்.

மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர்.

# ஈரோடு புத்தக திருவிழாவில் குவிந்த வாசகர்கள்

ஈரோடு, ஆக.5-

ஈரோடு புத்தக திருவிழாவில் நேற்று ஏராளமான வாசகர்கள் குவிந்தனர்.

## புத்தக திருவிழா

மக்கள் சிந்தனை பேரவை சார்பில், ஈரோடு வ.உ.சி. பூங்காவில் புத்தக திருவிழா கடந்த 2-ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் தினமும் மாலையில் சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று மாலை நடந்த நிகழ்ச்சிக்கு ஈரோடு நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, 'கற்றதை சொல்கிறேன்' என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

புத்தகங்கள் படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாராலும் கொடுக்க முடியாது. நல்ல விஷயங்களை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்வது தமிழர்களின் குணம். நாட்டில் உள்ள பள்ளங்களில் எல்லாம் நீரை நிரப்பி, அணை கட்டினால் உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்று ஒரு மன்னனுக்கு புறநானூற்றுப்பாடல் சொல்கிறது. அப்படி என்றால் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் நீர் மேலாண்மை குறித்து சொல்லப்பட்டு உள்ளது.

## வாழ்க்கை -வார்த்தை

நமக்கு தமிழ்ச்சொற்களை கையாள தெரிய வேண்டும். கற்றல் என்பதும், படிப்பது என்பதும் வேறுபட்டது. பக்தி இலக்கியங்களில் பக்தி மட்டும் சொல்லப்பட்டு இருப்பதாக நினைத்து பலர் அதனை படிக்காமல் விட்டு விடுகின்றனர். ஆனால், பக்தியை தாண்டி பல விஷயங்கள் பக்தி இலக்கியங்களில் சொல்லப்பட்டு உள்ளது. பலவற்றையும் கற்றால் மட்டுமே ஒப்பிட்டு பார்க்கும் அறிவினை நாம் பெற முடியும்.

வாழ்க்கையும், வார்த்தையும் ஒன்றாக இருந்தால் அவர்களை உலகம் ஒருபோதும் மறக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஏராளமான வாசகர்கள் புத்தக திருவிழாவில் குவிந்தனர்.

## 'தினத்தந்தி' அரங்கு

புத்தக திருவிழாவில் 230 அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளன. அனைத்து வகையான புத்தகங்களும் ஒரே இடத்தில் கிடைப்பதால் தினமும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் குவிகிறார்கள். குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகள் ஆர்வமாக வந்து புத்தகங்களை வாங்கி சென்றனர். இதில் மரண பயத்தில் இருந்து மீட்டு, மகிழ்ச்சியுடன் வாழ வைக்கும் இதுவும் கடந்து போகும் என்ற புத்தகம், நமக்குள் சில கேள்விகள், பழைய சோறு ஆகிய புத்தகங்கள் புதிய புத்தகங்களாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம், ஆயிரம் ஆண்டு அதிசயம், தமிழ் சினிமா வரலாறு(பாகம்1), ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு, மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள், ஆளுமைத்திறன், சிறகை விரிக்கும் மங்கள்யான், பரபரப்பான வழக்குகள், நம்ப முடியாத உண்மைகள், உலகை உலுக்கிய வாசகங்கள், கலாம் ஒரு சரித்திரம், 27 நட்சத்திர தலங்கள் பரிகார முறைகள், மகாசக்தி மனிதர்கள், சினிமாவின் மறுபக்கம் ஆகிய புத்தகங்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

## விலையில் தள்ளுபடி

மேலும் வாழ்வை வளமாக்கும் பூஜை-விரதமுறைகள், அதிசயங்களின் ரகசியங்கள், தூரமில்லை தொட்டுவிடலாம், இதயம் தொட்ட பழமொழிகள், பழங்கால இந்தியர்களின் விஞ்ஞானம், இலக்கியத்தில் இன்பரசம், பழகிப்பார்ப்போம் வாருங்கள், உடலும் உணவும், நலம்தரும் மூலிகை சமையல், ஆதிச்சநல்லூர்-கீழடி மண் மூடிய மகத்தான நாகரிகம், நோய் தீர்க்கும் சிவாலயங்கள், மருத்துவ பூங்கா, அதிகாலை இருட்டு, ஆலய வழிபாடு ஏன்? எதற்கு? எப்படி?. ஆயுளை அதிகரிக்கும் ஆரோக்கிய உணவுகள், பைபிள் மாந்தர்கள், கேள்வியும் நானே பதிலும் நானே, உலக நாயகன் ஆகிய புத்தகங்களை பொதுமக்கள் விரும்பி வாங்கிச்செல்கிறார்கள்.

அறிவோம் இஸ்லாம், சிகரம் தொடும் சிந்தனைகள், செய்தி தரும் சேதி, 23 தோஷங்கள் பரிகார ஆலயங்கள், அமானுஷ்ய ஆன்மிகம், நானும் சினிமாவும், வாருங்கள் சீரடி சாய்பாபாவை தரிசிப்போம், ரகசியமான ரகசியங்கள், புரட்டிப்போடும் புலன் விசாரணை, இறையருள் தரும் சாதனங்கள், சினிமாவின் மறுபக்கம்(பாகம்-2), திரை உலக அதிசயங்கள், நதி போல ஓடிக்கொண்டிரு, அருள்தரும் அதிசய சித்தர்கள், நீங்களும் தலை ஆகலாம், உலகம் பிறந்தது உனக்காக, இதயம் கவர்ந்த இலக்கிய காட்சிகள், விதியை மாற்றும் 40 சித்தர்கள் ஆகிய புத்தகங்கள் 'தினத்தந்தி' ஸ்டாலில் பார்த்து வாங்கலாம். புத்தக திருவிழாவையொட்டி இங்கு வாங்கும் புத்தகங்களுக்கு விலையில் தள்ளுபடி உண்டு. புத்தக திருவிழா வருகிற 13-ந்தேதி நிறைவடைகிறது.




ஈரோடு புத்தக திருவிழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசிய போது எடுத்த படம்.



ஈரோட்டில் நடந்து வரும் புத்தக திருவிழாவில் தினத்தந்தி சார்பில் அமைக்கப்பட்டு உள்ள அரங்கில் வாசகர்கள் ஆர்வத்துடன் புத்தகங்களை பார்த்த போது எடுத்த படம்.

மக்கள் குரல்

05-8-2019

# தனக்குள் இருக்கும் மிருகம் வெளியில் வராமல் இருக்க புத்தகங்களை படிக்க வேண்டும்: கு.ஞானசம்பந்தன் பேச்சு

ஈரோடு, ஆக. 5–

கற்றல், படித்தல் இரண்டும் மாறுபட்டது. கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும் என, ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசினார்.

மக்கள் சிந்தனைப்பேரவையின் 15ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவையொட்டி 3ஆம் நாள் சிந்தனை அரங்க நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு, தலைமை வகித்த நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன் பேசும்போது, ஆளுமைத்தன்மையும், தன்னம்பிக்கையும் இளைஞர்களுக்குத் தேவை. அவற்றை புத்தகங்களால் மட்டுமே அளிக்க முடியும். அத்தகைய தலைசிறந்த புத்தகங்களை ஈரோடு புத்தகத் திருவிழா நமக்கு அளித்து வருகிறது என்றார்.

"கற்றதைச் சொல்கிறேன்" என்ற தலைப்பில், பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசியதாவது:–

புத்தகங்களைப் படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாரும் அளிக்க முடியாது. நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்கு பகிர்வது என்பது தமிழனின் குணம். நாட்டில் உள்ள பள்ளங்களில் எல்லாம் நீரை நிரப்பி, அணை கட்டினால் உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என ஒரு மன்னனுக்கு புறநானூற்றுப்பாடல் சொல்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் நீர் மேலாண்மை குறித்து சொல்லப்பட்டுள்ளது. உடலுக்கு சாப்பாடு போடுகிறாயே, உன் உயிருக்கு என்ன கொடுக்கிறாய் என்று கேட்ட திருவள்ளுவர் உயிருக்கு கொடை, வீரம், நற்செயல் மூலம் ஊதியம் கொடுப்பது சிறப்பு என்கிறார்.

**ஒப்பிட்டு பார்க்க கற்றல் அவசியம்**




நமக்கு சொற்களைக் கையாளத் தெரிய வேண்டும். கற்றல், படிப்பது இரண்டும் வேறுபட்டது. கற்கும் போது இருக்கும் பெருமையில் இவ்விரண்டும் மாறுபடுகிறது. நாம் பெருமையோடு இருந்தால் நம் பரம்பரை போற்றப்படும். நாம் இழிவாக இருந்தால் தூற்றப்படும். 7ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியக் காலமாக இருந்தது.

பக்தி இலக்கியங்களில் பக்தி மட்டும் சொல்லப்பட்டு இருப்பதாக நினைத்து பலர் அதனை படிக்காமல் விட்டு விடுகின்றனர். ஆனால் பக்தியைத் தாண்டி பல விஷயங்கள் பக்தி இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளது.

பலவற்றையும் கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும்.

**என்றும் தமிழ் இனிமை**

சங்கப்பாடல்களில் குழல், யாழ், முழவு என மூன்று இசை வாத்தியங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வாத்தியப் பெயர்களில் சிறப்பு 'ழ' கரம் இருப்பதால், நாம் தான் அதனைக் கண்டுபிடித்தோம் என உறுதியாகச் சொல்ல முடிகிறது. எத்தனை காலமானாலும் தமிழ் இனிமையாகவே இருந்து வருகிறது. நாம் படிப்பது எதற்காக என்றால் அதன்படி வாழ்வதற்கே. வாழப்பழக படிக்க வேண்டும்.

வாழ்க்கையும், வார்த்தையும் ஒன்றாக இருந்தால் அவர்களை உலகம் ஒருபோதும் மறக்காது. தனக்குள் இருக்கும் மிருகம் வெளியில் விடாமல் இருப்பதற்காகப் படிக்க வேண்டும். வாசித்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்றார்.

முன்னதாக, "வாசிக்கலாம் யோசிக்கலாம்" என்ற தலைப்பில், இந்து தமிழ் திசை ஆசிரியர் கே.அசோகன் பேசினார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார்.

# வாசித்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம்

## பேராசிரியர் ஞானசம்பந்தன் பேச்சு




■ ஈரோட்டில், புத்தக திருவிழாவில், சொற்பொழிவை கேட்க திரண்ட மக்கள். **உள்படம்:** விழாவில் பேசிய பேராசிரியர் ஞானசம்பந்தன்.

ஈரோடு, ஆக. 5–

''வாசித்தால், மனிதன் தெய்வமாகலாம். புத்தகங்களை படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை, வேறு யாரும் அளிக்க முடியாது,'' என, ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் ஞானசம்பந்தன் பேசினார்.

மக்கள் சிந்தனை பேரவை சார்பில், 15வது ஆண்டாக ஈரோட்டில், புத்தக திருவிழா நடக்கிறது. இதில் மூன்றாம் நாளான நேற்று, 'கற்றதைச் சொல்கிறேன்' என்ற தலைப்பில், பேராசிரியர் ஞானசம்பந்தன் பேசியதாவது:

புத்தகங்களை படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை, வேறு யாரும் அளிக்க முடியாது. நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்கு பகிர்வது, தமிழனின் குணம். நாட்டில் உள்ள பள்ளங்களில் எல்லாம் நீரை நிரப்பி, அணை கட்டினால் உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்குமென, ஒரு மன்னனுக்கு புறநானூற்று பாடல் சொல்கிறது. 2,000 ஆண்டுகளுக்கு முன்பே, நீர் மேலாண்மை குறித்து சொல்லப்பட்டுள்ளது. 'உடலுக்கு சாப்பாடு போடுகிறாயே, உன் உயிருக்கு என்ன கொடுக்கிறாய்' என்று கேட்ட திருவள்ளுவர், 'உயிருக்கு கொடை, வீரம், நற்செயல் மூலம் சம்பளம் கொடுப்பது சிறப்பு' என்கிறார்.

நமக்கு சொற்களை கையாளத் தெரிய வேண்டும். கற்றல், படித்தல் இரண்டும் வேறுபட்டது. கற்கும் போது இருக்கும் பெருமையில் இவ்விரண்டும் மாறுபடுகிறது. சங்கப்பாடல்களில் குழல், யாழ், முழவு என மூன்று இசை வாத்தியங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த வாத்தியப் பெயர்களில் சிறப்பு ழகரம் இருப்பதால், நாம் தான் அதை கண்டுபிடித்தோம் என உறுதியாக சொல்ல முடிகிறது. நாம் படிப்பது எதற்காகவென்றால், அதன்படி வாழ்வதற்கே. வாழப் பழக படிக்க வேண்டும்.

வாழ்க்கையும், வார்த்தையும் ஒன்றாக இருந்தால், அவர்களை உலகம் ஒரு போதும் மறக்காது. தனக்குள் இருக்கும் மிருகம், வெளியில் வராமலிருப்பதற்காக படிக்க வேண்டும். வாசித்தால், மனிதன் என்பவன் தெய்வமாகலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

---



# தனக்குள் இருக்கும் மிருகம் வெளியில் வராமல் இருக்க புத்தகங்களை படிக்க வேண்டும்: கு.ஞானசம்பந்தன் பேச்சு




ஈரோடு, ஆக. 5–

கற்றல், படித்தல் இரண்டும் மாறுபட்டது. கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும் என, ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசினார்.

மக்கள் சிந்தனைப்பேரவையின் 15ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவையொட்டி 3ஆம் நாள் சிந்தனை அரங்க நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு, தலைமை வகித்த நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.சண்முகன் பேசும்போது, ஆளுமைத்தன்மையும், தன்னம்பிக்கையும் இளைஞர்களுக்குத் தேவை. அவற்றை புத்தகங்களால் மட்டுமே அளிக்க முடியும். அத்தகைய தலைசிறந்த புத்தகங்களை ஈரோடு புத்தகத் திருவிழா நமக்கு அளித்து வருகிறது என்றார்.

"கற்றதைச் சொல்கிறேன்" என்ற தலைப்பில், பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசியதாவது:–

புத்தகங்களைப் படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாரும் அளிக்க முடியாது. நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்கு பகிர்வது என்பது தமிழனின் குணம். நாட்டில் உள்ள பள்ளங்களில் எல்லாம் நீரை நிரப்பி, அணை கட்டினால் உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என ஒரு மன்னனுக்கு புறநானூற்றுப்பாடல் சொல்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் நீர் மேலாண்மை குறித்து சொல்லப்பட்டுள்ளது. உடலுக்கு சாப்பாடு போடுகிறாயே, உன் உயிருக்கு என்ன கொடுக்கிறாய் என்று கேட்ட திருவள்ளுவர் உயிருக்கு கொடை, வீரம், நற்செயல் மூலம் ஊதியம் கொடுப்பது சிறப்பு என்கிறார்.

**ஒப்பிட்டு பார்க்க கற்றல் அவசியம்**

நமக்கு சொற்களைக் கையாளத் தெரிய வேண்டும். கற்றல், படிப்பது இரண்டும் வேறுபட்டது. கற்கும் போது இருக்கும் பெருமையில் இவ்விரண்டும் மாறுபடுகிறது. நாம் பெருமையோடு இருந்தால் நம் பரம்பரை போற்றப்படும். நாம் இழிவாக இருந்தால் தூற்றப்படும். 7ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியக் காலமாக இருந்தது.

பக்தி இலக்கியங்களில் பக்தி மட்டும் சொல்லப்பட்டு இருப்பதாக நினைத்து பலர் அதனை படிக்காமல் விட்டு விடுகின்றனர். ஆனால் பக்தியைத் தாண்டி பல விஷயங்கள் பக்தி இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளது.

பலவற்றையும் கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும்.

**என்றும் தமிழ் இனிமை**

சங்கப்பாடல்களில் குழல், யாழ், முழவு என மூன்று இசை வாத்தியங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வாத்தியப் பெயர்களில் சிறப்பு 'ழ' கரம் இருப்பதால், நாம் தான் அதனைக் கண்டுபிடித்தோம் என உறுதியாகச் சொல்ல முடிகிறது. எத்தனை காலமானாலும் தமிழ் இனிமையாகவே இருந்து வருகிறது. நாம் படிப்பது எதற்காக என்றால் அதன்படி வாழ்வதற்கே. வாழப்பழக படிக்க வேண்டும்.

வாழ்க்கையும், வார்த்தையும் ஒன்றாக இருந்தால் அவர்களை உலகம் ஒருபோதும் மறக்காது. தனக்குள் இருக்கும் மிருகம் வெளியில் விடாமல் இருப்பதற்காகப் படிக்க வேண்டும். வாசித்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்றார்.

முன்னதாக, "வாசிக்கலாம் யோசிக்கலாம்" என்ற தலைப்பில், இந்து தமிழ் திசை ஆசிரியர் கே.அசோகன் பேசினார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார்.

## ஒப்பற்ற தன்மை வாய்ந்த அற்புதமான படைப்பாக மிளிரக்கூடியது

## அன்றும், இன்றும், இனியும் திருக்குறள் மட்டும் தான்

# நீதிபதி ஆர்.மகாதேவன் பேச்சு




**ஈரோடு, ஆக.5**

ஈரோடு புத்தகத் திருவிழா இரண்டாம் நாள் சிந்தனை அரங்க நிகழ்வு வ.உ.சி பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. தொழிலதிபர் எம். சின்னசாமி தலைமை வகித்தார்.

மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் விழா அறிமுகவுரை நிகழ்த்தினர். இதில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் தமிழ்-அன்றும், இன்றும் என்ற தலைப்பில் பேசியதாவதுஉலகில் வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவுக்கு அறச்சிந்தனை வாய்ந்த படைப்புகளை தந்தது தமிழ் மொழி.

காலம் இதுதான் என்று அறுதியிட்டு சொல்ல முடியாத அளவுக்கு பழமை பொருந்திய மொழியாக, பண்பாடு, கலாச்சாரம் போன்ற அனைத்திலுமே ஈடு இணை இல்லாத மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது.தமிழ் மொழியின் தொன்மை என்பது எகிப்து, பாலஸ்தீனம், சுமத்ரா, ரோம் போன்ற நாடுகளுக்கு எல்லாம் தொடர்பு உள்ள கலாச்சாரம், பண்பாடு உள்ள மொழியாக அறியப்பட்டிருக்கிறது.

### மொழி, மண், கலாச்சாரம்

கிறிஸ்து பிறப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒப்பற்ற படைப்பாக திருக்குறள் இந்த மண்ணிற்கு வருகிறது. உலகத்தில் இருக்கும் படைப்புகளில் முகமற்ற மாந்தர்களுக்கான படைப்பாக அறியப்பட்டது திருக்குறள் மட்டும் தான். இந்த நாடு, மொழி, மண், கலாச்சாரம் என்கிற எந்த பாகுபாடும் இல்லாமல் தமிழகத்தின் குக்கிராமங்களில் வசிக்கும் மனிதன் வாழ்க்கை சார்ந்த பிரச்னைகளை அணுகிப் பார்க்க வேண்டும் என்றால், பாலஸ்தீனத்தை வாழும் ஒரு மனிதன் தன் வாழ்க்கை பிரச்னைகளை அணுகிப் பார்க்க வேண்டும் என்றால், 2 பேரையும் ஒரே படைப்பின் ஒரு குறளின் உள்ளே அடக்க முடியும். அத்தகைய ஒப்பற்ற தன்மை வாய்ந்த அற்புதமான படைப்பாக மிளிரக்கூடியது அன்றும், இன்றும், இனியும் திருக்குறள் மட்டும் தான்.என்றார்.




விழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசிய போது எடுத்தப்படம்.

# புத்தகங்கள் படிக்கும் மகிழ்ச்சியை வேறு யாரும் கொடுக்க முடியாது

## புத்தகத் திருவிழாவில் கு.ஞானசம்பந்தன் பேச்சு

ஈரோடு, ஆக. 5–

ஈரோடு வஉசி மைதான திடலில் மக்கள் சிந்தனை பேரவை சார்பில் புத்தகத் திருவிழா நடந்து வருகிறது.

நேற்று மாலை நடந்த 3–வது நாள் நிகழ்ச்சிக்கு நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் சண்முகன் தலைமை தாங்கினார். ஸ்டாலின் குணசேகரன் முன்னிலை வகித்தார்.

### கு.ஞானசம்பந்தன்

பேராசிரியர் கு.ஞான சம்பந்தன் கலந்து கொண்டு "கற்றதை சொல்கிறேன்" என்ற தலைப்பில் பேசினார்.

அவர் கூறியதாவது:–

நாம் பெருமையோடு இருந்தால் நம்ம பரம்பரை போற்றப்படும். நாம் இழிவாக இருந்தால் தூற்றப்படுவோம். பக்தியை தாண்டி பல விஷயங்கள் பக்தி இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளது. பலவற்றை கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினை பெற முடியும்.

### மகிழ்ச்சி

புத்தகங்கள் நம் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மதிக்க வேண்டும் நல்ல நல்ல புத்தகங்களைப் படிப்பதன் மூலம் நல்ல நல்ல விஷயங்களை நாம் கற்றுக் கொள்ள முடிகிறது.

புத்தகங்களை படிக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு எதுவும் அளித்துவிட முடியாது.

தனக்குள் இருக்கும் மிருகம் வெளியே விடாமல் இருப்பதற்காக படிக்க வேண்டும். வாசித்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் "வாசிக்கலாம் யோசிக்கலாம்" என்ற தலைப்பில் கே அசோகன் சிறப்புரையாற்றினார்.

### சாலமன் பாப்பையா

விழாவின் 4–ம் நாளான இன்று மாலை 6 மணிக்கு "சமுதாய மாற்றத்தை சாதக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடக்கிறது.

இதில் சாலமன் பாப்பையா நடுவராக இருந்து பேசி தீர்ப்பளிக்கிறார்.

### எஸ் ராஜா – பாரதி பாஸ்கர்

பேச்சுக்கே என்ற அணியில் பேராசிரியர் ராஜாராம், எம் சண்முகம், எஸ் ராஜா ஆகியோரும் எழுத்துக்கே என்ற அணியில் மரபின் மைந்தன் ம.முத்தையா, கவிதா ஜவகர், பாரதி பாஸ்கர் ஆகியோர் பேசுகிறார்கள்.

thinaboomi.com
தினபூமி, கோவை
ஆகஸ்ட் 06, 2019

# புத்தகங்களைப்படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாரும் அளிக்க முடியாது: பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேச்சு




ஈரோடு ஆக 6

கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும் என ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவையின் 15 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவையொட்டி 3ஆம் நாள் சிந்தனை அரங்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் தலைமை நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் வி. சண்முகன் வகித்த ர் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார். இதைத் தொடர்ந்து "கற்றதைச் சொல்கிறேன்' என்ற தலைப்பில், பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் பேசியதாவது த்தகங்களைப் படிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை வேறு யாரும் அளிக்க முடியாது. நல்ல விஷயங்களை அடுத்தவர்களுக்குப் பகிர்வது என்பது தமிழனின் குணம். நாட்டில் உள்ள பள்ளங்களில் எல்லாம் நீரை நிரப்பி, அணை கட்டினால் உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என ஒரு மன்னனுக்கு புறநானூற்றுப் பாடல் சொல்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றில் நீர் மேலாண்மை குறித்து சொல்லப்பட்டுள்ளது. "உடலுக்கு சாப்பாடு போடுகிறாயே, உன் உயிருக்கு என்ன கொடுக்கிறாய்' என்று கேட்ட திருவள்ளுவர் உயிருக்கு கொடை, வீரம், நற்செயல் மூலம் ஊதியம் கொடுப்பது சிறப்பு என்கிறார். நமக்கு சொற்களைக் கையாளத் தெரிய வேண்டும். கற்றல், படிப்பது இரண்டும் வேறுபட்டவை. கற்கும் போது இருக்கும் பெருமையில் இவ்விரண்டும் மாறுபடுகின்றன. நாம் பெருமையோடு இருந்தால் நம் பரம்பரை போற்றப்படும். நாம் இழிவாக இருந்தால் தூற்றப்படும்.

**மரக்கன்றுகள்**

7ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியக் காலமாக இருந்தது. பக்தி இலக்கியங்களில் பக்தி மட்டும் சொல்லப்பட்டு இருப்பதாக நினைத்து பலர் அதனைப் படிக்காமல் விட்டு விடுகின்றனர். ஆனால் பக்தியைத் தாண்டி பல விஷயங்கள் பக்தி இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளன. பலவற்றையும் கற்றால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கும் அறிவினைப் பெற முடியும். சங்கப் பாடல்களில் குழல், யாழ், முழவு என மூன்று இசை வாத்தியங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த வாத்தியப் பெயர்களில் சிறப்பு ழகரம் இருப்பதால், நாம்தான் அதனைக் கண்டுபிடித்தோம் என உறுதியாகச் சொல்ல முடிகிறது. எத்தனை காலமானாலும் தமிழ் இனிமையாகவே இருந்து வருகிறது. நாம் படிப்பது எதற்காக என்றால் அதன்படி வாழ்வதற்கே. வாழப் பழகப் படிக்க வேண்டும். வாழ்க்கையும், வார்த்தையும் ஒன்றாக இருந்தால் அவர்களை உலகம் ஒரு போதும் மறக்காது. தனக்குள் இருக்கும் மிருகத்தை வெளியில் விடாமல் இருப்பதற்காகப் படிக்க வேண்டும். வாசித்தால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்றார்.

மாணவர்களுக்கு மரக்கன்றுகள் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அப்போது அவர் புத்தகத் திருவிழாவிற்கு வரும் மாணவர்களுக்கு இறுதி நாளில் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான படிவத்தை அரங்கின் நுழைவாயிலில் உள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்து அளிக்க வேண்டும். மாணவர்கள் கேட்கும் மரக்கன்றுகளின் எண்ணிக்கை அளவுக்கு வில்லைகள் அளிக்கப்படும். புத்தகத் திருவிழாவின் இறுதி நாளில் வில்லைகளைப் பெற்றுக்கொண்டு மரக்கன்றுகள் அளிக்கப்படும். இதற்கான படிவம் திங்கள்கிழமை முதல் வழங்கப்படும் என்றார்

# தமிழ்படைப்புகளை தொகுத்துக் கொடுத்தவர்களை கொண்டாட வேண்டும்

## ● எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் பேச்சு

■ ஈரோடு

தமிழ் படைப்புகளை தேடிப்பிடித்து, தொகுத்து, அச்சிட்டு கொடுத்தவர்களை தமிழ்ச்சமூகம் கொண்டாட வேண்டும் என சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் பேசினார்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் அமைக்கப்பட்டுள்ள படைப்பாளர் மேடையில் வாசகர்கள் மத்தியில் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் பேசியதாவது:

புத்தகம் படிப்பது பலமடங்கு அதிகரித்துள்ளது. அவர்கள் என்ன படிக்கிறார்கள் என்பதில் வித்தியாசம் இருக்கலாம். பல்வேறு இடங்களில் நடக்கும் புத்தகக் கண்காட்சிகளில் பல கோடி ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையாகிறது. இதன்மூலம் படிப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அறிய முடியும். புத்தகக் கண்காட்சிகளில் இளைஞர்களின் வருகையை பார்க்கும்போது, இளைய தலைமுறையினரிடமும் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது தெரிகிறது. எழுத்தாளர்களும், புத்தகக் கண்காட்சி நடைபெறும் இடங்களும் அதிகரித்துள்ளது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு புத்தகக் கண்காட்சிகள் இல்லை. புத்தகங்களின் விலையை பற்றி கவலைப்படாமல் புத்தகங்களை வாங்கிச்செல்கின்றனர். பள்ளி பாடப்புத்தகத்தில் படித்ததை தவிர வேறு வரலாறு நமக்கு தெரியவில்லை. வரலாறு என்றால் மன்னர் பேர் தான் ஞாபகம் வருகிறது. ஆனால், உண்மையான வரலாறு என்றால் அங்கு வாழ்ந்த மக்களின் பெயர் ஞாபகத்துக்கு வர வேண்டும். இங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டு வரலாறை இப்போதைய தலைமுறை தெரிந்துகொள்ள புத்தகங்கள் உதவுகிறது.



▲ ஈரோடு புத்தகத் திருவிழாவில் அமைக்கப்பட்டுள்ள படைப்பாளர் மேடையில் வாசகர்கள் மத்தியில் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் பேசினார்.

முந்தைய கால கட்டத்தில் எழுத்தாளர்களுக்கு மதிப்பளிக்கப் படவில்லை., கம்பன், பாரதி, புதுமைப்பித்தன் போன்ற மிகப்பெரிய படைப்பாளர் களை கூட இந்த சமூகம் கண்டு கொள்ளவில்லை. எழுத்தாளர்களின் படைப்புகளை கொண்டாடும் இந்த சமூகம், எழுத்தாளர்கள் மீது அக்கறை காட்டவில்லை. வாழ்ந்த காலத்தில் கவுரவிக்கப்படவில்லை. அந்த குறை இந்த தலைமுறையில் மாற்றப்பட்டு வருகிறது. கடந்த 25 ஆண்டுகளில் எழுத்தாளர்களும், கவிஞர்களும் தேடித்தேடி கவுரவிக்கப்படுகின்றனர். இந்த மாற்றம் உருவாக காரணம் புத்தக வாசிப்பு தான்.

தமிழ் படைப்புகளை தேடிப்பிடித்து, தொகுத்து, அச்சிட்டு கொடுத்தவர்களை தமிழ்ச்சமூகம் கொண்டாட வேண்டும். புத்தகக் கண்காட்சிகள் என்பது சந்தை அல்ல. அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொடுக்கும் களம் என்பதை மக்கள் உணர வேண்டும்.

அடுத்த தலைமுறையினர் இன்னும் நியாயமாக, நேர்மையாக, அறத்துடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் தான் எழுத்தாளர்கள் படைப்புகளை உருவாக்குகின்றனர். இத்தகைய படைப்புகளை மக்களிடம் கொண்டு செல்லும் பணியை புத்தகக் கண்காட்சிகள் செய்கின்றன, என்றார்.

தொடர்ந்து வாசகர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார். நிகழ்ச்சியில் மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# 'பேனா தலைகுனியும்போது சமூகம் தலை நிமிர்கிறது'

ஈரோடு, ஆக. 6–

ஈரோடு, புத்தக திருவிழாவில், பேராசிரியர் சாலமன் பாப்பையா தலைமையில், 'சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா?, எழுத்துக்கா?' என்ற தலைப்பில் பட்டி மன்றம், நேற்றிரவு நடந்தது.

பட்டிமன்றத்தை துவக்கி வைத்து சாலமன் பாப்பையா பேசியதாவது: கல்லை கையில் எடுத்த காலம் கற் காலம். பித்தளை, இரும்பு, தங்கம் பல பொருட்களை கையில் எடுத்ததை வைத்து, காலங்களை கணித்தனர்.

சில நேரம், ஆட்சி செய்தவர் களை வைத்தும், அவர்களது பெயரை வைத்தும் காலத்தை கூறினர். இவற்றை, பேச்சு, எழுத்தால் மட் டுமே நாம் அறிய முடிந்தது. இவ் வாறு அவர் பேசினார்.

'பேச்சு' என்ற தலைப்பில் பேசிய பேராசிரியர் ராஜாராம், "எழுத்து என்பது கற்றவர்களை மட்டும் சென் றடையும். பேச்சு, அனைவரையும் சென்றடையும். சாக்ரடீஸ் பேச்சும், 'சகோதர, சகோதரிகளே' என்ற விவேகானந்தர் பேச்சும் உலகை ஈர்த் தது. சுதந்திர போராட்டத்தின்போது பாரதி கூறிய, 'அடிபணியாதே' என்ற சொல்லும், நேதாஜி கூறிய, 'அடி'; 'பணியாதே' என்ற பேச்சும், மக்களை தட்டி எழுப்பியதை அறிய முடிகி றது," என்றார்.



■ ஈரோடு, புத்தக திருவிழாவில் நடந்த பட்டிமன்றத்தில், நடுவராக தலைமை வகித்து, பேராசிரியர் சாலமன் பாப்பையா பேசினார்.

எம்.சரவணன் பேசுகையில், "வாய்க்கு அறுசுவை உண்டு; பேச் சுக்கு, 11 சுவை உண்டு. இருப்பினும், ஒரு எழுத்தாளன் கூறும்போது, 'பேனா தலைகுனியும்போது, சமூகம் தலை நிமிர்கிறது' என்று கூறியதையும் ஏற்க முடிகிறது," என்றார்.

எஸ்.ராஜா பேசுகையில், "காந் தியின் மெல்லிய பேச்சு, தேசத்தின் கடைகோடி வரை சென்றடைந்ததால், சுதந்திரம் கிட்டியது, என, ரவீந்திரநாத் தாகூர் கூறியதை எவரும் மறந்துவிட முடியாது. பேச்சு வலிமை மிகுந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளது" என்றார்.

'எழுத்து' என்ற தரப்பில், மரபின் மைந்தன் முத்தையா பேசுகையில், "பேச்சாளன் விளை நெல் போன் றவர். எழுத்தாளன்தான் விதை நெல் போன்றவர்.

புத்தகங்களை படித்துக் கொண்டே இருப்பவர்கள்தான், நல்ல பேச்சா ளனாக உருவாக முடியும். எழுத் துக்களே மனிதனின் சிந்தனையை தூண்டி, உலகை கட்டமைக்கிறது," என்றார்.

உமா மகேஸ்வரி பேசுகையில், "படித்து முடித்தவர்கள் ஆசிரியர் அல்ல. படித்துக் கொண்டே இருப்ப வர்கள்தான் நல்ல ஆசிரியர்," என்றார்.

இறுதியாக, சாலமன் பாப்பையா பேசுகையில், "எழுத்துக்கள், கற்றவர் களை மட்டுமே சென்றடையும். பேச் சுக்கள் மட்டுமே, சாதாரண மனிதர் களையும் சென்றடையும். அத்தனை மதங்களில் உள்ள நூல்களும், பேச்சுக் களை வைத்தே எழுத்துக்களாக, புத்த கங்களாக மாறி உள்ளன. எனவே, சமு தாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கே உண்டு," என்றார்.

மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்

# ஈரோடு புத்தகத் திருவிழா 2019



# சமுதாய மாற்றத்தை உருவாக்கும் வல்லமை படைத்தது பேச்சு

சாலமன் பாப்பையா





பட்டிமன்ற நிகழ்வில் பேசுகிறார் சாலமன் பாப்பையா. (வலது) நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்கள்.

ஈரோடு, ஆக. 5: பேச்சு சமுதாய மாற்றத்தை உருவாக்கும் வல்லமை படைத்தது என்றார் சாலமன் பாப்பையா.

ஈரோடு புத்தகத் திருவிழாவின் நான்காம் நாள் மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வு திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது. இதில், 'சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

சாலமன் பாப்பையா நடுவர் பொறுப்பேற்ற இந்தப் பட்டிமன்ற நிகழ்வில் 'பேச்சுக்கே' என்ற அணியில் பேராசிரியர் த.ராஜாராம், எம்.சண்முகம், எஸ்.ராஜா ஆகியோரும், 'எழுத்துக்கே' என்ற அணியில் மரபின் மைந்தன் ம.முத்தையா, கவிதா ஜவஹர், உமாமகேஸ்வரி ஆகியோரும் பேசினர்.

பட்டிமன்றத்தை தொடங்கி வைத்து சாலமன் பாப்பையா பேசியதாவது:

ஒரு கால மனிதர்கள் கல்லை கையில் வைத்திருந்தனர். அதற்கு கற்காலம் என்று பெயரிட்டு விட்டனர். கல் மாறி, பித்தளை தலைமை தாங்க ஆரம்பித்தது. அதனை பித்தளை யுகம் என்று சொல்லி விட்டனர். இன்னும் கொஞ்சநாள் கழித்து இரும்பு கிடைத்ததும், இரும்பு யுகம் என்று சொல்லி விட்டனர். இப்போது தங்கம் உள்ளிட்ட பலவற்றைத் தாண்டி வந்து விட்டோம். பொருள்கள் காலத்தின் பெயரை மாற்றுகிறது. காலத்தை மாற்றுவதில்லை, அதன் பெயரை மாற்றுகின்றன. இந்த மாற்றத்தையெல்லாம் உருவாக்க காரணம் பேச்சா, எழுத்தா என்பது குறித்துதான் இங்கே பேசுகின்றனர் என்றார்.

**த.ராஜாராம் பேசியது:**

பேச்சாளரை சொல்லேறு உழவர் என்று எழுத்துக்கெல்லாம் தலைவராக விளங்கிய வள்ளுவர் அழைத்தார். எழுத்துகள் எல்லாருக்கும் புரியும் என்று சொல்ல முடியாது.

அமெரிக்க சகோதரர்களே, சகோதரிகளே என்று இளம் துறவி விவேகானந்தரின் பேச்சு பாரதத்தின் மேன்மையை உலக அரங்கில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்றார்.

**மரபின் மைந்தன் முத்தையா:**

ஒரு மனிதன் புத்தகங்களைத் தேடித் தேடிப் படிக்கிறான். அந்தப் புத்தகம் அவனுக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எழுத்தின் தாக்கத்தால் ஒரு இயக்கத்தைத் தொடங்க உந்தித் தள்ளுகிறது. அது தலைவனாக உருவாக்குகிறது. அனைத்து சமூக மாற்றங்களுக்கும் அடிப்படையாக எழுத்து விளங்குகிறது. எழுத்து மனிதனுக்குள் இருக்கும் சிந்தனையைத் தூண்டுகிறது. நல்ல மனிதன் என்பது நல்ல புத்தகம் மாதிரி என்று திருவள்ளுவர் சொல்லியுள்ளார் என்றார்.

**எம்.சண்முகம்:**

எல்லாம் படித்தறிந்த விவேகானந்தரின் சந்தேகங்களுக்கு, எதுவுமே படிக்காத ராமகிருஷ்ண பரமஹம்சரால்தான் விளக்கம் சொல்ல முடிந்தது. பேச்சு என்பது உச்சரிப்பு, குரல் வளம் எல்லாவற்றையும் தாண்டி அதில் ஆத்ம ஒளி இருக்க வேண்டும் என்பதற்கு விவேகானந்தர் உதாரணம் என்றார்.

**கவிதா ஜவஹர்:**

அகர முதல எழுத்தெல்லாம் என்றுதான் வள்ளுவர் முதல் குறளிலேயே குறிப்பிட்டுள்ளார். எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம் என்று பாரதி சொன்னார். ஒரு நாட்டின் பண்பாட்டை, வரலாற்றை மீட்டெடுக்கும் வல்லமை எழுத்துக்கும், புத்தகத்துக்கும் உள்ளது என்றார்.

**ராஜா:**

இந்த உலகில் நடந்த மிகப்பெரிய மாற்றங்கள் எல்லாம் எழுத்தாளர்களால் வந்தது அல்ல. மிகப் பெரிய பேச்சாளர்களால் வந்தது என்று ஹிட்லர் எழுதியுள்ளார். ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும். காந்தி மெல்லிய குரலில் பேசிய வார்த்தைகள்தான் இந்தியாவின் கடைக்கோடி மனிதனைச் சென்றடைந்தது என்றார்.

**உமா மகேஸ்வரி:**

பிரம்மனைக் காட்டிலும் உயர்ந்தவன் படைப்பாளி. பிரம்மன் படைத்த உடல் அழிந்து போகும். படைப்பாளியின் படைப்பு அழிந்து போகாது. படித்துக் கொண்டே இருப்பவர்கள்தான் ஆசிரியர்கள். பழம்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அலைந்து 87 ஆண்டுகாலம் வாழ்ந்த உ.வே.சா. தொகுத்த எழுத்துதான் இன்று வரை நிற்கிறது.

**பேச்சுக்கே வல்லமை:**

எழுத்து கற்றவர்களுக்கு இடையேதான் தாக்கத்தை ஏற்படுத்தும். பேச்சு என்பது, அனைவரிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். சமுதாய மாற்றத்தை பேச்சுகள் ஏற்படுத்தியுள்ளன என்பதை உலக வரலாறு கூறுகிறது. இதனால் அனைவரிடத்திலும் உடனடி தாக்கத்தை ஏற்படுத்தும் பேச்சுக்கே சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் உள்ளது என சாலமன் பாப்பையா தீர்ப்பளித்தார்.

நிகழ்வுக்கு இந்து கல்வி நிலைய தாளாளர் கே.கே.பாலுசாமி தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார்.

## புத்தகத் திருவிழாவில் இன்று

புத்தகத் திருவிழாவின் 5 ஆம் நாள் விழாவில் சிந்தனை அரங்க நிகழ்வு செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் நக்கீரன் ஆசிரியர் கோபால் 'அளவுக்கு மீறினால்' என்ற தலைப்பிலும், அருட்தந்தை ஜெகத் கஸ்பர் 'தலை நிமிர் காலம்' என்ற தலைப்பிலும் பேசுகின்றனர்.

# வாசிப்பை நேசிப்பவர்களால் திணறியது புத்தகத் திருவிழா

ஈரோடு, ஆக. 5: ஈரோடு புத்தகத் திருவிழாவின் 4 ஆம் நாளான திங்கள்கிழமை மாணவர்கள், ஆசிரியர்கள், இளைஞர்களின் வருகையால் அரங்குகளில் நிற்க கூட இடமில்லாத அளவுக்கு கூட்டம் அதிகம் இருந்தது.

ஈரோடு புத்தகத் திருவிழா கடந்த 2 ஆம் தேதி தொடங்கியது. இந்த விழா வரும் 13 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 4 ஆம் நாளான திங்கள்கிழமை புத்தக ஆர்வலர்களின் கூட்டத்தால் அரங்குகள் நிரம்பி வழிந்தன.

இதுகுறித்து பதிப்பகத்தார் கூறியதாவது: கடந்த 4 நாள்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாசகர்கள் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட்டு புத்தகம் வாங்கியுள்ளனர். ஒரே இடத்தில் லட்சக்கணக்கான தலைப்புகளில், புத்தகங்கள் வாங்க கிடைப்பது மிகவும் அரிதான ஒருநிகழ்வு. கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு வாசகர்களின் வருகை அதிகரித்துள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் அதிகம் வருகின்றனர். ஆனால் அவர்கள் புத்தகம் வாங்குவதில்லை. அவர்களுக்குப் பிடித்த ஒரு நூலையாவது வாங்க, ஆசிரியர்கள், பெற்றோர் அறிவுறுத்த வேண்டும்.

ஆங்கில நூல்களைத்தான் அதிகம் விரும்புகின்றனர். தமிழ் நூல்களை வாங்கும் வாசகர்கள் கூட, ஏதாவது ஒரு ஆங்கில நூலின் பெயரைச் சொல்லி இருக்கிறதா என்று கேட்கின்றனர். இந்த ஆண்டு விற்பனை நன்றாகவே உள்ளது. ஆன்மிக நூல்களை வாசகர்கள் அதிகம் விரும்பிவாங்கிச் செல்கின்றனர். எங்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ள, பகவத்கீதை, ஸ்ரீமத்பாகவதம், ராமாயணம் மற்றும் யோகா நூல்கள் அதிகம் விற்பனையாகி உள்ளன.



புத்தகங்களை ஆர்வத்துடன் தேர்வு செய்த மாணவிகள்.

**புத்தகம் வாங்க காத்திருந்த மாணவர்கள்:** புத்தகக் கண்காட்சியில் மாணவர்கள் வரிசையில் நின்று புத்தகம் வாங்கினர். புத்தகக் கண்காட்சி அரங்குகள் நிரம்பி வழிந்ததால் மாணவர்களை ஆசிரியர்கள் முகப்பில் சிறிது நேரம் நிறுத்திவைத்து பிறகு அரங்கிற்குள் அனுப்பி வைத்தனர். மாணவர்கள், 'நான் சச்சின் வாங்கிட்டேன்', 'பஞ்ச தந்திரக் கதை வாங்கியிருக்கேன்' என்று பேசிக்கொண்டே புத்தகங்களை வாங்கினர்.

**பொன்னியின் செல்வன் புத்தகத்தை வாங்கிய மாணவர்:** பள்ளி மாணவர் ஒருவர் 'பொன்னியின் செல்வன்' புத்தகத்தை வாங்கிக்கொண்டு வந்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. கவுந்தப்பாடியைச் சேர்ந்த தனியார் பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் மாணவர் எம்.வாஞ்சிநாதன் 'பொன்னியின் செல்வன்' நாவலை வாங்கிக்கொண்டு அரங்கை விட்டு வெளியே வரும்போது அந்த மாணவரை ஆச்சரியத்துடன் பார்த்தனர். அப்போது சிலர் வாசிப்பு பழக்கம் குறைந்துவிட்டது என்று இளம் தலைமுறையினர் மீது குறைபட்டுக்கொள்பவர்கள் புத்தகத் திருவிழாவுக்கு வந்து இந்த நிகழ்வுகளை பார்த்துவிட்டு செல்ல வேண்டும். மேலும் இத்தகைய மாணவர்களைப் பள்ளிகள் ஊக்கப்படுத்த வேண்டும் என்று அங்கிருந்த ஆசிரியர்கள் தெரிவித்தனர்.



# புத்தகக் கண்காட்சிகள் அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொடுக்கும் களம்


எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன்

ஈரோடு, ஆக. 5: புத்தகக் கண்காட்சிகள் என்பது சந்தை அல்ல. அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொடுக்கும் களம் என்பதை மக்கள் உணர வேண்டும் என்றார் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன்.

ஈரோடு புத்தகக் கண்காட்சியில் உள்ள படைப்பாளர் மேடையில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்வில் அவர் பேசியதாவது:

புத்தகம் படிப்பது குறைந்துவருவதாக பொதுவான கருத்து உள்ளது. அதில் உண்மை இல்லை. புத்தகம் படிப்பது என்பது பல மடங்கு அதிகரித்துள்ளது.

என்ன படிக்கிறார்கள் என்பதில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் படிப்பவர்களின் எண்ணிக்கை என்பது அதிகரித்துள்ளது. பல்வேறு இடங்களில் நடக்கும் புத்தகக் கண்காட்சிகளில் பல கோடி ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையாகிறது. புத்தகக் கண்காட்சிகளில் இளைஞர்களின் வருகை என்பது 50 முதல் 60 சதவீதம் வரை உள்ளது. புத்தகங்கள் அதிக எண்ணிக்கையில் வாங்கப்படுகின்றன. சில ஆண்டுகளாக புத்தகம் படிப்பவர்களும், எழுத்தாளர்களும் அதிகரித்துள்ளனர். புத்தகக் கண்காட்சி நடைபெறும் இடங்கள் அதிகரித்துள்ளன. எழுத்தாளர்களுக்கும், படைப்பாளர்களுக்கும் கிடைக்கும் அங்கீகாரம், கௌரவம் அதிகரித்துள்ளது.



படைப்பாளர் மேடை நிகழ்வில் பேசுகிறார் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன்.

இதனை பண்பாட்டு வளர்ச்சியாகத்தான் கருத வேண்டும். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு புத்தகக் கண்காட்சிகள் இல்லை.

பள்ளிப் பாடப் புத்தகத்தில் படித்ததை தவிர வேறு வரலாறு நமக்குத் தெரியவில்லை. நம் வரலாறை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா? வரலாறு என்றால் மன்னர் பேர் தான் ஞாபகம் வருகிறது. ஆனால் அங்கு வாழ்ந்த மக்களின் பெயர் ஞாபகத்துக்கு வர வேண்டும். மக்களுக்குத் தானே ஆட்சி, மக்கள் தானே ஒரு தேசம். இங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டு வரலாறை இப்போது தலைமுறை தெரிந்துகொள்ள புத்தகங்கள் உதவுகிறது.

எழுத்தாளர்களுக்கு முந்தைய காலகட்டத்தில் மதிப்பளிக்கப்படவில்லை. கம்பன், பாரதி, புதுமைப்பித்தன் போன்ற மிகப்பெரிய படைப்பாளர்களைக் கூட இந்த சமூகம் கண்டுகொள்ளவில்லை. எழுத்தாளர்களின் படைப்புகளைக் கொண்டாடும் இந்த சமூகம் எழுத்தாளர்கள் மீது அக்கறை காட்டவில்லை. வாழ்ந்த காலத்தில் கௌரவிக்கப்படவில்லை. அந்தக் குறை இந்த தலைமுறையில் மாற்றப்பட்டு வருகிறது. கடந்த 25 ஆண்டுகளில் எழுத்தாளர்களும், கவிஞர்களும் தேடித்தேடி கௌரவிக்கப்படுகின்றனர். இந்த மாற்றம் உருவாக காரணம் புத்தக வாசிப்புதான்.

தமிழகத்தில் அரசியல், சினிமா இரண்டும்தான் முக்கியமான விவாதமாக உள்ளது. அதையும் தாண்டி ஏராளமான விஷயங்கள் இருக்கிறது என்பதைதான் புத்தகக் கண்காட்சிகள் மக்களுக்கு உணர்த்தி வருகின்றன.

தமிழ் படைப்புகளைத் தேடிப் பிடித்து தொகுத்து அச்சிட்டு கொடுத்தவர்களை தமிழ்ச் சமூகம் கொண்டாட வேண்டும். புத்தகக் கண்காட்சிகள் என்பது சந்தை அல்ல. அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொடுக்கும் களம் என்பதை மக்கள் உணர வேண்டும். அடுத்த தலைமுறை இன்னும் நியாயமாக நேர்மையாக, அறத்துடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில்தான் எழுத்தாளர்கள் படைப்புகளை உருவாக்குகின்றனர். இத்தகைய படைப்புகளை மக்களிடம் கொண்டு செல்லும் பணியை புத்தகக் கண்காட்சிகள் செய்கின்றன என்றார்.

தொடர்ந்து வாசகர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார். முன்னதாக மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் குறித்தும் அவர் எழுதிய புத்தகங்கள் குறித்தும் பேசினார்.



புத்தக திருவிழாவில் சாலமன் பாப்பையா தலைமையில் பட்டிமன்றம் நடந்த போது எடுத்த படம்.

### ஈரோடு புத்தக திருவிழாவில் சிறப்பு பட்டிமன்றம்:

# சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா?

## பேராசிரியர் சாலமன் பாப்பையா பங்கேற்பு

ஈரோடு, ஆக.6–

ஈரோடு புத்தக திருவிழாவில், சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடந்தது. இதில் பேராசிரியர் சாலமன் பாப்பையா நடுவராக பங்கேற்றார்.

### பட்டிமன்றம்

மக்கள் சிந்தனை பேரவை சார்பில், ஈரோடு வ.உ.சி. பூங்காவில் புத்தக திருவிழா கடந்த 2–ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாளும் மாலையில் பல்வேறு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அதன்படி சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா? என்ற தலைப்பில் நேற்று சிறப்பு பட்டிமன்றம் நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு ஈரோடு இந்து கல்வி நிலைய தலைவர் கே.கே.பாலுசாமி தலைமை தாங்கினார்.

பேராசிரியர் சாலமன் பாப்பையா பட்டிமன்ற நடுவராக செயல்பட்டார். பேச்சுக்கே? என்ற தலைப்பில் பேராசிரியர் ராஜாராம், சண்முகம், ராஜா ஆகியோரும், எழுத்துக்கே? என்ற தலைப்பில் முத்தையா, கவிதா ஜவகர், உமா மகேஸ்வரி ஆகியோரும் பேசினார்கள். முடிவில் சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கே உள்ளது என்று பேராசிரியர் சாலமன் பாப்பையா தீர்ப்பு கூறினார். முன்னதாக அவர் பேசும்போது, 'புத்திவரம் தரும் திருவிழாவாக ஈரோடு புத்தக திருவிழா நடைபெற்று வருகிறது' என்றார். அதைத்தொடர்ந்து எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனுக்கு பாராட்டு மடலை சாலமன் பாப்பையா வழங்கினார். இதில் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

### 'தினத்தந்தி' அரங்கு

புத்தக திருவிழாவில் 230 அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளன. அனைத்து வகையான புத்தகங்களும் ஒரே இடத்தில் கிடைப்பதால் தினமும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் குவிகிறார்கள். குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் ஆர்வமாக வந்து புத்தகங்களை வாங்கி செல்கின்றனர். 171–ம் எண் அரங்கில் 'தினத்தந்தி' பதிப்பக வெளியீட்டு புத்தகங்கள் வைக்கப்பட்டு உள்ளன. இதில் மகிழ்ச்சியுடன் வாழவைக்கும் இதுவும் கடந்து போகும் என்ற புத்தகம், நமக்குள் சில கேள்விகள், பழைய சோறு ஆகிய புத்தகங்கள் புதிய புத்தகங்களாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம், ஆயிரம் ஆண்டு அதிசயம், தமிழ் சினிமா வரலாறு(பாகம்1), ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு, மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள், ஆளுமைத்திறன், சிறகை விரிக்கும் மங்கள்யான், பரபரப்பான வழக்குகள், நம்ப முடியாத உண்மைகள், உலகை உலுக்கிய வாசகங்கள், கலாம் ஒரு சரித்திரம், 27 நட்சத்திர தலங்கள் பரிகார முறைகள், மகாசக்தி மனிதர்கள், சினிமாவின் மறுபக்கம் ஆகிய புத்தகங்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

### நலம் தரும் மூலிகை சமையல்

மேலும் வாழ்வை வளமாக்கும் பூஜை– விரதமுறைகள், அதிசயங்களின் ரகசியங்கள், தூரமில்லை தொட்டு விடலாம், இதயம் தொட்ட பழமொழிகள், பழங்கால இந்தியர்களின் விஞ்ஞானம், இலக்கியத்தில் இன்பரசம், பழகிப்பார்ப்போம் வாருங்கள், உடலும் உணவும், நலம்தரும் மூலிகை சமையல், ஆதிச்சநல்லூர்– கீழடி மண் மூடிய மகத்தான நாகரிகம், நோய் தீர்க்கும் சிவாலயங்கள், மருத்துவ பூங்கா, அதிகாலை இருட்டு, ஆலய வழிபாடு ஏன்? எதற்கு? எப்படி?. ஆயுளை அதிகரிக்கும் ஆரோக்கிய உணவுகள், பைபிள் மாந்தர்கள், கேள்வியும் நானே பதிலும் நானே, உலக நாயகன் ஆகிய புத்தகங்களை பொதுமக்கள் விரும்பி வாங்கிச்செல்கிறார்கள்.

அறிவோம் இஸ்லாம், சிகரம் தொடும் சிந்தனைகள், செய்தி தரும் சேதி, 23 தோஷங்கள் பரிகார ஆலயங்கள், அமானுஷ்ய ஆன்மிகம், நானும் சினிமாவும், வாருங்கள் சீரடி சாய்பாபாவை தரிசிப்போம், ரகசியமான ரகசியங்கள், புரட்டிப் போடும் புலன் விசாரணை, இறையருள் தரும் சாதனங்கள், சினிமாவின் மறுபக்கம் (பாகம்–2), திரை உலக அதிசயங்கள், நதி போல ஓடிக்கொண்டிரு, அருள்தரும் அதிசய சித்தர்கள், உலகம் பிறந்தது உனக்காக, இதயம் கவர்ந்த இலக்கிய காட்சிகள், விதியை மாற்றும் 40 சித்தர்கள் ஆகிய புத்தகங்கள் 'தினத்தந்தி' ஸ்டாலில் பார்த்து வாங்கலாம். புத்தக திருவிழாவையொட்டி இங்கு வாங்கும் புத்தகங்களுக்கு விலையில் தள்ளுபடி உண்டு. புத்தக திருவிழா வருகிற 13–ந்தேதி நிறைவுடைகிறது.



புத்தக திருவிழாவில் தினத்தந்தி சார்பில் அமைக்கப்பட்டு உள்ள அரங்கில் ஆர்வத்துடன் புத்தகங்களை தேர்வு செய்தவர்களை படத்தில் காணலாம்.

தினபூமி, கோவை
ஆகஸ்ட் 07, 2019
thinaboomi.com

# சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கே உண்டு: சாலமன் பாப்பையா




**ஈரோடு ஆக 7**

ஈரோடு புத்தகத் திருவிழாவின் நான்காம் நாள் மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வு நடைபெற்றது. இதில், ''சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா? எழுத்துக்கா' என்ற தலைப்பில். பட்டிமன்றம் நடைபெற்றது. விழா வுக்கு இந்து கல்வி நிலைய தாளாளர் கே.கே.பாலுசாமி தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார். சாலமன் பாப்பையா நடுவர் பொறுப்பேற்ற இந்தப் பட்டிமன்ற நிகழ்வில் ''பேச்சுக்கே' என்ற அணியில் பேராசிரியர் த.ராஜாராம், எம்.சண்முகம், எஸ்.ராஜா ஆகியோரும், ''எழுத்துக்கே' என்ற அணியில் மரபின் மைந்தன் ம.முத்தையா. கவிதா ஜவஹர், உமாமகேஸ்வரி ஆகியோரும் பேசினர். பட்டிமன்றத்தை தொடங்கி வைத்து சாலமன் பாப்பையா பேசியதாவது ஒரு கால மனிதர்கள் கல்லை கையில் வைத்திருந்தனர்.

அதற்கு கற்காலம் என்று பெயரிட்டு விட்டனர். கல் மாறி, பித்தளை தலைமை தாங்க ஆரம்பித்தது. அதனை பித்தளை யுகம் என்று சொல்லி விட்டனர். இன்னும் கொஞ்சநாள் கழித்து இரும்பு கிடைத்ததும், இரும்பு யுகம் என்று சொல்லி விட்டனர். இப்போது தங்கம் உள்ளிட்ட பலவற்றைத் தாண்டி வந்து விட்டோம். பொருள்கள் காலத்தின் பெயரை மாற்றுகிறது. காலத்தை மாற்றுவதில்லை, அதன் பெயரை மாற்றுகின்றன. இந்த மாற்றத்தையெல்லாம் உருவாக்க காரணம் பேச்சா, எழுத்தா என்பது குறித்துதான் இங்கே பேசுகின்றனர் என்றார். '

**காந்தியின் மெல்லிய பேச்சு**

எம்.சரவணன் பேசுகையில், ''வாய்க்கு அறுசுவை உண்டு பேச்சுக்கு, 11 சுவை உண்டு.

இருப்பினும், ஒரு எழுத்தாளன் கூறும்போது, 'பேனா தலைகுனியும்போது, சமூகம் தலை நிமிர்கிறது' என்று கூறியதையும் ஏற்க முடிகிறது.'' என்றார். எஸ்.ராஜா பேசுகையில், ''காந்தியின் மெல்லிய பேச்சு, தேசத்தின் கடைகோடி வரை சென்றடைந்ததால், சுதந்திரம் கிட்டியது, என, ரவீந்திரநாத் தாகூர் கூறியதை எவரும் மறந்து விட முடியாது. பேச்சு வலிமை மிகுந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளது'' என்றார். 'எழுத்து' என்ற தரப்பில், மரபின்மைந்தன் முத்தையா பேசுகையில், ''பேச்சாளன் விளை நெல் போன்றவர். எழுத்தாளன்தான் விதை நெல் போன்றவர். புத்தகங்களை படித்துக் கொண்டே இருப்பவர்கள்தான், நல்ல பேச்சாளனாக உருவாக முடியும்.. எழுத்துக்களே மனிதனின் சிந்தனையை தூண்டி, உலகை கட்டமைக்கிறது,'' என்றார். உமா மகேஸ்வரி பேசுகையில், ''படித்து முடித்தவர்கள் ஆசிரியர் அல்ல. படித்துக் கொண்டே இருப்பவர்கள்தான் நல்ல ஆசிரியர், '' என்றார்இறுதியாக, சாலமன் பாப்பையா பேசுகையில், ''எழுத்துக்கள், கற்றவர்களை மட்டுமே சென்றடையும். பேச்சுக்கள் மட்டுமே, சாதாரண மனிதர்களையும் சென்றடையும். அத்தனை மதங்களில் உள்ள நூல்களும், பேச்சுக்களை வைத்தே எழுத்துக்களாக, புத்தகங்களாக மாறி உள்ளன. எனவே, சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கே உண்டு,'' என்றார்.

மாலை மலர் ஈரோடு 7-8-2019 ★




நக்கீரன் கோபால் பேசிய போது எடுத்தப்படம்.

# செல்போன்களில் மூழ்கி கிடக்கும் நிலையை மாற்ற வேண்டும்

## புத்தக திருவிழாவில் நக்கீரன் கோபால் பேச்சு

ஈரோடு, ஆக.7–

ஈரோடு வ.உ.சி மைதானத்தில் மக்களை சிந்தனை பேரவை சார்பில் புத்தகத் திருவிழா நடந்து வருகிறது.

நேற்று மாலை நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் "அளவுக்கு மீறினால்" என்ற தலைப்பில் நக்கீரன் கோபால் பேசினார்.

அவர் பேசியதாவது:–

### செல்போன் மாயை

இது அறிவு மேடை இங்கு அரசியல் பேச்ச கூடாது ஆகவே பார்தது பார்த்து பேச வேண்டி உள்ளது. இன்று தொழில் நுட்ப வளர்ச்சி அபரிதமாக உள்ளது. தொழில் நுட்ப வளர்ச்சி தேவை தான். ஆனால் அது அளவை மீறக்கூடாது. நான் ஒருநாள் டெல்லிக்கு விமானத்தில் சென்றேன். அப்போது அந்த விமானம் புறப்பட 20 நிமிடம் ஆகும் என்று அறிவித்தனர். இப்படி 5 தடவை 20 நிமிடம் என கூறி ஒரு மணி நேரத்தை வீண்டித்து விட்டார்கள்.

எனக்கோ கடும் கோபம் எரிச்சல் யாரோ நமது நேரத்தை இப்படி திருடி விட்டார்களே என்ற ஆத்திரம் ஏற்பட்டது.

நான் மட்டும் தான் இப்படி ஆத்திரப்படுகிறேனா...? வேறு யாருக்கும் கோபம் வரவில்லையா? என்று மற்றவர்களை பார்த்தேன்.

ஆனால் விமானத்தில் இருந்த 95 சதவீதம் பேர் குனிந்துகொண்டு செல்போனை பார்த்து கொண்டே இருந்தார்கள். யாருக்கும் நமது நேரத்தை இப்படி யாரோ திருடுகிறார்களே... என கேட்கும் துணிச்சல் இல்லை.

இதை ஏன் இங்கு குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் செல்போனில் நாம் நமது பொன்னான நேரத்தை போக்குகிறோம். இந்த செல்போன் மாயையிலிருந்து நாம் மீள வேண்டும்.

அதற்காக நல்ல புத்தகங்களை வாங்கி படியுங்கள். அதன் மூலம் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு நக்கீரன் கோபால் பேசினார்.

இன்று மாலை நடக்கும் நிகழ்ச்சியில் நடிகர் பொன்வண்ணன், நடிகை ரோகிணி கலந்து கொண்டு பேசுகிறார்கள்.

# ‘தலைமைகள் பலவீனமாகும்போது நெருக்கடி ஏற்படும்’

## புத்தக திருவிழாவில் பேச்சு

ஈரோடு, ஆக. 7–

ஈரோட்டில் நடந்து வரும் புத்தக திருவிழாவில், நேற்று நடந்த சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு, மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் தலைமை வகித்தார். ‘அளவுக்கு மீறினால்’ என்ற தலைப்பில் நக்கீரன் கோபால் பேசினார். ‘தலை நிமிர் காலம்’ என்ற தலைப்பில், ஜெகத் கஸ்பர் பேசியதாவது:

மழை ஆறாக ஓடினால் பயன் தரும். தடம் மாறி ஓடினால் மனித குலத்தை அழிக்கும். அறம் இறந்து போகும் காலத்தில், இறைவனுக்கு திருவிழா எடுக்கிறோம். கடவுள் வழிபாட்டைக்கூட வணிக ரீதியாக, அவரிடம் பேரம் பேசும் வகையில் செய்கிறோம். இதனால்தான், இறைவனை வழிபாட்டின் மூலம், இங்கு அழைத்து வர விரும்புகிறோம். ஆனால், தமிழ் மொழியை நாம் படிக்கும்போது, நாம் உயர்வாக வாழ்ந்து, கடவுளுடன் நம்மை கொண்டு சேர்க்கும் நிலையை நாம் அடைய வேண்டும், என வலியுறுத்துகிறது.

அவ்வாறு வாழ விரும்புவோர், மண், நீரை, காற்றை அழிக்கக்கூடாது. அதை அழித்தால், மானுடம் அழியும். நமது நாகரிகம் உருவான நதியை படுகொலை செய்கிறோம் என்பதை பற்றி கவலைப்பட வேண்டும். இந்த கவலை ஏற்படாவிட்டால், மிக விரைவில் உணவு, நிலம், நீருக்கு பெரிய நெருக்கடியை நாம் சந்திக்கும் நிலை ஏற்படும்.

அரசியல் தலைமை, ஆன்மிகத்தின் தலைமை பலவீனமாகும்போது, இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்படும். அதுபோன்ற காலங்களில் சமூக அக்கறை கொண்டவர்களும், ஒவ்வொருவரும் கடுமையான உடலுழைப்பை செலுத்தி தொழிலை, வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும். பொறுப்புகளை ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றியை பெறமுடியும். இவ்வாறு அவர் பேசினார்.



ஈரோட்டில் புத்தக திருவிழாவில் பேசிய, ஜெகத் கஸ்பர்.



# இளைஞர்களின் சிந்தனையை சிதைக்கும் இணைய விளையாட்டுகள்

● புத்தகத் திருவிழாவில் திரைப்படத் தயாரிப்பாளர் அருமைச்சந்திரன் பேச்சு

ஈரோடு

இணைய விளையாட்டுக்களால் இளைஞர்களின் சிந்தனை முற்றிலுமாக சிதைக்கப்பட்டு, அவர்கள் தற்கொலை முடிவுக்குச் செல்லும் அவல நிலை ஏற்பட்டு வருகிறது என சிங்கப்பூர் கேட் ஹியாங் தொகுதி இந்திய நற்பணி மன்ற தலைவர் பி.அருமைச்சந்திரன் பேசினார்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் உலகத் தமிழர் படைப்பரங்கத்தில், நேற்று நடந்த நிகழ்ச்சியில், சிங்கப்பூர் கேட் ஹியாங் தொகுதி இந்திய நற்பணி மன்ற தலைவரும், திரைப்பட தயாரிப்பாளருமான பி.அருமைச்சந்திரன் பேசியதாவது:

புத்தகங்கள் போன்று திரைப்படங்களும் மக்களுக்கு நல்ல விஷயங்களைக் கொண்டு செல்கின்றன. நல்ல விஷயங்களைக் கொண்டு செல்லும் திரைப்படங்களின் எண்ணிக்கை வேண்டுமானால் குறைவாக இருக்கலாம். ஒரு எழுத்தாளர், படைப்பாளி படைப்புகளை உருவாக்கி மக்களிடம் கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளது.

சமீபகாலமாக இளைஞர்கள், மாணவர்களை பெரிதும் பாதிக்கும், ‘புளூவேல்’ என்ற இணைய விளையாட்டு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு திரைப்படம் தயாரித்து வருகிறோம். ஒரு நாட்டின் இளைஞர் சக்தியை போரிட்டுதான் அழிக்க வேண்டும் என்ற நிலை இப்போது இல்லை. அந்த வேலையைத்தான் இணையம் மூலம் பரவும் ஆன்லைன் விளையாட்டுகள் செய்கின்றன.

ஆன்லைன் விளையாட்டுகள் இளைஞர்களின் சிந்தனையை முற்றிலுமாக சிதைத்து, அவர்களை தற்கொலை முடிவுக்கு தள்ளுகின்றன. ஒரு நாட்டின் வளமாகத் திகழும் இளைஞர்களைக் காக்க, அவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இத்தகைய புத்தகத் திருவிழாக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன, என்றார்.

விழாவில், மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் பேசும்போது, புத்தகத் திருவிழாவின் நோக்கம் இளைஞர்களிடம் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களது சிந்தனையை மேம்படுத்த வேண்டும் என்பது தான். இணையம் மூலம் பரவும் ஆபத்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்படும் புளூவேல் திரைப்படம் கட்டாயம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த திரைப்படத்தை மக்கள் சிந்தனைப் பேரவை அங்கீகரிக்கிறது, என்றார்.



▲ ஈரோடு புத்தகத் திருவிழா உலக படைப்பாளர் அரங்கில் நடந்த நிகழ்ச்சியில் சிங்கப்பூர் கேட் ஹியாங் தொகுதி இந்திய நற்பணி மன்ற தலைவரும், திரைப்படத் தயாரிப்பாளருமான பி.அருமைச்சந்திரன் பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்



# ஈரோடு புத்தகத் திருவிழா 2019

## நாட்டின் இளைஞர் சக்தியை ஆன்லைன் விளையாட்டுகள் சிதைக்கின்றன

திரைப்படத் தயாரிப்பாளர் பி.அருமைச்சந்திரன்

ஈரோடு, ஆக.6: ஒரு நாட்டின் இளைஞர் சக்தியை போரிட்டுத்தான் அழிக்க வேண்டும் என்ற நிலை மாறி, இணையம் மூலம் பரவும் ஆன்லைன் விளையாட்டுகள் பேரழிவுப் பணியைச் செய்வதாக திரைப்படத் தயாரிப்பாளர் பி.அருமைச்சந்திரன் தெரிவித்தார்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் உலகத் தமிழர் படைப்பரங்க சிறப்பு நிகழ்வு செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தலைமை வகித்தார்.

இதில் சிங்கப்பூர் கேட் ஹியாங் தொகுதி இந்திய நற்பணி மன்றத் தலைவரும், திரைப்படத் தயாரிப்பாளருமான பி.அருமைச்சந்திரன் பேசியதாவது:

படைப்புகளை உருவாக்கி மக்களிடம் கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. இலக்கியம், கலை என எந்தப் படைப்பாக இருந்தாலும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளும்போது தான் போற்றப்படுகிறது. திரைப்படங்களைப் பொருத்தவரை தமிழகத்தில் ஆண்டுக்கு 250 திரைப்படங்கள் வந்தால் அதில் 5 சதவீத திரைப்படங்கள் தான் வெற்றி பெறுகின்றன. 2 சதவீத படங்கள் மட்டுமே தயாரிப்பாளர்களுக்கு பணம் ஈட்டிக் கொடுக்கின்றன.



நிகழ்வில் பேசுகிறார் சிங்கப்பூர் கேட் ஹியாங் தொகுதி இந்திய நற்பணி மன்ற தலைவரும், திரைப்படத் தயாரிப்பாளருமான பி.அருமைச்சந்திரன்.

### புத்தகத் திருவிழாவில் இன்று

புத்தகத் திருவிழா மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வில் புதன்கிழமை (ஆக.7) மாலை 6 மணிக்கு நடிகர் பொன்வண்ணன் 'ஆதி சூழ் உலகு' என்ற தலைப்பிலும், நடிகை ரோகிணி 'உடல் மட்டும் அல்ல பெண்' என்ற தலைப்பிலும் பேசுகின்றனர்.

புத்தகங்கள் போன்று திரைப்படங்களும் மக்களுக்கு நல்ல விஷயங்களை கொண்டுச் செல்கின்றன. அத்தகைய திரைப்படங்களின் எண்ணிக்கை வேண்டுமானால் குறைவாக இருக்கலாம். அண்மைக் காலமாக இளைஞர்கள், மாணவர்களைக் குறி வைக்கும் புளூவேல் என்ற ஆபத்தான ஆன்லைன் விளையாட்டு குறித்து இளைய சமுதாயம் அறிந்து கொண்டு விழிப்புணர்வு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் 'புளூவேல்' என்ற பெயரில் திரைப்படத்தை தயாரித்து வருகிறோம்.

பொதுவாக ஒரு நாட்டின் இளைஞர் சக்தியை போரிட்டுதான் அழிக்க வேண்டும் என்ற நிலை இப்போது இல்லை. அந்த வேலையைத்தான் இணையம் மூலம் பரவும் ஆன்லைன் விளையாட்டுகள் செய்கின்றன. இந்த ஆன்லைன் விளையாட்டுகள் இளைஞர்களின் சிந்தனையை முற்றிலுமாக சிதைத்து அவர்களை தற்கொலை முடிவுக்குத் தள்ளுகின்றன. இளைஞர்கள்தான் ஒரு நாட்டின் முக்கியமான வளம், அந்த வளங்களின் சிந்தனைகளை மேம்படுத்த அவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் புத்தகத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன என்றார்.

முன்னதாக சிங்கப்பூரைச் சேர்ந்த கவிமாலை என்ற அமைப்பின் தலைவர் இறை மதியழகன் பேசினார். இந்த நிகழ்வில் புத்தக ஆர்வலர்கள் பலர் பங்கேற்றனர்.

## புத்தகங்களின் விலை உயர்ந்தாலும் விற்பனை குறையவில்லை

ஈரோடு, ஆக.6: வரி மற்றும் மூலப்பொருள்களின் விலை உயர்வு போன்ற காரணங்களால் புத்தகங்களின் விலை உயர்ந்தாலும் விற்பனை குறையவில்லை என பதிப்பாளர்கள் தெரிவித்தனர்.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் நடத்தப்படும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் கல்வி நிறுவனங்கள், தனி நபர்கள், பள்ளிக் குழந்தைகள் என பல்வேறு தரப்பினர் நூல்களை வாங்கிச் சென்றாலும், புத்தகங்களின் விலை உயர்ந்துள்ளது என்ற கருத்து நிலவுகிறது.

இதுகுறித்து பதிப்பான்ரகள் கூறியதாவது: புத்தகங்களுக்கு பயன்படுத்தப்படும் தாள், அட்டை, பசை போன்றவைகளுக்கு 12 சதவீதம் ஜிஎஸ்டியும், பைண்டிங், மூலப்பொருள்களுக்கும், ஜாப் ஓர்க் செய்வதற்கு 18 சதவீதம் ஜிஎஸ்டியும் விதிக்கப்பட்டுள்ளது. புத்தகங்களுக்கு வரி இல்லை என்றாலும், மூலப்பொருள், தயாரிப்புக்கான வரியால் புத்தக விலை 40 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

இருப்பினும் சென்னையைவிட இங்கு புத்தகம் வாங்குவோர் அதிகமாக வருகின்றனர். பள்ளி, கல்லூரி மாணவர்கள் அதிகமாக நூல்களை வாங்கிச் செல்கின்றனர். கடந்த 8 ஆண்டுகளில் தமிழக அரசு சார்பில் 14 பேரின் நூல்கள் மட்டுமே நாட்டுடமை ஆக்கப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய ஆட்சியின் போது 124 நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதால் பல்வேறு பதிப்புகளில் அந்நூல்கள் குறைந்த விலையில் வெளிவந்தன என்றனர்.

**மென்பொருள், பொறியியல் பாடங்களுக்கான சி.டி-கள்:** இன்போ மீடியா என்ற அரங்கில் மென்பொருள் குறித்த சிடிக்கள் 43 தலைப்புகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அதன் செயல்பாடுகள் ஆங்கிலத்தில் இருந்தாலும், பேச்சு வடிவிலான விளக்கம் தமிழில் உள்ளதால் நாமே மென்பொருளை அப்டேட் செய்யலாம் என பலரும் வாங்கிச் செல்கின்றனர்.

தவிர மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை சார்பில் ஐஐடி பேராசிரியர்களை கொண்டு பி.இ, பி.டெக் மாணவர்களுக்கான அனைத்து பாடங்களுக்குமான சிடிக்கள் அதிகமாக விற்பனையாகிறது.

இயல்வாகை என்ற அரங்கில் 50 தலைப்புகளில் நம்மாழ்வார் உள்ளிட்ட இயற்கை விவசாயிகள், விஞ்ஞானிகளின் நூல்கள் விற்பனைக்கு உள்ளன. ப்ராடிஜி என்ற அரங்கில் ரூ.60 இல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலைவர்கள், விஞ்ஞானிகள், கண்டுபிடிப்புகள், தானியங்கள், உணவுத் தயாரிப்பு முறைகள் என பல்வேறு சிறிய புத்தகங்கள் அதிகமாக விற்பனையாகின்றன.

மேலும் அரசு சார்பிலான பப்ளிகேஷன் டிவிஷன், தமிழ்ப் பல்கலைக் கழகம், புக் டிரஸ்ட் போன்ற அரங்குகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் புத்தகங்களை வாங்கினர்.

## புத்தகத் திருவிழா மூலம் சமூக மாற்றத்துக்கு விதை தூவுகிறோம்

த.ஸ்டாலின் குணசேகரன்

ஈரோடு, ஆக. 6: ஈரோடு புத்தகத் திருவிழாவை வணிகமாக கருதாமல் சமூக மாற்றத்துக்கு விதை தூவும் திருவிழா என மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன்.

ஈரோடு புத்தகத் திருவிழாவையொட்டி செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற நிகழ்வுக்கு தொழிலதிபர் வி.ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். தொழிலதிபர்கள் வீ.கே.செல்வகுமார், அழகன் கருப்பண்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நக்கீரன் இதழ் ஆசிரியர் நக்கீரன் கோபால் அளவுக்கு மீறினால் என்ற தலைப்பிலும், சென்னை தமிழ் மைய இயக்குநர் ஜெகத் கஸ்பர் தலை நிமிர் காலம் என்ற தலைப்பிலும் பேசினர்.

இதில் த.ஸ்டாலின் குணசேகரன் பேசியதாவது: கடந்த 2005 ஆம் ஆண்டு ஈரோட்டில் 75 அரங்குகளோடு தொடங்கிய புத்தகத் திருவிழா தொடங்கியது. தற்போது 230 அரங்குகளாக விரிவாக்கி, மாநிலம் தழுவிய வாசிப்பு இயக்கத்தை வளப்படுத்தி வருகிறது மக்கள் சிந்தனைப் பேரவை.

சமூகம் மீது அக்கறை கொண்டவர்களை ஒன்றிணைத்து, அவர்கள் மூலம் சமூகத்தை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கும் ஒரு அமைப்புதான் மக்கள் சிந்தனைப் பேரவை. அதில் முதன்மையானதாக ஈரோடு புத்தகத் திருவிழா இருக்கிறது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஐந்தாம் ஆண்டைத் தொட்டபோது, மேலும் சிறப்பாக கொண்டாட திட்டமிட்டோம். அவ்வகையில் மக்கள் மனங்களில் நீங்கா இடம்பெற்ற அப்துல் கலாமை அழைத்து 'வீட்டுக்கு ஒரு நூலகம்' எனும் தலைப்பில் பேச வைத்தோம். ஒரு லட்சம் பேர் தன்னெழுச்சியாகத் திரண்டார்கள்.

ஈரோடு புத்தகத் திருவிழாவை வெறும் புத்தக வணிக மையமாக நான் கருதவில்லை. புத்தகங்கள் சமூகத்தை மாற்றி அமைக்கும். சமூக மாற்றத்துக்கு விதை தூவும் திருவிழாதான் இது என்றார்.





சிந்தனை அரங்க நிகழ்வில் பேசுகிறார் மக்கள் சிந்தனை பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன்.

## நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்க தனியார் பள்ளி, கல்லூரிகள் ஆர்வம்

ஈரோடு, ஆக.6: ஈரோடு புத்தகத் திருவிழாவை ஈரோடு மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகள், கல்லூரிகள் நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்கும் களமாக பயன்படுத்தி வருகின்றன. இதில் நூலகங்களுக்கு புத்தகம் வாங்கும்போது சில பதிப்பாளர்கள் அதிகபட்சமாக 50 சதவீதம் வரை கட்டண சலுகை அளிக்கின்றனர்.

ஈரோடு மாநகரின் அடையாளங்களில் ஒன்றான புத்தகத் திருவிழா ஆகஸ்ட் 2 ஆம் தேதி தொடங்கி 13 ஆம் தேதி வரை ஈரோடு வஉசி பூங்கா மைதானத்தில் நடக்கிறது. மக்கள் சிந்தனைப் பேரவை நடத்தும் இந்த புத்தகத் திருவிழாவில் இந்த ஆண்டு 230 புத்தக அரங்குகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ், ஆங்கிலம் தவிர்த்து, இந்தியாவின் பெரும்பாலான பிராந்திய மொழிப் புத்தகங்களும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. இந்த மொழிகளில் பல புதிய எழுத்தாளர்களின் புத்தகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் வாழும் தமிழர்கள் இந்தப் புத்தகக் கண்காட்சி குறித்து ஏராளமான தகவல்களை தொடர்ந்து கேட்டு வருவதாகவும், ஆண்டுதோறும் தமிழகம் வரும் வெளிநாடு வாழ் தமிழர்கள் பலர் தங்களது பயணத் திட்டங்களை இந்தப் புத்தகக் கண்காட்சியை ஒட்டி அமைத்துக் கொண்டுள்ளதாகவும் கூறுகிறார் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன்.

**புதிய புத்தகங்களுக்கு தனி அரங்கு:** புத்தகங்கள் வாங்க பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஏராளமானோர் வருகின்றனர். அதில் ஆண்டுதோறும் வரும் ஆசிரியர்கள் சிலர் அரங்குகளில் புதிய புத்தகங்கள் கண்ணில் படவில்லை என்றனர்.

இதுகுறித்து ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியைச் சேர்ந்த தனியார் பள்ளி ஆசிரியர்கள் கூறியதாவது:

புத்தக அரங்குகளில் திரும்பிய பக்கம் எல்லாம் தெனாலிராமன் கதைகள், ஈசாப் குட்டிக் கதைகள், ஜென் கதைகள், பரமார்த்த குரு கதைகள், சமையல் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், ஜோதிடம் போன்ற புத்தகங்கள் இருக்கின்றன. குறிப்பாக ரூ.10 முதல் ரூ.300 வரை பல வகையான ஜென் குட்டிக் கதைகளின் தொகுப்புகளை கிட்டத்தட்ட எல்லா பதிப்பகங்களும் வெளியிட்டுள்ளன.

வரும் ஆண்டுகளில் புதிய வரவுகளுக்காக மட்டும் தனியாக ஒரு அரங்கு அமைக்கலாம். இதனை மக்கள் சிந்தனைப் பேரவையே நிர்வகித்து வாசகர்களுக்கு வழிகாட்டலாம். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் புத்தகங்களை தேடுவதற்கான நேரத்தை குறைக்கும் என்றார்.

**நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்கிய தனியார் பள்ளி, கல்லூரிகள்:** புத்தகத் திருவிழாவுக்கு மாணவர்களை அழைத்து வரும் பள்ளி, கல்லூரி நிர்வாகத்தினர் தங்களது நூலங்களுக்கு புத்தகங்களை வாங்கிச் செல்கின்றனர்.

இதுகுறித்து ஈரோடு மாவட்டம் அரச்சலூர் நவரசம் மகளிர் கல்லூரி நூலகர் எஸ்.சுபா தெரிவித்ததாவது, ஆண்டுதோறும் புத்தகத் திருவிழாவுக்கு மாணவிகளை அழைத்து வருகிறோம். காலை 11 மணிக்கு வந்தால் மாலை 3 மணி வரை அரங்கில் உள்ள புத்தகங்களை மாணவிகள் தேர்வு செய்து வாங்கிச் செல்கின்றனர்.

தவிர கல்லூரி நிர்வாகம் சார்பில் நூலகத்துக்கு புத்தகம் வாங்க நிதி அளிக்கின்றனர். ஆண்டுதோறும் ரூ.1 லட்சம் மதிப்பில் புத்தகங்களை வாங்கிச் செல்கிறோம். இந்த ஆண்டு கல்லூரியில் இருந்து 850 மாணவிகளை அழைத்து வந்துள்ளோம். இலக்கியம், போட்டித் தேர்வுக்கு உதவும் புத்தகங்களை அதிக எண்ணிக்கையில் வாங்கியுள்ளோம் என்றார்.

இதுகுறித்து கோபியை சேர்ந்த அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள் சிலர் நூலகத்துக்கு புத்தகங்களை வாங்கிச் சென்றனர். இத்தனை புத்தகங்களை பள்ளி மாணவர்கள் படிக்கிறார்களா என்று ஆசிரியர்களிடம் கேட்டபோது, 9,10,11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களை தவிர்த்து பிற புக்ககங்களை படிக்க நேரம் கிடைப்பதில்லை.

இதனால் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நூலகத்தை பயன்படுத்த முயற்சி எடுத்து வருகிறோம். அதற்காக தேசத் தலைவர்கள் குறித்த புத்தகங்கள், வேளாண்மை, வரலாறு, இலக்கியப் புத்தகங்களை வாங்கிச் செல்கிறோம் என்றனர்.

**அரசு நூலகங்களுக்கு புத்தகம் வாங்க வலியுறுத்தல்:** புத்தகத் திருவிழாக்களில் அரசு நூலகங்களுக்கு புத்தகம் வாங்க அரசு ஆணையிட வேண்டும் என பதிப்பாளர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து பதிப்பாளர்கள் சிலர் கூறியதாவது:

கணிசமான அளவுக்கு 2011 ஆம் ஆண்டு வரையில் தமிழ்ப் பதிப்பாளர்களிடம் இருந்து நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்கப்பட்டன. 2011 இல் இருந்து இதில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. கடந்த 8 ஆண்டுகளாக இந்தத் தொய்வு தொடருகிறது.

இந்த நிலை விரைவில் களையப்படுவதன் மூலம் பதிப்பாளர்கள் மட்டுமல்லாமல் அரசு நூலகங்களையும் வலுப்படுத்த உதவும் என்றனர்.





புத்தக அரங்கில் திரண்ட பள்ளி மாணவர்கள்.

ALMANAC TODAY

Wednesday: 07/08/19 • Year: Vikari. • Aadi: Valar Pirai • Shravan: Shukla Paksha. • Tithi: Saptami till 11-44hrs. • Nakshatra (Star): Swati till 21-35 hrs. Moon in Tula. Today is Goswami Tulsi Jayanti. • Rahukaalam: 12:00 - 13:30 • Yamagantam: 07:30 - 09:00 • Gulikakalam: 10:30 - 12:00

ERODE WEATHER

MIN 26°C | MAX 34°C

FORECAST Scattered thunderstorms

Sunrise 6.08 am
Sunset 6.42 pm
Moonrise 11.57 am
Moonset 12.02 pm



15 years on, Erode's book fair still draws thousands of book lovers for its huge collection and well-planned meetings that host eminent personalities

# ERODE'S OWN BOOK FEST

EXPRESS NEWS SERVICE @ Erode

Merhaps it was the title — Erode Book Festival — that did, for the book fair being conducted by the social service organisation Makkal Sindhanai Peravai at VOC ground had all the pomp and gaiety to rival the likes of any major festival. Since it began on August 2, the fair has drawn thousands of people from across the town and is giving them (especially, the children) a chance to see crores of books accumulated in one place.

As per its tradition for the past 15 years, the organisation holds the book fair from August 2 to 13 — between Aadi Perukku festival and Independence Day. Over a decade ago, the fair started out as a modest affair with just 75 stalls in a wedding hall. However, it was the first of its kinds in the district then. Given the welcome it received from various educational institutions and the people in the district and neighbouring ones, the fair was moved to the larger VOC ground; 75 stalls grew to be 230-240.

Since then, it has attracted lakhs of school and college students and the fair's average sales has been recorded at ₹5-6 crore every year.

Another significant feature of the fair is that it is entirely run by Peravai's members — mostly college students who volunteer their services. They sport a yellow T-shirt on all days of the fair. This is a major reason why there is no entry fee for the event.

**Honours and awards**

Even before the book fair initiative, the Peravai had made a name for itself by celebrating the birth anniversary of the poet Bharathi on December 11 every year with a rally. It also uses this occasion to give away the 'Poet Bharathi Award' to Tamil writers. It also recognised government school teachers who had achieved 100 per cent results in public exams.


**By a writer**


As another distinction, the Peravai's President — lawyer T Stalin Gunasekaran — is known for writing several books, including a two-volume compilation of Viduthalai Poril Thamizhagam (Tamil Nadu in the War for Freedom).

He had been a good orator since his college days and has travelled to many countries, including Russia, to participate in literary events. He has addressed hundreds of college functions over the past 35 years.

## *Speaker schedule*

**The book fair's major distinction is the several dignitaries who speak at the event every year. Hema, a college librarian, recalls that even the late president A P J Abdul Kalam had spoken at the fair. This year too, several eminent personalities are set participating in the fair at the 6 pm meeting every day.**



Books and book lovers aplenty at this year's Erode Book Festival conducted by Makkal Sindhanai Peravai at VOC ground | EXPRESS



**Save and take**

The Peravai has been trying to promote the habit of saving among students. It gives hundials worth ₹12 for just ₹5. Students are told to save all year ro and use the money to buy books. Peravai members give kids a slip based on the money they have saved. Based on this, they get a discount at the stalls.

## Decades on, Kalki's novels still a fair favourite

EXPRESS NEWS SERVICE @ Erode

EVEN amidst the number of new writers contributing the literary world almost every day, old classics and historical novels continue to be a crowd favourite every year. People's interest in veteran writer Kalki's books remains unabated. This year too, many stalls at the fair had his books on display.

There were many takers for books like Ponniyin Selvan, Sivakamiyin Sabatham, Alai Osai, etc., though they were written nearly 70 years ago. Stall owners are of the opinion that no one can compare to the late author in terms of writing skills.



Novels of veteran writer Kalki on display at the Erode Book Festival | EXPRESS

It is evident enough in the fact that even the present generation that has been accused of being addicted to cell phones, the internet and computer games, loves his works, they add.

**Fair favourites**

Books of Pudumaipithan, Bharathi, Barathidasan, Annadurai, Karunanidhi, Chandilyan, Balakumaran, Kannadasan, Sujatha, Jayakanthan, and Vairamuthu too were sold in large numbers. Historical novels and biographies had many takers. Mahatma Gandhi's Sathya Sodhanai and the late president Abdul Kalam's Agni Siragugal were also well received. As usual, Thirukkural, Kamba Ramayanam, Purananuru, Silappathigaram, etc., were bought by people.

## Publishing sector seeks exemption from GST

EXPRESS NEWS SERVICE @ Erode

WHILE the rise in the price of books has not discouraged the public from buying more of them, publishers have expressed worry over the rising production costs and sought some welfare measures for the book publishing sector.

They, on condition of anonymity, pointed out that though there is no direct GST on books, there is five to 18 per cent tax on paper, printing ink, binding materials, glue, wrappers, etc. Job works is taxed another 12 per cent. All such taxes are incorporated in the price of books, they pointed out.

Hence, the industry is walking on tight rope. Ultimately, the publishers are not able to give royalty to the writers every year. An initial amount is given to procure the rights to publish the book. When the publisher is not able to keep up the payment, they stop publishing the book. This would greatly affect writers. Hence, writers -- except for the popular ones -- keep from questioning the publishers just to get their books out on the stalls. This is why the government should exempt the goods and materials used in publishing books from tax, they suggested.

# ‘ஆதி சூழ் உலகில் நாம் வெகு காலத்துக்கு முன் வாழ்ந்தவர்கள்’

ஈரோடு, ஆக. 8–

ஈரோட்டில் நடந்து வரும் புத்தக திருவிழாவில், நேற்று மாலை சொற்பொழிவு நிகழ்வு, யூ.ஆர்.சி., நிறுவனங்களின் நிர்வாகி தேவராஜன் தலைமையில் நடந்தது.

‘உடல் மட்டும் அல்ல பெண்’ என்ற தலைப்பில், நடிகை ரோகிணி பேசியதாவது: சாதித்த பெண்களுக்கும், ஆண்களுக்கும் கிடைக்கும் வாய்ப்புகள் அனைத்து பெண்களுக்கும் கிடைப்பதில்லை. ஆண்களின் சாதனை என்பது குறிப்பிட்ட பணிகளில் என்றாகிறது. ஆனால், பெண்கள் என்பவர் எல்லா பணிகளையும், பொறுப்புகளையும் கடந்து வருவதால், அவரது சாதனை வெளியே தெரிவதில்லை.

சுடிதார் உள்ளிட்ட சில உடைகள் வசதியானது. ஆண்களின் கண்கள், அப்போது ஒரு வகையாக பழக்கப்படுகிறது. வேறு ஆடைகளுக்கு பெண்கள் செல்லும்போது, ஆண்களின் பார்வை மாறுபடுகிறது என, சிலர் கூறுகின்றனர். அவ்வாறு இல்லாமல், இந்த ஆடைகள்தான் எனக்கு சவுகரியமாக இருக்கிறது எனக்கூறி, ஆண்களின் பார்வையை பழக்கப்படுத்துங்கள்.



ஈரோட்டில் நடந்து வரும் புத்தக திருவிழாவில், நடிகர் பொன்வண்ணன், நடிகை ரோகிணி ஆகியோர் பேசினர்.

ஆண், பெண் இடையே இதுபோன்ற பல பிரச்னைகள் இருந்தாலும், பிரச்னைகளை உருவாக்குவதில் சமூகமும் முக்கிய பங்காற்றுகிறது. அதை கடந்து பெண்கள் சாதிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

‘ஆதி சூழ் உலகு’ என்ற தலைப்பில், நடிகர் பொன்வண்ணன் பேசியதாவது:

நொய்யல் ஆற்றின் மறுபுறம் கொடுமணலில் நடந்த அகழ்வாராய்ச்சியால், 2,000 ஆண்டுகளுக்கு முன்பே நாம், 8,000 கி.மீ., கடந்து எகிப்து, பாலஸ்தீனம், ஜெருசலேம் என பல நாடுகளுடன் வாணிபம் செய்ததை உறுதி செய்ய முடிகிறது. இங்கு கண்டெடுக்கப்படும் மணிகள், பொருட்கள், குறிப்புகள், நாம் வாணிபம் செய்த நாடுகளிலும் கண்டெடுக்கப்பட்டு, உறுதி செய்துள்ளது.

ஆங்கிலேயர்கள், பாகிஸ்தான் வழியாக இமயமலைப்பகுதியில் பாதை அமைக்க தோண்டியபோது, அங்கு நாகரீகமான வீடுகள், அடுக்கு மாடி குடியிருப்புகள், கழிவு நீர் வெளியேறும் குழாய்கள், அதில் வரும் நீர் செல்ல வடிகால்கள், அந்த வடிகால் சென்றடையும் பொதுக்குளமும் இருந்ததை காண முடிகிறது. அதே அமைப்பில்தான் நாம், இங்கும் கட்டமைத்துள்ளோம்.

கொடுமணலில் நாம் கண்டறிந்தவை அனைத்தும், அங்கும் இருந்துள்ளது. இதன் மூலம், நாம் இமயமலை பகுதியிலும் வாழ்ந்து, இங்கும் வந்துள்ளோம் என்பதை அறிய முடிகிறது. வரலாற்று பதிவுகள், நாம் விட்டு சென்றவைகளின் உறுதிப்பாடுகளை வைத்து பார்க்கும்போது, நாம் ஆதி சூழ் உலகில் வெகுகாலத்துக்கு முன் வாழ்ந்தவர்கள் என்பதை உறுதி செய்ய முடிகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்



# ஈரோடு புத்தகத் திருவிழா 2019

## குழந்தை பிறப்பிலேயே ஆண், பெண் பாகுபாடு நிலைநிறுத்தப்படுகிறது

**நடிகை ரோகினி**





சிந்தனை அரங்க நிகழ்வில் பேசுகிறார் நடிகை ரோகினி. (வலது) நிகழ்வில் பங்கேற்ற பொதுமக்கள்.

**ஈரோடு, ஆக. 7:** குழந்தை பிறப்பிலேயே ஆண், பெண் பாகுபாடு நிலைநிறுத்தப்படுகிறது என்றார் நடிகை ரோகிணி.

மக்கள் சிந்தனைப் பேரவை மூலம் நடத்தப்படும் ஈரோடு புத்தகத் திருவிழா கடந்த 2 ஆம் தேதி தொடங்கி வரும் 13 ஆம் தேதி வரை நடக்கிறது. தினமும் மாலையில் சிந்தனை அரங்க நிகழ்வு நடைபெற்று வருகிறது.

புதன்கிழமை மாலை நடைபெற்றசிந்தனை அரங்கநிகழ்வுக்கு யுஆர்சி பழனியம்மாள் மெட்ரிக். பள்ளி செயலாளர் சி.தேவராஜன் தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார்.

இதில், 'உடல் மட்டும் அல்ல பெண்' என்ற தலைப்பில் நடிகை ரோகிணி பேசியதாவது:

குழந்தை பிறப்பிலேயே ஆண், பெண் பாகுபாடு நிலைநிறுத்தப்படுகிறது. பெண் என்பவள் என்னுடைய ஒரு சொத்து, அந்த சொத்தை நான் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்ற எண்ணம்தான் ஆண்களிடம் உள்ளது. ஆண் குழந்தைகளை வீட்டு வேலை செய்வதற்கும், குழந்தை வளர்ப்புக்கும் தயார்படுத்துவது கட்டாயமாக்க வேண்டும். அதில் தேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே திருமணத்துக்கு தகுதியானவர் என்ற சட்டத்தை கொண்டுவர வேண்டும் என தமிழ்ச்செல்வன் 'தனது எசப்பாட்டு' என்ற நூலில் சொல்லி இருப்பார்.

குழந்தை வளர்ப்பு, பெண்கள் வீட்டில் செய்யும் அத்தனை வேலைகளையும் செய்யும்போதுதான், எவையெல்லாம் நாம் சர்வ சாதாரணமானதாக எடுத்துக் கொள்கிறோமோ அவை எவையும் சாதாரணமான விஷயங்கள் இல்லை என்பதை ஆண் உணர்கிறான். வீட்டில் அனைத்து வேலைகளையும் பகிர்ந்து கொண்டு செய்திருக்கிற ஆண்கள், இன்னொரு பெண் மீது தவறான பார்வை, தொடுதல், பேசுதல் போன்ற செயல்களை செய்ய முடியாது என நம்புகிறேன்.

பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் வன்முறைகள் நடக்கும் போது ஆண் குழந்தையை சரியாக வளர்க்கவில்லை என குற்றத்தை சுமத்துகிறோம். ஆண் குழந்தைகளை வீட்டு வேலைகள் செய்ய வைத்தால் பாலியல் வன்முறைகள் குறைய சாத்தியம் இருக்கிறது. ஆண் என்றால் இந்த உணர்ச்சிதான் இருக்கும், பெண் என்றால் இந்த உணர்ச்சிதான் இருக்கும் என்ற அறிவியல் ரீதியான சான்றும் இல்லை.

ஆண்களின் பேரில் மிக, மிக அதிகமாக அழுத்தங்கள் இருக்கின்றன. அதனை மறுப்பதற்கில்லை. ஆணாக இருப்பது மிகவும் கடினமானது. அழக்கூடாது, சம்பாதித்தே ஆக வேண்டும், வேலைக்கு செல்ல வேண்டும் என்ற கட்டாயம் ஆணுக்கு உள்ளது. பெண் செய்யும் வேலையை ஆண் செய்தால் சமூகத்தின் விமர்சனத்துக்கு ஆண் உள்ளாகிறான். அதுவும் ஆணுக்கு அழுத்தம்தான். தங்கள் மீது இருக்கும் அழுத்தங்களுக்கு காரணம் பெண்கள் அல்ல, இந்த சமூகம் தான் என்பதை ஆண்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சாதனை பெண்களுக்கும், மற்றவர்களுக்கும் வித்தியாசம் வாய்ப்புதான். அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பு மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை. பெண்ணுக்கும், ஆணுக்கும் சமமான வாய்ப்பு கிடைப்பதில்லை. பெண்ணின் சாதனை என்பது ஆண் சாதனையைக் காட்டிலும் 10 மடங்கு பெரியது என்ற பெருமைக்குரியது என்றார்.

'ஆதி சூழ் உலகு' என்ற தலைப்பில் நடிகர் பொன்வண்ணன் பேசியதாவது:

என்ன என்ற தேடலால் மொழி, பேச்சு, நாடு, நாகரிகம் என அனைத்தும் பிறந்தது. நொய்யல் ஆற்றின் மறுபுறம் கொடுமணலில் நடந்த அகழ்வாராய்ச்சியால் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே நாம் 8,000 கி.மீ கடந்து எகிப்து, பாலஸ்தீனம், ஜெருசலேம் என பல நாடுகளுடன் வாணிபம் செய்ததை உறுதி செய்ய முடிகிறது. இங்கு கண்டெடுக்கப்படும் மணிகள், பொருள்கள், குறிப்புகள், நாம் வாணிபம் செய்த நாடுகளிலும் கண்டெடுக்கப்பட்டு உறுதி செய்துள்ளது.

வாணிபம், வாழ்க்கை முறை, கூட்டு அமைப்பு போன்றவற்றை வைத்துப் பார்த்தால், நாம் ஆதி சூழ் உலகில் வாழ்ந்ததை உறுதி செய்கிறது. ராஜராஜ சோழன் கி.பி. 1,000 ஆம் ஆண்டிலும், அவரது மகன் ராஜேந்திர சோழன் 1,100 ஆண்டிலும் வாழ்ந்தனர். வீராணம் ஏரியை, இலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட அடிமைகளை வைத்து தோண்டினார் என்பது வரலாறாக உள்ளது. அதற்கு முன் சிந்து சமவெளி நாகரிகம் தோன்றினாலும், அந்த நாகரிகம் 400 ஆண்டுகளுக்கு முன்புதான் கண்டறியப்படுகிறது.

ஆங்கிலேயர்கள், பாகிஸ்தான் வழியாக இமயமலைப் பகுதியில் பாதை அமைக்க தோண்டியபோது அங்கு நாகரிகமான வீடுகள், அடுக்கு மாடி குடியிருப்புகள், கழிவு நீர் வெளியேறும் குழாய்கள், பொதுக்குளம் இருந்ததைக் காண முடிகிறது. இங்கு கொடுமணலில் நாம் கண்டறிந்தவை அனைத்தும் அங்கும் இருந்துள்ளன. இதன் மூலம் நாம் இமயமலை பகுதியிலும் வாழ்ந்து வந்துள்ளோம் என்பதை அறிய முடிகிறது என்றார்.

**புத்தகத் திருவிழாவில் இன்று**

ஈரோடு புத்தகத் திருவிழாவில் வியாழக்கிழமை (ஆக.8) நடைபெறும் மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வில் முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.பி.கே.வாசுகி, சக்தி மசாலா நிறுவனங்களின் இயக்குநர் சாந்தி துரைசாமி உள்ளிட்ட ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 15 பெண் ஆளுமைகளைப் பாராட்டும் நிகழ்வு நடைபெறுகிறது. இந்த நிகழ்வை முன்னிட்டு பெண் எழுத்தாளர்கள், பெண் ஆளுமைகள் குறித்த தனி புத்தக அரங்கு அமைக்கப்படவுள்ளது.

## மொழியாக்கம் என்பது எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்

**எஸ்.வி.ராஜதுரை**



புத்தகங்களை வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் வெளியிட அவற்றை பெற்றுக்கொள்கிறார் ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் ப.கமலக்கண்ணன்.

**ஈரோடு, ஆக.7:** மொழியாக்கப் படைப்புகள் எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும் என்றார் எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோட்டில் நடைபெற்று வரும் 15ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவையொட்டி, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் 29 புதிய நூல்களை வெளியிட்டுள்ளது. இந்த நூல்கள் வெளியீட்டு விழா ஈரோட்டில் புதன்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, ஈரோடு வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் தலைமை வகித்து புதிய நூல்களை வெளியிட்டார். அவற்றை ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் ப.கமலக்கண்ணன் பெற்றுக்கொண்டார்.

முன்னதாக மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தொடக்கவுரையாற்றினார். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன் முன்னிலை வகித்தார். எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா சிறப்புரையாற்றினார்.

விழாவில் எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை ஏற்புரையில் பேசியதாவது: கார்ல் மார்க்ஸ் சிந்தாந்தங்கள், சிந்தனைகளை தமிழில் முதலில் அறிமுகம் செய்த பெருமை பெரியாருக்கே உண்டு. மார்க்ஸ் கொள்கை, கோட்பாடுகளை, வாழ்க்கை வரலாற்றை பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் மொழியாக்கம் செய்து தனது பகுத்தறிவு, குடியரசு பத்திரிகைகளில் விரிவாக வெளியிட்டவர் பெரியார். கார்ல் மார்க்ஸ் பெயரை பாரதி தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அடுத்து 1940-களில் கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்றை அருமையான நடையில் எழுதியிருந்த சாமிநாத சர்மாவும் நினைவு கூரத்தக்கவர்.

மொழியாக்கம் என்பது எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். அதேபோல் பழைய ஆவணங்களை மறுபதிப்பு செய்யும்போது மூலத்தை சிதைக்காமலும், அலங்காரமெதுவும் இன்றியும் மறுபதிப்பு செய்ய வேண்டும். அறியாமை, மூடநம்பிக்கை, சாதிய பாகுபாடுகள் போன்றவற்றில் மக்கள் மூழ்கிக் கிடந்து வந்தால் பாசிசம் எளிதாக வந்து அமர்ந்து கொள்ளும். இதுகுறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்கள் மத்தியில் அறிவியல் உணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது என்றார்.

விழாவில் உயிர் எழுத்து இதழ் ஆசிரியர் கதிர் செந்தில் பாராட்டப்பட்டார். முன்னதாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பொதுமேலாளர் தி.ரத்தினசபாபதி வரவேற்றார். நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் கோவை மண்டல மேலாளர் ஆர். ரங்கராஜன் நன்றி கூறினார்.

## இலங்கை தமிழ்ப் படைப்புகள் மாற்று தளத்தில் பயணிக்கத் தொடங்கியுள்ளன

**பேராசிரியர் வ.மகேஸ்வரன்**



நிகழ்வில் பேசுகிறார் இலங்கை கண்டி பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் வ.மகேஸ்வரன்.

**ஈரோடு, ஆக. 7:** படைப்புகள் மாற்றுக் கருத்துகள், புதிய சிந்தனைகளை உள்வாங்கி கொண்டிருக்கின்றன. இத்தகைய படைப்புகள் இலங்கை தமிழ் இலக்கியங்கள் புதிய தளத்தில் பயணிக்கத் தொடங்கியுள்ளதையே உணர்த்துகிறது என்றார் இலங்கை கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் வ.மகேஸ்வரன்.

ஈரோடு புத்தகத் திருவிழாவின் உலகத் தமிழர் படைப்பரங்கில் சிறப்பு நிகழ்வு புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தலைமை வகித்தார். இதில் இலங்கை, கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் வ.மகேஸ்வரன் பங்கேற்று 'இலங்கை தமிழ்ப் படைப்புகள் நோக்கும் போக்கும்' என்ற தலைப்பில் பேசியதாவது:

இலங்கை தமிழ்ச் சமூகம் நீண்ட கால இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டது. இலங்கை தமிழ்ச் சமூகப் படைப்புகளை 19 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது, பிந்தையது என இரண்டாகப் பிரிக்கலாம். 19 ஆம் நூற்றாண்டு வரையிலான இலக்கிய போக்கு என்பது தமிழ்நாட்டு வரலாற்றுடன் இணைந்த போக்காக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டின் இலக்கிய போக்குடன் ஒத்துப்போகின்ற இலக்கிய முறைமைதான் இருந்தது. 19 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் இலங்கை தமிழ் இலக்கியம் என்ற முறைமை வித்தியாசமாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. 19 ஆம் நூற்றாண்டுக்கு பிறகு இலங்கை சுதந்திரம் பெற்றது. அதன்பிறகு இலங்கையில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அரசியல் மிக முக்கியமான விஷயமாக வந்துள்ளது. அரசியலை அடியொற்றிதான் ஈழத்து தமிழ் இலக்கியங்கள் பல்வேறு தளங்களில் நிகழ்ந்திருக்கிறது. இலங்கை அரசுகள் கொண்டு வரும் சட்டங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது அங்கு இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. பாரதியார், பாரதிதாசன் வழியிலான படைப்பாளர்கள் சமூக சீர்திருத்தப் படைப்புகளை உருவாக்கினர்.

1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு இலக்கிய போக்குகளில் மாற்றம் அடைந்திருக்கின்றன. 1956 இல் சிங்களம் மட்டுமே அரசு மொழி என்ற சட்டத்தை அரசு கொண்டு வந்தபோது அரசியல், மொழி சார்ந்து தமிழர்கள் தமிழ் மொழியை பாதுக்காக்க எதிர் வினையாற்றும் நிலை ஏற்பட்டது. இந்த கால கட்டத்தின் தமிழர்களின் அடையாள அரசியல் என்பது இலக்கியம், கவிதைகளின் மூலம் வந்தது. மேலும் முற்போக்கு சார்ந்த இலக்கியங்கள் ஏராளமாக வரத் தொடங்கின. இந்த இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை உள்ளடக்கி இருந்தன.

இந்த காலகட்டத்தில் வந்த இலக்கிய படைப்புகள் இலங்கை தமிழ்ச் சூழலில் பெரிய வெளிச்சத்தை ஏற்படுத்தின. இந்த காலகட்டத்தில் இலக்கியப் படைப்புகளில் ஏற்பட்ட மாற்றம்தான் ஈழத்தின் தமிழ் இலக்கியங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

1980 ஆண்டுக்கு பிறகு போர் சூழல் குறித்த இலக்கியங்கள் ஏராளமாக வந்தன. போர் அவலம் என்பது 30 ஆண்டுகாலமாக தவிர்க்க முடியாததாக இருந்தது. இந்த கால கட்டத்தில் ஏராளமான ஆண், பெண் படைப்பாளர்கள் உருவாகி போர் சூழல், தமிழ் மக்களின் துயரம் குறித்த படைப்புகளை உருவாக்கினர். போரில் ஈடுபட்டவர்களும், போரை வெளியில் நின்று பார்த்தவர்களும் ஏராளமான புதிய படைப்புகளை உருவாக்கினர்.

போருக்குப் பிறகு இப்போது ஏராளமான புலம் பெயர் இலக்கியங்கள் உருவாகின. இந்த இலக்கியங்கள் வாழ்விடத்தை தொலைத்த அவலத்தையும், பிழைப்பு தேடிச் சென்ற நாடுகளில் படும் துயரத்தையும் முன்னிறுத்தி இந்தப் படைப்புகள் உருவாகி வருகின்றன. புலம் பெயர் இலக்கியங்கள் புதிய வரவாக உள்ளது. இந்த இலக்கியங்கள் போர்க்கால இலக்கியங்களின் தொடர்ச்சியாக வருகிறது. அண்மைக்காலத்தில் பெண்ணியம் சார்ந்த படைப்புகள் அதிகமாக வருகிறது. பெண்கள் சுமக்கும் சுமையில் இருந்து விடுபட்டு மாறுபட்ட தளத்தில் பெண்கள் பயணிக்கும் சூழலை இந்த இலக்கியங்கள் உருவாக்கி வருகின்றன. இப்போது புதிய அலையாக ஏராளமான பெண் படைப்பாளர்கள் உருவாகி வருகின்றனர்.

போர் இலக்கிய, புலம் பெயர் இலக்கிய படைப்புகள் குறைந்துவிட்ட நிலையில் இப்போது போருக்கு பிந்தைய வாழ்வை எவ்வாறு மீள கட்டமைப்பது என்பது தான் இப்போது உள்ள படைப்பாளர்களின் எண்ணத்தில் மேலோங்கியுள்ளது. மேலும் 30 ஆண்டுகளில் சமூக அடையாளங்களை இளைஞர்கள் எவ்வாறு இழந்திருக்கின்றனர் என்பதை உணர்த்தும் படைப்புகள் வர தொடங்கியுள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக கலாசாரம் கேள்விக்குறியாகும் சூழலில் அதனை மீள் கட்டமைப்பது அவசியமாகிறது. இதற்கான படைப்புகளைக் கொண்டு வரும் அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை படைப்பாளர்கள் உணர்ந்துள்ளனர். இப்போது வரும் படைப்புகள் மாற்றுக் கருத்துகள், புதிய சிந்தனைகளை உள்வாங்கி கொண்டிருக்கின்றன. இத்தகைய படைப்புகள் இலங்கை தமிழ் இலக்கியங்கள் புதிய தளத்தை பயணிக்கத் தொடங்கியுள்ளதை உணர்த்துகிறது என்றார்.




புத்தக திருவிழாவில் நடிகர் பொன்வண்ணன் பேசியபோது எடுத்த படம்.

# காலிங்கராயன் வாய்க்காலில் சாக்கடை கலப்பது கவலை அளிக்கிறது

## ஈரோடு புத்தக திருவிழாவில் நடிகர் பொன்வண்ணன் பேச்சு

ஈரோடு, ஆக.8-

காலிங்கராயன் வாய்க்காலில் சாக்கடை கலப்பது கவலை அளிக்கிறது என்று ஈரோடு புத்தக திருவிழாவில் நடிகர் பொன்வண்ணன் பேசினார்.

### பாலியல் துன்புறுத்தல்

மக்கள் சிந்தனை பேரவை சார்பில், ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் புத்தக திருவிழா கடந்த 2-ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதையொட்டி ஒவ்வொரு நாளும் மாலையில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்து வருகிறது. அதன்படி நேற்று நடந்த நிகழ்ச்சிக்கு யு.ஆர்.சி. பழனியம்மாள் மெட்ரிக் மேல்நிலை பள்ளிக்கூட செயலாளர் சி.தேவராஜன் தலைமை தாங்கினார்.

நடிகை ரோகிணி, 'உடல் மட்டும் அல்ல பெண்' என்ற தலைப்பில் பேசும்போது கூறியதாவது:-

வீட்டு வேலைகள் செய்யவும், குழந்தைகளை வளர்க்கவும் ஆண்களை கட்டாயமாக்க வேண்டும். அப்போது தான் ஆண் திருமணத்திற்கு தயார் ஆனவர்கள் என்று அர்த்தம். வீட்டில் அனைத்து வேலைகளையும் ஆண், பெண் பகிர்ந்து கொள்ள வேண்டும். பாலியல் துன்புறுத்தலுக்கு காரணம் ஆண் குழந்தைகளை தாய் சரியாக வளர்க்கவில்லை என்று தாய் மீது குற்றம் சாட்டுகிறோம்.

### மன அழுத்தம்

வீட்டில் அனைத்து வேலைகளையும் ஆண்களை செய்ய வைத்திருந்தால் பாலியல் வன்கொடுமை என்பது நடக்காது. வீரம், ஆளுமை தன்மை இதெல்லாம் ஆண்கள் என்றும், அன்பு, பாசம், பேணுதல் இதெல்லாம் பெண்கள் என்றும் மொழியில் கூறுகிறோம். அதற்கு அறிவியல் ரீதியாக எந்தவித அத்தாட்சியும் இல்லை. எனவே மொழியில் மாற்றம் கொண்டு வரவேண்டும்.' என்றார்.

அதைத்தொடர்ந்து நடிகர் பொன்வண்ணன், 'ஆதி சூழ் உலகு' என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

ஏன் என்ற கேள்வி வந்ததன் விளைவு தான் நெருப்பு, உறவு, நாடு, நாம் தற்போது அனுபவிக்கின்ற அனைத்தும். நாம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கே வியாபாரம் செய்து வந்துள்ளோம் என்பது கொடுமணல் ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது. 8 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள எகிப்து, பாலஸ்தீனம், ஜெருசலேம் போன்ற நாட்டை சேர்ந்தவர்கள் இங்கு வந்து வியாபாரம் செய்துள்ளனர் என்பது இங்கு கிடைத்துள்ள பொருட்களை வைத்து தான்.

சாயப்பட்டறை கழிவுகளும், சாக்கடை கழிவுகளும் காவிரி ஆற்றில் கலக்கிறது. இது சோகம். கேவலம். 1,200 ஆண்டுகளுக்கு முன்பு வீராணம் ஏரி இலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகளால் வெட்டப்பட்டது.

### கவலை அளிக்கிறது

அதன்பின்னர் 50 ஆண்டுகள் கழித்து நொய்யல் ஆறு, பவானி ஆறு வெட்டப்பட்டது. இந்த 2 ஆறுகளும் காவிரி ஆற்றில் கலந்து வந்தது. அதைத்தொடர்ந்து தான், பவானி ஆற்றில் இருந்து பிரித்து காலிங்கராயன் வாய்க்கால் வெட்டப்பட்டது. 40 கிலோ மீட்டர் தொலைவு உள்ள இந்த வாய்க்கால் அனைத்து பகுதிகளும் பாசனம் பெற வேண்டும் என்பதற்காக 80 கிலோ மீட்டராக வளைத்து வெட்டப்பட்டது.

இது ஆரம்பிக்கும் இடத்தில் கடல் பகுதியில் இருந்து 500 மீட்டர் உயரத்திலும், முடியும் இடத்தில் 400 மீட்டர் தாழ்வாகவும் முடிகிறது. 700 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி வெட்டப்பட்ட இந்த வாய்க்காலில் தற்போது சாய கழிவுகளும், சாக்கடை கழிவுகளும் கலப்பது கவலை அளிக்கிறது. இதை நாம் கேவலமாக நினைக்க வேண்டும். இனி இது நடக்கக்கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

## 'தினத்தந்தி அரங்கு'

புத்தக திருவிழாவில் 171-ம் எண் அரங்கில் 'தினத்தந்தி' பதிப்பக வெளியீட்டு புத்தகங்கள் வைக்கப்பட்டு உள்ளன. இங்கு, மகிழ்ச்சியுடன் வாழவைக்கும் இதுவும் கடந்து போகும் என்ற புத்தகம், நமக்குள் சில கேள்விகள், பழைய சோறு, சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம், ஆயிரம் ஆண்டு அதிசயம் தமிழ் சினிமா வரலாறு(பாகம்1), ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு, மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள், உலகை உலுக்கிய வாசகங்கள், கலாம் ஒரு சரித்திரம், 27 நட்சத்திர தலங்கள் பரிகார முறைகள் ஆகிய புத்தகங்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

மேலும் வாழ்வை வளமாக்கும் பூஜை- விரதமுறைகள், இதயம் தொட்ட பழமொழிகள், உடலும் உணவும், நலம்தரும் மூலிகை சமையல், சிகரம் தொடும் சிந்தனைகள், வாருங்கள் சீரடி சாய்பாபாவை தரிசிப்போம், புரட்டிப்போடும் புலன் விசாரணை, இறையருள் தரும் சாதனங்கள், உலகம் பிறந்தது உனக்காக, இதயம் கவர்ந்த இலக்கிய காட்சிகள் உள்ளிட்ட ஏராளமான புத்தகங்கள் 'தினத்தந்தி' அரங்கில் பார்த்து வாங்கலாம். புத்தக திருவிழாவையொட்டி இங்கு வாங்கும் புத்தகங்களுக்கு விலையில் தள்ளுபடி உண்டு. புத்தக திருவிழா வருகிற 13-ந்தேதி நிறைவடைகிறது.



தினத்தந்தி சார்பில் அமைக்கப்பட்டு இருக்கும் அரங்கில் புத்தகங்களை ஆர்வமுடன் தேர்வு செய்தவர்களை படத்தில் காணலாம்.

மாலை மலர் ஈரோடு 8-8-2019




புத்தக் விழாவில் நடிகை ரோகிணி பேசிய காட்சி.

பாலியல் கொடுமை நடக்காமல் இருக்க

# வீட்டு வேலையை ஆண்-பெண் இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும்

## ஈரோடு புத்தக விழாவில் நடிகை ரோகிணி பேச்சு

ஈரோடு, ஆக.8-

ஈரோட்டில் 15-ஆவது ஆண்டு புத்தகத் திருவிழா நடந்து வருகிறது. நேற்று மாலை நடந்த நிகழ்ச்சியில் நடிகை ரோகிணி கலந்து கொண்டார்.

நடிகை ரோகிணி "உடல் மட்டும் அல்ல பெண்" என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

பவுனு பவுனு தான் என்ற படத்துக்காக பவானியில் 2 மாதம் சூட்டிங்கிற்காக தங்கி இருந்தேன். அப்போது ஈரோடு மக்களின் பேச்சு, அவர்கள் காட்டும் அன்பு எனக்கு பிடித்திருந்தது.

பிறப்பிலேயே ஆண், பெண் பாகுபடு நிலை நிறுத்தப்படுகிறது. பெண் என்பவள் என்னுடைய ஒரு சொத்து. அந்த சொத்தை நான் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்ற எண்ணம் தான் ஆண்களிடம் உள்ளது.

ஆண் குழந்தைகளை வீட்டு வேலை செய்வதற்கும், குழந்தை வளர்ப்பிற்கும் தயார்படுத்துவது கட்டாயமாக்க வேண்டும். அதில் தேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே திருமணத்திற்கு தகுதியானவர் என்ற சட்டத்தை கொண்டுவர வேண்டும் என, கவிஞர் தமிழ்ச்செல்வன் தனது எசப்பாட்டு என்ற நூலில் சொல்லி இருப்பார். அந்த நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

வீட்டு வேலை

வீட்டில் அனைத்து வேலைகளையும் பகிர்ந்து கொண்டு செய்யும் ஆண்கள், இன்னொரு பெண் மீது தவறான பார்வை, தொடுதல், பேசுதல் போன்ற செயல்களை செய்ய முடியாது என நம்புகிறேன்.

பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் வன்முறைகள் நடக்கும்போது ஆண் குழந்தையை சரியாக வளர்க்கவில்லை என குற்றத்தை சுமத்துகிறோம். ஆண் குழந்தைகளை வீட்டு வேலைகள் செய்ய வைத்தால் பாலியல் வன்முறைகள் குறைய சாத்தியம் இருக்கிறது என நினைக்கிறேன்.

ஆண் என்றால் இந்த உணர்ச்சி தான் இருக்கும், பெண் என்றால் இந்த உணர்ச்சி தான் இருக்கும் என்ற அறிவியல் ரீதியான சான்றும் இல்லை. தாயின் வயிற்றில் உருவாகும் கரு 6 வாரம் வரை பெண்ணாக தான் இருக்கிறது.

அதன் பிறகு தான் ஆணாக மாறுகிறது என அறிவியல் கூறுகிறது.

ஆண்கள் மீது மிக, மிக அதிகமாக அழுத்தங்கள் இருக்கின்றன. அதனை மறுப்பதற்கில்லை. ஆணாக இருப்பது மிகவும் கடினமானது. அழக்கூடாது, சம்பாதித்தே ஆக வேண்டும், வேலைக்கு செல்ல வேண்டும் என்ற கட்டாயம் ஆணுக்கு உள்ளது.

பெண் செய்யும் வேலையை ஆண் செய்தால் சமூகத்தின் விமர்சனத்துக்கு ஆண் உள்ளாகிறான். அதுவும் ஆணுக்கு அழுத்தம் தான். தங்கள் மீது இருக்கும் அழுத்தங்களுக்கு காரணம் பெண்கள் அல்ல, இந்த சமூகம் தான் என்பதை ஆண்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்போது ஆண்களின் நிலையும் மாறுவதற்கு உறுதுணையாக இருக்கும். ஆண்மை, பெண்மை என்று கூறி மொழியை திரித்து வைத்திருக்கின்றனர்.

சாதனை

சாதனை பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் வாய்ப்பு தான். அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பு மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை. பெண்ணுக்கும், ஆணுக்கும் சமமான வாய்ப்பு கிடைப்பதில்லை. பெண்ணின் சாதனை என்பது ஆண் சாதனையைக் காட்டிலும் 10 மடங்கு பெரியது என்று பெருமைக்குரியது.

இவ்வாறு ரோகிணி பேசினார்.

காளிங்கராயன் வெட்டிய வாய்க்காலில்

# சாயக்கழிவுநீர்-சாக்கடையை கலக்க விடுவது கேவலமாக இல்லையா?

## நடிகர் பொன்வண்ணன் ஆவேசம்

ஈரோடு, ஆக.8-

ஈரோடு வ.உ.சி. மைதானத்தில் மக்கள் சிந்தனைப்பேரவை சார்பில் 15-வது ஆண்டு புத்தகத் திருவிழா நடந்து வருகிறது.

நேற்று மாலை 6 மணிக்கு நடந்த ஆறாவது நாள் சிறப்பு நிகழ்ச்சியில் "ஆதி சூழ் உலகு" என்ற தலைப்பில் நடிகரும், டைரக்டருமான பொன்வண்ணன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

பெருமை

இந்த ஈரோடு, சேலம், கோவை கொங்கு மண்டலத்தில் நாம் பிறந்ததை எண்ணி பெருமை படவேண்டும். ஒவ்வொரு ஊருக்கும் வெவ்வேறு பெருமை உண்டு. ஆனால் இந்த மண்ணில் பிறந்தவர்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே வெளிநாட்டினருடன் வணிகம் செய்துள்ளனர். ஆதி தமிழர் வாழ்ந்த பூமி இப்பூமி. சாதி மதம் குலம் நமக்கு முக்கியம் அல்ல. நாமெல்லாம் ஆதி தமிழர் இனம் என பெருமைப்பட வேண்டும்.

நம்ம ஊரை சேர்ந்த தொல்லியல் ஆராய்ச்சியாளர் புலவர் ராசு பல தகவல்களை கல்வெட்டுகள் மூலம் சேகரித்து நமக்கு தந்துள்ளார். நமது திருப்பூர் அருகே உள்ள கொடுமணல் முன்பு பெரிய வியாபார தலமாக விளங்கி உள்ளது எகிப்தியர்கள் சிந்து சமவெளி நாகரிக மக்களுடன் நாம் வியாபாரத் தொடர்பு வைத்து இருந்தோம் என்று வரலாறு சொல்கிறது.

காவிரி ஆற்றுடன் பவானி ஆறு கலந்து கடலில் போய் கலந்ததை எண்ணி அப்போது காளிங்கராயன் பவானி நதி பாய்ந்து கடலில் கலக்கிறதே நமது மண்ணுக்கு எந்த பயனில்லாமல் உள்ளதே என எண்ணி காளிங்கராயன் கால்வாயை வெட்டினார்.




புத்தக திருவிழாவில் நடிகர் பொன்வண்ணன் பேசிய காட்சி.

85 கிலோ மீட்டர் கொண்ட இந்த கால்வாயை நேராக வெட்டினால் குறிப்பிட்ட பகுதி மக்களும் விவசாயிகளும் தான் பயன் அடைவார்கள். அனைவரும் பயன்பெற வேண்டும் என அப்போதே நினைத்து அந்த கால்வாயை குறுக்கும் நெடுக்குமாக வெட்டி அனைத்து பகுதி மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கும்படி செய்தார். அன்று அவர் வெட்டிய கால்வாயில் இப்போது சாக்கடையும் சாயக் கழிவு நீரும் அல்லவா ஓடுகிறது. இது நமக்கு கேவலமாக இல்லையா? இதை நாம் தடுக்க வேண்டாமா?

இவ்வாறு நடிகர் பொன்வண்ணன் பேசினார்.

தினபூமி, கோவை
ஆகஸ்ட் 09, 2019 thinaboomi.com

# பெண்ணின் சாதனை என்பது ஆண் சாதனையைக் காட்டிலும் 10 மடங்கு பெரியது: நடிகை ரோகிணி




ஈரோடு, ஆக.9

மக்கள் சிந்தனைப் பேரவை மூலம் நடத்தப்படும் ஈரோடு புத்தகத் திருவிழா தினமும் மாலையில் சிந்தனை அரங்க நிகழ்வு நடைபெற்று வருகிறது.

மாலை நடைபெற்ற சிந்தனை அரங்க நிகழ்வுக்கு யுஆர்சி பழனியம்மாள் மெட்ரிக். பள்ளி செயலாளர் சி.தேவராஜன் தலைமை வகித்தார். மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார். இதில், “உடல் மட்டும் அல்ல பெண்' என்ற தலைப்பில் நடிகை ரோகிணி பேசியதாவதுகுழந்தை பிறப்பிலேயே ஆண், பெண் பாகுபாடு நிலைநிறுத்தப்படுகிறது. பெண் என்பவள் என்னுடைய ஒரு சொத்து, அந்த சொத்தை நான் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்ற எண்ணம்தான் ஆண்களிடம் உள்ளது. ஆண் குழந்தைகளை வீட்டு வேலை செய்வதற்கும், குழந்தை வளர்ப்புக்கும் தயார்படுத்துவது கட்டாயமாக்க வேண்டும்.

அதில் தேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே திருமணத்துக்கு தகுதியானவர் என்ற சட்டத்தை கொண்டு வர வேண்டும் என தமிழ்ச் செல்வன் “தனது எசப்பாட்டு' என்ற நூலில் சொல்லி இருப்பார்.குழந்தை வளர்ப்பு, பெண்கள் வீட்டில் செய்யும் அத்தனை வேலைகளையும் செய்யும்போதுதான், எவையெல்லாம் நாம் சர்வ சாதாரணமானதாக எடுத்துக்கொள்கிறோமோ அவை எவையும் சாதாரணமான விஷயங்கள் இல்லை என்பதை ஆண் உணர்கிறான்.

**ஆணாக இருப்பது கடினம்**

வீட்டில் அனைத்து வேலைகளையும் பகிர்ந்து கொண்டு செய்திருக்கிற ஆண்கள், இன்னொரு பெண் மீது தவறான பார்வை, தொடுதல், பேசுதல் போன்ற செயல்களை செய்ய முடியாது என நம்புகிறேன். பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் வன்முறைகள் நடக்கும் போது ஆண் குழந்தையை சரியாக வளர்க்கவில்லை என குற்றத்தை சுமத்துகிறோம். ஆண் குழந்தைகளை வீட்டு வேலைகள் செய்ய வைத்தால் பாலியல் வன்முறைகள் குறைய சாத்தியம் இருக்கிறது. ஆண் என்றால் இந்த உணர்ச்சிதான் இருக்கும், பெண் என்றால் இந்த உணர்ச்சிதான் இருக்கும் என்ற அறிவியல் ரீதியான சான்றும் இல்லை. ஆண்களின் பேரில் மிக, மிக அதிகமாக அழுத்தங்கள் இருக்கின்றன. அதனை மறுப்பதற்கில்லை. ஆணாக இருப்பது மிகவும் கடினமானது. அழக்கூடாது, சம்பாதித்தே ஆக வேண்டும், வேலைக்கு செல்ல வேண்டும் என்ற கட்டாயம் ஆணுக்கு உள்ளது பெண்ணின் சாதனை என்பது ஆண் சாதனையைக் காட்டிலும் 10 மடங்கு பெரியது என்ற பெருமைக்குரியது . பெண் செய்யும் வேலையை ஆண் செய்தால் சமூகத்தின் விமர்சனத்துக்கு ஆண் உள்ளாகிறான். அதுவும் ஆணுக்கு அழுத்தம்தான். தங்கள் மீது இருக்கும் அழுத்தங்களுக்கு காரணம் பெண்கள் அல்ல, இந்த சமூகம்தான் என்பதை ஆண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். சாதனை பெண்களுக்கும், மற்றவர்களுக்கும் வித்தியாசம் வாய்ப்புதான். அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பு மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை. பெண்ணுக்கும், ஆணுக்கும் சமமான வாய்ப்பு கிடைப்பதில்லை. என்றார்.

KOVAI
வெள்ளி, ஆகஸ்ட் 9, 2019
இந்து தமிழ் திசை

# பெண் என்பவள் ஆணின் சொத்து என்ற எண்ணம் மாற வேண்டும்

- ஈரோடு புத்தகத் திருவிழாவில் நடிகை ரோகிணி பேச்சு

ஈரோடு

'பெண் என்பவள் என்னுடைய ஒரு சொத்து, அந்த சொத்தை நான் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்ற எண்ணம் தான் ஆண்களிடம் உள்ளது. இந்த எண்ணம் மாற வேண்டும்', என நடிகை ரோகிணி பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவையின் 15-வது ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்கில், 'உடல் மட்டும் அல்ல பெண்' என்ற தலைப்பில் நடிகை ரோகிணி பேசியதாவது:

குழந்தை பிறப்பிலேயே ஆண், பெண் என்ற பாகுபாடு நிலை நிறுத்தப்படுகிறது. பெண் என்பவள் என்னுடைய ஒரு சொத்து, அந்த சொத்தை நான் எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்ற எண்ணம் தான் ஆண்களிடம் உள்ளது. அந்த எண்ணம் மாற வேண்டும். ஆண் குழந்தைகளை வீட்டு வேலை செய்வதற்கும், குழந்தை வளர்ப்பிற்கும் தயார்படுத்துவது கட்டாயமாக்க வேண்டும். அதில் தேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே திருமணத்திற்கு தகுதியானவர் என்ற சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்ற எழுத்தாளர் தமிழ்ச்செல்வனின் கூற்றை நான் வரவேற்கிறேன்.



▲ ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்கில் நடிகை ரோகிணி பேசினார். அருகில், நடிகர் பொன்வண்ணன், யு.ஆர்.சி. பள்ளி செயலாளர் தேவராஜன், மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

வீட்டில் அனைத்துவேலைகளையும் பகிர்ந்து கொண்டு செய்திருக்கிற ஆண்கள், இன்னொரு பெண் மீது தவறான பார்வை, தொடுதல், பேசுதல் போன்ற செயல்களை செய்ய முடியாது. பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் வன்முறைகள் நடக்கும்போது ஆண் குழந்தையை சரியாக வளர்க்கவில்லை என குற்றத்தை சுமத்துகிறோம். ஆண் குழந்தைகளை வீட்டு வேலைகள் செய்ய வைத்தால் பாலியல் வன்முறைகள் குறைய சாத்தியம் இருக்கிறது.

தாயின் வயிற்றில் உருவாகும் கரு 6 வாரம் வரை பெண்ணாக தான் இருக்கிறது. அதன் பிறகு தான் ஆணாக மாறுகிறது என அறிவியல் கூறுகிறது. மொழியே ஆணுக்கு ஆதரவானதாக இருக்கிறது. இந்த மொழியிலேயே மாற்றம் வர வேண்டும். அப்போது தான் பெண்கள் குறித்தான சிந்தனைகள் மாறும். பெண்ணுக்கும், ஆணுக்கும் சமமான வாய்ப்பு கிடைப்பதில்லை. பெண்ணின் சாதனை என்பது ஆண் சாதனையைக் காட்டிலும் 10 மடங்கு பெரியது என்ற பெருமைக்குரியது, என்றார்.

'ஆதி சூழ் உலகு' என்ற தலைப்பில் நடிகர் பொன்வண்ணன் பேசினார். விழாவில் யுஆர்சி பழனியம்மாள் மெட்ரிக் பள்ளி செயலாளர் சி.தேவராஜன், மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்து தமிழ் திசை
KOVAI
வியாழன், ஆகஸ்ட் 8, 2019

# பழைய நூல்களை மறுபதிப்பு செய்ய பதிப்பாளர்களுக்கு அறிவுரை

ஈரோடு

பழைய ஆவணங்கள், நூல்களை மறுபதிப்பு செய்யும் போது, மூலத்தை சிதைக்காமலும், அலங்காரமெதுவும் இன்றியும் மறுபதிப்பு செய்ய வேண்டும் என பதிப்பாளர்களுக்கு எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை வேண்டுகோள் விடுத்தார்.

ஈரோடு புத்தகத்திருவிழாவை யொட்டி நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் (என்சிபிஎச்) சார்பில் 29 புதிய நூல்கள் வெளியீட்டு விழா ஈரோட்டில் நேற்று நடந்தது. விழாவில், ஈரோடு வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் நூல்களை வெளியிட, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் ப.கமலக்கண்ணன் பெற்றுக்கொண்டார். விழாவில் எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை பேசியதாவது:

கார்ல் மார்க்ஸ் கொள்கை, கோட்பாடுகளை, வாழ்க்கை வரலாற்றை பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் மொழியாக்கம் செய்து தனது பகுத்தறிவு, குடியரசு பத்திரிகைகளில் பெரியார் வெளியிட்டார். அதேபோல், 1940 களில் கார்ல்மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்றை சாமிநாத சர்மாவும் எழுதினார். நூல்களை மொழியாக்கம் செய்யும்போது, அதனை எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் செய்ய வேண்டும்.

பழைய ஆவணங்களை, நூல்களை மறுபதிப்பு செய்யும்போது, மூலத்தை சிதைக்காமலும், அலங்காரமெதுவும் இன்றியும் மறுபதிப்பு செய்ய வேண்டும். பதிப்பாளர்கள் இதனை பின்பற்ற வேண்டும், என்றார்.

விழாவில் உயிர் எழுத்து இதழ் ஆசிரியர் சுதீர் செந்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. விழாவில், மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன், எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பொதுமேலாளர் தி.ரத்தினசபாபதி, கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்



# ஈரோடு புத்தகத் திருவிழா 2019

## ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 15 பெண் ஆளுமைகள் கௌரவிப்பு






ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்கில் நடத்தப்பட்ட மகளிர் எழுச்சி தின நிகழ்வில் சமூக பங்களிப்புக்காக மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் கௌரவிக்கப்பட்ட ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஆளுமைகள்.(வலது)மழை பெய்ததால் குடைபிடித்துக்கொண்டு விழா நிகழ்வை பார்வையிட்ட பொதுமக்கள்.

ஈரோடு, ஆக. 8: புத்தகத் திருவிழா சிந்தனை அரங்க நிகழ்வில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 15 பெண் ஆளுமைகள் வியாழக்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் நடத்தப்படும் ஈரோடு புத்தகத் திருவிழா கடந்த 2ஆம் தேதி தொடங்கியது. வரும் 13ஆம் தேதி வரை புத்தகத் திருவிழா நிகழ்வில் தினமும் மாலையில் சிந்தனை அரங்க நிகழ்வு நடைபெற்று வருகிறது.

வியாழக்கிழமை மாலை நடைபெற்ற சிந்தனை அரங்க நிகழ்வில், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 15 பெண் ஆளுமைகள் பங்கேற்ற மகளிர் எழுச்சி தினம் நடைபெற்றது. மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார். சமூகப் பங்களிப்புக்காக 15 பேருக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.பி.கே.வாசுகி, சக்தி மசாலா நிறுவனங்களின் இயக்குநர் சாந்தி துரைசாமி, கலைமகள் கல்வி நிலைய செயலாளர் மற்றும் தாளாளர் எஸ்.மங்களவதி, பவானி நதிப் பாதுகாப்பு கூட்டமைப்புத் தலைவர் என்.எஸ்.சத்தியசுந்தரி, மருத்துவர்கள் தங்கம் கிருஷ்ணசாமி, சி.ராஜலட்சுமி, சி.கே. சரஸ்வதி, அம்சா சுப்பிரமணியம், கோபி ஸ்ரீவித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி நிறுவனர் மற்றும் தாளாளர் கோதை ஸ்ரீதர், வடுகப்பட்டி ராஜேந்திரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் மாலதி ராஜேந்திரன், கோபி பிகேஆர் மகளிர் கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி ஜெகதா லட்சுமணன், சித்தோடு ஸ்ரீ அம்மன் கலை அறிவியல் கல்லூரித் தாளாளர் ஜெயலட்சுமி தங்கவேலு, சென்னிமலை எம்பிஎன் எம்ஜெ பொறியியல் கல்லூரித் தாளாளர் வசந்தா சுத்தானந்தன், பரத நாட்டிய ஆசிரியை பிரேமா ஜெகதீசன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

மகளிர் எழுச்சி தினமாக கொண்டாடியதால், ஒரு அரங்கில் மகளிர் தொடர்பான புத்தகங்கள் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டன.

### புத்தகத் திருவிழாவில் இன்று

ஈரோடு புத்தகத் திருவிழாவில் வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 9) நடைபெறும் மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வில் ஒடிஸா மாநில அரசின் தலைமை ஆலோசகர், சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் பங்கேற்று 'உயில் அல்ல உரிமை' என்ற தலைப்பில் பேசுகிறார். நிகழ்வில் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்களான கோவை ஒய்.சுப்பராயலு, புதுச்சேரி கே.ராஜன், புலவர் செ.இராசு ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## மாணவர்களிடம் புத்தக எண்ணிக்கையை அதிகரித்த புத்தக உண்டியல்!

ஈரோடு, ஆக. 8: புத்தக உண்டியல் திட்டம் மூலம் மாணவர்களிடம் புத்தகங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

உண்டியல் என்றதும் நமக்கு ஞாபகத்துக்கு வருவது கோயில் உண்டியல்கள் தான். புத்தகத் திருவிழாக்களுக்கு மாணவர்கள் உண்டியலோடு வரும் முறையை அறிமுகப்படுத்தியது மக்கள் சிந்தனைப் பேரவையாகத்தான் இருக்க முடியும்.

உண்டியல் வாங்காமல் புத்தகத் திருவிழாவுக்கு சென்றபோது அதிகபட்சம் 50 ரூபாய் வரைதான் வாங்கினோம். உண்டியல் முறை வந்த பிறகு ரூ.250 முதல் ரூ.1,000 வரை புத்தகம் வாங்குகிறோம் என்கின்றனர் மாணவர்கள்.



உண்டியல்களை வாங்கிய மகிழ்ச்சியில் மாணவர்கள்.

பாரதியின் பாடல்கள், விக்கிரமாதித்தியன் கதைகள், காமடி கதைகள், பரமார்த்த குரு கதைகள், அப்பாஜி கதைகள், பொதுத்தேர்வுக்கான வழிகாட்டிப் புத்தகங்கள், ஆங்கில இலக்கணம், விடுதலைப் போராட்ட வீரர்கள் வாழ்க்கை வரலாறு, ராஜா, ராணிக் கதைகள், பொதுஅறிவு நூல்கள் போன்ற நூல்களை வாங்கிச் செல்கின்றனர். புத்தகத் திருவிழாவுக்காக காசு சேர்த்து வரும் சிறுவர்களில் தினமும் ஏதேனும் ஒரு சிறுதொகையை உண்டியலில் கண்டிப்பாகப் போட்டு வரும் பழக்கம் உள்ளவர்களும் உண்டு. வாரம் இரு முறையேனும் காசு போட்டுவிட வேண்டும் என்று திட்டமிட்டு செயல்படும் குழந்தைகளும் உண்டு.

புத்தக உண்டியல்கள் ஏழை, எளிய சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தைக் கண்டிப்பாக மேம்படுத்தும் என்பதிலும், அதன் மூலம் அவர்கள் வாங்கும் புத்தகங்களின் எண்ணிக்கை பன்மடங்கு உயரும் என்பதிலும் எள்ளளவும் சந்தேகம் இல்லை. 20 ரூபாய்க்குப் புத்தகம் வாங்கிச் சென்ற ஒரு சிறுமி, 200 ரூபாய்க்கு மேல் புத்தகம் வாங்கத் தயார் நிலையில் இருப்பதில் இருந்தே உண்டியல் திட்டத்தின் வெற்றியை அறிந்துகொள்ள முடியும். உண்டியல் திட்டம் மாணவர்களிடம் ஆண்டுதோறும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. ரூ. 250-க்கு மேல் புத்தகம் வாங்குபவர்களுக்கு நூல் ஆர்வலர் சான்று வழங்கப்படுவதை போல, குறிப்பிட்ட ரூபாய்க்கு மேல் புத்தகம் வாங்குவோருக்கு புத்தக உண்டியல் இலவசம் என்ற திட்டத்தை அறிமுகம் செய்யலாம் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

உண்டியல் திட்டம் குறித்து மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் கூறியதாவது:

புத்தகங்கள் வாசிக்க வேண்டும் என்ற பழக்கம், குழந்தைகளிடம் உருவாக்க வேண்டும். அதை அவர்களது சிறுசேமிப்பு மூலமும், ஆண்டு முழுவதும் புத்தகம் வாங்க வேண்டும் என்பதற்காக சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் மூலமும் ஏற்படுத்துகிறோம்.

இதற்காக ரூ.12 விலையுள்ள உண்டியலை ரூ.5 என்ற விலையில் வழங்குகிறோம். அந்த உண்டியலில் குழந்தைகள் சேர்க்கும் காசுகளை புத்தகத் திருவிழாவின்போது எங்களிடம் கொண்டு வந்து கொடுக்க செய்கிறோம். எங்களது முகவர்கள், அந்த மாணவ, மாணவியரின் உண்டியலை பெற்று அத்தொகையை கணக்கிட்டு, அதற்கான தொகைக்கு புத்தகம் வாங்க அனுமதிக்கிறோம். அவர்கள், உண்டியல் பணத்துடன் கையில் கொண்டு வந்திருக்கும் பணத்தையும் சேர்த்து நூல்களை வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த ஆண்டு 15,000 உண்டியல்கள் விற்பனையானது. தற்போதும் 15,000 உண்டியல்களை வைத்துள்ளோம். தினமும் 1,000-க்கும் மேற்பட்ட உண்டியல்கள் திரும்ப கொண்டு வரப்பட்டு அதற்கு பதில் புதிய உண்டியல் வழங்கப்படுகிறது. இது வரை 7,000 உண்டியல்கள் வந்துள்ளன. புதிதாக 7,000 உண்டியல்கள் மாணவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

பல பள்ளி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில், புத்தகங்கள் வாங்க வேண்டும், வாசிப்பு திறனை ஊக்கப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றனர். பல்வேறு அமைப்புகள், தனி நபர்கள் மூலம் அரசுப் பள்ளிகளுக்கும் நூல்களை இலவசமாக வழங்குகிறோம். கடந்த ஆண்டு 15 பள்ளிகளுக்கு நூல்களுடன் அதற்கான பெட்டியும் வழங்கினோம். இந்த ஆண்டும் அதே எண்ணிக்கையில் வழங்க திட்டமிட்டுள்ளோம் என்றார்.

வெள்ளி | 9.8.2019 காலைக்கதிர்

# ‘நல்ல சமூகத்தை பெண்களால் மட்டுமே உருவாக்க முடியும்’

ஈரோடு, ஆக. 9–

ஈரோடு, மக்கள் சிந்தனை பேரவை சார்பில் நடந்து வரும், புத்தக திருவிழாவில் நேற்று மாலை, ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த, 15 பெண் ஆளுமைகள் பங்கேற்ற, மகளிர் எழுச்சி தினம் நடந்தது.




ஈரோடு புத்தக திருவிழாவில், 15 பெண் ஆளுமைகள் கவுரவிக்கப்பட்டனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் தலைமை வகித்தார். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வாசுகி, சக்தி மசாலா நிறுவனங்களின் இயக்குனர் சாந்தி துரைசாமி, கலைமகள் கல்வி நிலைய தாளாளர் மங்களவதி, பவானி நதி பாதுகாப்பு கூட்டமைப்பு தலைவர் சத்தியசுந்தரி, டாக்டர்கள் தங்கம் கிருஷ்ணசாமி, ராஜலட்சுமி, சரஸ்வதி, அம்சா சுப்பிரமணியம், கோபி ஸ்ரீவித்யாலயா மெட்ரிக் பள்ளி நிறுவனர் கோதை ஸ்ரீதர், வடுகபட்டி ராஜேந்திரன் மெட்ரிக் பள்ளி தாளாளர் மாலதி ராஜேந்திரன், பி.கே.ஆர்.மகளிர் கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி ஜெகதா லட்சுமணன், சித்தோடு ஸ்ரீஅம்மன் கலை அறிவியல் கல்லூரி தாளாளர் ஜெயலட்சுமி, சென்னிமலை எம்.பி.என்.எம்.ஜெ., பொறியியல் கல்லூரி தாளாளர் வசந்தா சுத்தானந்தன், பரத நாட்டிய ஆசிரியை பிரேமா ஜெகதீசன் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர்.

வசந்தா சுத்தானந்தன் பேசுகையில், ‘‘என் பெற்றோர், உறவுகளுடனும், மற்றவர்களுடனும் எப்படி வாழ வேண்டும் என கற்றுக் கொடுத்தனர். அவர்கள் கொடுத்த தன்னம்பிக்கை, என்னை உயர்த்தியது,’’ என்றார்.

ஜெயலட்சுமி பேசுகையில், ‘‘பெண்கள் நல்லவர்களாக இருக்கும் வரை, அவர்களுக்கு எவராலும் தீங்கு ஏற்படாது. நம்மால் முடியும் என நினைத்தால் மட்டுமே பெண்கள் உயர முடியும். பெண்களுக்கு குடும்பம் சிறப்பாக அமைந்தால், அவரது வாழ்வில் மற்ற அனைத்தும் சிறப்பாகும்,’’ என்றார்.

மங்களவதி பேசுகையில், ‘‘நல்ல சமூகத்தை பெண்களால் மட்டுமே உருவாக்க முடியும். எந்த பணியிலும் ஈடுபாடும், இறை உணர்வும் இருந்தால், வெற்றியை அடையலாம். பெண்களுக்கு எப்போதும் சுய பாதுகாப்பு, நடை, உடைகளில் கவனம் அவசியம் தேவை. வாட்ஸ் ஆப், பேஸ்புக் நட்பு, பெண்களுக்கு ஆபத்தானது,’’ என்றார்.

---

KOVAI
சனி, ஆகஸ்ட் 10, 2019
இந்து தமிழ் திசை

# விட்டுக்கொடுப்பதைக் கற்றால் வாழ்வில் துன்பம் இருக்காது

● புத்தகத் திருவிழாவில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி வாசுகி பேச்சு

ஈரோடு

‘ஆணும், பெண்ணும் விட்டுக் கொடுப்பதைக் கற்றால், வாழ்வில் துன்பம் இருக்காது’ என சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) கேபிகே வாசுகி பேசினார்.

ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில், ஈரோட்டில் நடந்து வரும் புத்தகத் திருவிழாவில், நாள்தோறும் மாலையில் சிந்தனை அரங்கு நிகழ்வு நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த சிந்தனை அரங்கில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த, 15 பெண் ஆளுமைகள் பங்கேற்ற மகளிர் எழுச்சி தினம் நடந்தது. நிகழ்ச்சியில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) கே.பி.கே.வாசுகி பேசியதாவது:




▲ ஈரோடு புத்தகத் திருவிழாவில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) கேபிகே வாசுகி, முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், சக்தி மசாலா நிர்வாக இயக்குநர் சாந்தி துரைசாமி உள்ளிட்ட 15 பெண் ஆளுமைகள் கவுரவிக்கப்பட்டனர்.

நமது வெற்றிக்குப்பின்புலமாக நமது பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்பதை மறக்கக்கூடாது. பள்ளி மற்றும் கல்லூரி காலமும், நமது வாழ்க்கையும் வேறு, வேறானது. அதனை எதிர்கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். பெண்கள், தற்காப்பு கலைகளை கற்றுக் கொள்வது பாதுகாப்பானது. அனைவரும், ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றி பெற முடியாது, தோல்வியை சந்திக்கும்போது, அதற்கான காரணத்தை உணர்ந்தால், அடுத்தடுத்த முயற்சிகளில் வெற்றி பெறலாம்.

வாழ்க்கையில் வெற்றி என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனியானது அல்ல என்பதை உணர வேண்டும். இருவரும் சேர்ந்து வாழ்வதில்தான் வெற்றி கிடைக்கும். குறிப்பாக ஆணும், பெண்ணும் விட்டுக்கொடுப்பதை கற்றால், வாழ்வில் துன்பம் இருக்காது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க, தனி நீதிமன்றம் உள்ளது. அங்கு அவர்களுக்கான தீர்வு கிடைக்கும். இருப்பினும், வாழ்க்கையை ஆணும், பெண்ணும் புரிந்து வாழ வேண்டும். அவ்வாறு இல்லாததால், குடும்ப நீதிமன்றங்களில் தற்போது அதிக எண்ணிக்கையில் வழக்குகள் விசாரிக்கப்படுகிறது. இணைந்து வாழ, ஆணும், பெண்ணும் கற்றால், இவற்றைத் தவிர்க்கலாம், என்றார்.

முன்னாள் மத்திய அமைச்சரும், திமுக மாநில துணைப் பொதுச்செயலாளருமான சுப்புலட்சுமி ஜெகதீசன் பேசும்போது, தமிழகத்தில் பெண்கள், குறிப்பிட்ட வரையறைக்குள் இருக்க வேண்டும் என கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். அவர்களது முன்னேற்றம் என்பது மிகுந்த சிரமத்துக்குள்ளானது. தமிழகத்தில் பெண்கள் விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. ஆனால், சங்க காலத்தில் வான்வெளி சாஸ்திரங்களில் அதிகமாக பெண்கள் ஈடுபட்டனர். சங்க கால பெண்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டிருந்தது.

பெண்கள் எந்த துறையில் வெற்றி பெற்றாலும், அதை கொச்சைப்படுத்துகின்றனர். ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்கு பின்னும், அவரது தந்தை, அண்ணன், கணவன் என ஆண்கள் உள்ளனர். இருப்பினும், பெண்களின் கடும் உழைப்பே, ஒட்டு மொத்த சமூகத்தின் வெற்றியாகும், என்றார்.

விழாவில், சுப்புலட்சுமி ஜெகதீசன், உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) கே.பி.கே.வாசுகி, சக்தி மசாலா நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் சாந்தி துரைசாமி உட்பட 15 பேர் கவுரவிக்கப்பட்டனர்.

புத்தகத் திருவிழாவில் நேற்று முன்தினம் மகளிர் தினமாக கொண்டாடியதால், மகளிர் தொடர்பான புத்தகங்கள் ஒரு அரங்கில் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டு இருந்தது.

மக்கள் குரல்

13-8-2019




# ஈரோடு புத்தகத்திருவிழாவில் பெண் ஆளுமைகள் கவுரவிப்பு

ஈரோடு, ஆக. 13–

ஈரோடு புத்தகத்திருவிழாவில் 15 பெண் ஆளுமைகள் கவுரவிக்கப்பட்டனர்.

மக்கள் சிந்தனைப்பேரவை நடத்தும் 15 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத்திருவிழாவின் 7 ஆம் நாள் சிந்தனை அரங்க நிகழ்வு மகளிர் எழுச்சி தினமாக நடைபெற்றது.

வஉசி பூங்கா மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈரோட்டின் 15 பெண் ஆளுமைகளுக்குப் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில், முன்னாள் மத்திய மாநில அமைச்சருமான சுப்புலட்சுமி ஜெகதீசன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.பி.கே.வாசுகி, சக்தி மசாலா நிறுவனங்களின் இயக்குனர் சாந்தி துரைசாமி, பவானி நதி கூட்டமைப்பின் தலைவர் என். எஸ்.சத்தியசுந்தரி, தலைமகள் கல்வி நிலையத்தின் செயலாளர் மற்றும் தாளாளர் எஸ்.மங்களவதி, மருத்துவர்கள் தங்கம் கிருஷ்ணசாமி, சி.ராஜலட்சுமி, சி.கே.சரஸ்வதி, அம்சா சுப்ரமணியம், ஸ்ரீ வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் நிறுவனரும் தாளாளருமான கோதை ஸ்ரீதர், ராஜேந்திரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் மாலதிராஜேந்திரன், பிகேஆர் மகளிர் கலைக்கல்லூரியின் முதன்மை செயல் அதிகாரி ஜெகதாலட்சுமணன், ஸ்ரீஅம்மன் கலை அறிவியல் கல்லூரியின் தாளாளர் ஜெயலட்சுமி தங்கவேலு, எம்பி நாச்சிமுத்து எம். ஜெகநாதன் பொறியியல் கல்லூரியின் தாளாளர் வசந்தா சுத்தானந்தன், நாட்டியக்கலைஞர் பிரேமா ஜெகதீசன் ஆகியோருக்கு தத்தம் துறைகளில் புரிந்த சாதனைக்கும் சேவைக்கும் பாராட்டு மடல்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக, மறைந்த ஈரோட்டுப்பெண் ஆளுமைகளின் திருவுருவப்படங்கள் மேடையில் திறக்கப்பட்டன. மேலும், இந்நிகழ்வையொட்டி, பெண்கள் பற்றியான, பெண்கள் எழுதிய நூல்கள் அடங்கிய சிறப்பரங்கம் பேரவையால் ஏற்பாடு. செய்யப்பட்டிருந்தது.

மக்கள் சிந்தனைப் பேரவையின் மாநிலத்தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

நிகழ்வில், கல்லூரி மாணவிகள், நகரப்பிரமுகர்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வாசகர்களும் பொதுமக்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

மாலை, மலர் ஈரோடு 10-8-2019 ★★★



# ஈரோடு புத்தக திருவிழாவில் பேராசிரியர் - புலவர் கவுரவிப்பு

ஈரோடு, ஆக. 10-

மக்கள் சிந்தனைப் பேரவை நடத்தும் 15-ம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவின் 8-ம் நாள் சிந்தனை அரங்க நிகழ்வு நேற்று மாலை 6 மணிக்கு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடைபெற்றது.

'உயில் அல்ல உரிமை' என்ற தலைப்பில் சிந்து வெளி ஆய்வாளரும் ஒடிசாமாநில அரசுத் தலைமை ஆலோசகருமான ஆர். பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், கீழடி, ஆதிச்சநல்லூர் அகழாய்வு அதன் சிறப்பு மற்றும் தொன்மை பற்றியும் எடுத்துரைத்தார்.

தமிழ் மண்ணின் வரலாறு, இலக்கியங்கள் மற்றும் தமிழ்கல் வெட்டுகள் குறித்தும் தனது உரையில் அவர் விரிவாக விளக்கிப் பேசினார்.

இந்நிகழ்வில் தொல்லியல் ஆய்வறிஞர் பேராசிரியர் சுப்பராயலு, கல்வெட்டறிஞர் புலவர் ராசு ஆகியோருக்கு, அவர்களின் நீண்டகால ஆய்வுப் பணிக்காக பாராட்டு மடல்கள் வழங்கப்பட்டன.

விழாவிற்கு கொங்கு வேளாளர் தொழில் நுட்பக் கல்லூரி அறக்கட்டளையின் தலைவர் பரமேஸ்வரி லிங்கமூர்த்தி தலைமை தாங்கினார்.

விழாவில் கொங்கு பொறியியல் கல்லூரியின் தாளாளர் ஏ. வெங்கடாசலம் மற்றும் கே.கே.எஸ்.கே. இன்டர் நேஷனலின் மேலாண்மை இயக்குனர் கே.கே.எஸ்.கே. ரபீக் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

மக்கள் சிந்தனைப் பேரவையின் மாநிலத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

thinaboomi.com

தினபூமி, கோவை
ஆகஸ்ட் 11, 2019

# கல்வியும், வரலாறும் உயில் அல்ல உரிமை

## ஐஏஎஸ் அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் பேச்சு



ஈரோடு, ஆக11

மக்கள் சிந்தனைப் பேரவை மூலம் நடத்தப்படும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் நடைபெற்ற சிந்தனை அரங்க நிகழ்வில் மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார். கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்லூரி அறக்கட்டளை தலைவர் பரமேஸ்வரி லிங்கமூர்த்தி தலைமை வகித்தார். கொங்கு பொறியியல் கல்லூரி தாளாளர் ஏ. வெங்கடாசலம், தொழிலதிபர் கே.கே.எஸ்.கே.ரபீக் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நிகழ்வில் தொல்லியல் அறிஞர்களான கோவை ஒய்.சுப்பராயலு, ஈரோடு புலவர் செ.ராசு ஆகியோர் கௌரவிக்கப்படனர்.

இதில் சிந்துவெளி ஆய்வாளர், ஒடிசா மாநில அரசு தலைமை ஆலோசகர் ஆர். பாலகிருஷ்ணன் பங்கேற்று "உயில் அல்ல உரிமை' என்ற தலைப்பில் பேசியதாவதுல்வியும், வரலாறும் உயில் அல்ல உரிமை. சங்க இலக்கிய காலத்திலேயே கல்வி என்பது பிறப்பிலேயே உரிமையாக வருவதை காண முடியும். இந்த உரிமையை வரலாற்றின் மூலமே அறிய முடிகிறது.

ஆதிச்சநல்லூரில் ஆரம்பத்தில் ஆங்கிலேயர் உள்ளிட்ட பலர் அகழ்வாராய்ச்சி நடத்தினர். அதன்பின் 2004 ஆம் ஆண்டு வரை பல ஆண்டுகள் அங்கு ஆராய்ச்சி மேற்கொள் ளப் ப ட வில் லை. 2004இல் அங்கு கண்டெடுக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட எலும்புக்கூட்டின்ஆய்வு முடிவு வெளியிடப்படவில்லை. தற்போது மீண்டும் அங்கு அகழ்வாராய்ச்சி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அதுபோல், கீழடியில் அமர்நாத் ராமகிருஷ்ணன் மேற்கொண்ட ஆராய்ச்சி, அமெரிக்கா வரை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பல முக்கியத் தரவுகளை தந்தது.கீழடியில் உள்ள தமிழ் பிராமி எழுத்து 6 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தது எனக் கண்டறியப்பட்டது.

### சிந்து சமவெளி

அதுபோல, சிந்து சமவெளியில் பல கீறல் கொண்ட எழுத்து கிடைத்தது. அம்மொழியை அறிய முடியவில்லை. ஆனால், அங்கு கிடைத்ததும், கீழடியில் கிடைத்த கீறலும் ஒன்று என்பதை காண முடிந்தது. இதன் மூலம் சிந்து சமவெளி காலத்திலேயே கீழடியுடன் உள்ள தொடர்பை உறுதிப்படுத்த முடிகிறது. கீறலில் துவங்கியதுதான் எழுத்து. எண்ணும், எழுத்தும் சரியாக உள்ள மொழியே சிறந்தது என்ற அடிப்படையில் தமிழ் மிகப் பழமையானது என்பதை அறிகிறோம். கடந்த 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட 432 பேரின் எழுத்து, கவிதை கிடைத்துள்ளது. அதில் 76 பேர் பெண்கள். அதில் ஒரு பெண் வெண்ணிகுயத்தியார் எனக் காண முடிகிறது.கடந்த 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இதுவரை கிடைக்கப்பட்ட கல்வெட்டுகளை வகைப் ப டுத் தி ய போது அதில் தமிழ் கல்வெட்டு 38,000, கன்னடம், 12,000, தெலுங்கு, 12,000, மலையாளம் 120, ஹிந்தி 200 என இருந்தது. தமிழகத்தில் பானைக் கீறல், தமிழ் பிராமி, கல்வெட்டு, ஓலைச்சுவடி என எழுத்துக்களில் படிப்படியான வளர்ச்சியை காண முடிகிறது. தமிழகத்தில் கல்வி பரவலாக்கத்தையும், உரிமையாக இருந்ததையும் உறுதி செய்ய முடிகிறது.சமயங்களில் கூட 63 நாயன்மார்களில் பல சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இருந்துள்ளனர். அப்படியானால், அனைவரும் கல்வி உரிமை, சமய வெளிப்பாட்டை விளக்கும் உரிமையைப் பெற்றவர்களாக திகழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது என்றார்

காலைக்கதிர் சனி | 10.8.2019

# அகழாய்வில் அக்கறை காட்டாத அரசு: தொல்லியலறிஞர் சுப்பராயலு வருத்தம்

ஈரோடு, ஆக. 10–

ஈரோட்டில், மக்கள் சிந்தனை பேரவை சார்பில் நடந்து வரும் புத்தக திருவிழாவின் சிந்தனை அரங்கு, சிந்து சமவெளி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., தலைமையில் நடந்தது.

தொல்லியலறிஞர் ஒய்.சுப்பராயலு பேசியதாவது:

புலவர் ராசுவின் தூண்டுதலால், கொடுமணலில் தஞ்சை தமிழ் பல்கலைகழகம் மூலம், நாங்கள் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டோம். அப்போதைய துணைவேந்தர் வ.ஐ.சுப்பிரமணியம், அதற்கான நிதியை வழங்கி, இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தோம். பின், பல்கலைக்கழக மானியக்குழு நிதி மூலம், மேலும் இரண்டாண்டு ஆராய்ச்சியை தொடர்ந்தோம். அதன்பின், தமிழக அரசு சார்பில், பேராசிரியர் ராஜன், இரண்டு முறை ஆய்வு மேற்கொண்டார்.

கீழடியில் அகழ்வாய்வு செய்யும் வீடியோவை பார்த்தேன். அதில், பழங்கால மண்கலத்தை எடுத்த ஒருவர், அதை உடைத்து சிறு, சிறு துண்டாக்கி காட்டினார். எனக்கு மிகுந்த வருத்தத்தை தந்தது. பழமையான பொருட்களை, அகழாய்வில் மிக கவனமாக, நிதானமாக அப்படியே எடுத்து, பாதுகாக்க வேண்டும்.



ஈரோட்டில் நடந்து வரும் புத்தக திருவிழாவில், நேற்று மாலை சொற்பொழிவு நிகழ்வில், தொல்லியலறிஞர்கள் ஒய்.சுப்பராயலு, புலவர் செ.ராசு ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். அருகில், சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.,

தமிழக அரசின் கீழ் உள்ள தொல்லியல் துறைக்கு, போதிய மரியாதை வழங்கப்படவில்லை. சிறந்த அனுபவம் உள்ள யாரும், அத்துறையில் இல்லை. பயிற்சி இல்லாத சிலர் மட்டுமே உள்ளனர். இந்த நிலையால் எந்த பயனும் இல்லை.

அங்கு அனுபவம் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டு, ஆராய்ச்சி தொடர வேண்டும். துறையில் முறையான பயிற்சி பெற்றவர்கள் நியமிக்கப்பட்டால் மட்டுமே, ஆராய்ச்சிகள் நல்ல பலனை தரும். தமிழக அரசு, அகழாய்வில் அக்கறை செலுத்தாமல் இருப்பது, மிகுந்த வருத்தத்தை தருகிறது. நாங்கள், ஆராய்ச்சி செய்த போது, சென்னை பல்கலைக்கழக இளைஞர்களையும் சேர்த்து, 30 பேர் ஆய்வு செய்தோம். இப்போதுபோல, சிலர் மட்டும் ஆய்வு செய்தால், பலன் கிடைக்காது.

திறமையானவர்கள் அகழாய்வில் ஈடுபட்டால், தமிழகத்தின் பல வரலாறுகள் வெளிவரும்.

இவ்வாறு அவர் பேசினார்.

★ தொல்லியலறிஞர் புலவர் ராசு பேசியதாவது: உலக புகழ் பெற்ற கல்வெட்டுகளில் ஒன்றான அரச்சலூரர் கல்வெட்டு, 1960ல் என்னால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கல்வெட்டு, இப்போது வரை உரிய பாதுகாப்பு இன்றி உள்ளது. தென்னிந்தியாவில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளில், நூற்றுக்கணக்கான தகவல்களை காண முடிந்தது. ஆனால், பழமங்கலத்தில் நடுகல்லில், பாடல் வடிவில் ஒரு கல்வெட்டு காணப்பட்டது. தென்னிந்தியாவில், பாடல் வடிவிலான கல்வெட்டு, வேறு எங்கும் இல்லை எனலாம்.

மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல் என எந்த பாடம் படிப்பவர்களாக இருந்தாலும், அனைத்து மாணவர்களுக்கும் தமிழக வரலாறு, தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரீகம் உள்ளடக்கிய நூல் தொகுப்பு, கட்டாயமாக பாடமாக்கி படிக்க வைக்க வேண்டும். அவை, மதிப்பெண்ணுக்கு எடுத்து கொள்ளாவிட்டாலும், படித்தாக வேண்டும் என வைக்க வேண்டும்.

நாட்டின் பெருமையை, மொழியை, இலக்கியத்தின் நுட்பத்தை தெரியாமல், பட்டம் பெறுவது சரியானதாக இருக்க முடியாது. நமது வரலாற்றை மறக்கக் கூடாது. வரலாற்றை இளைஞர்கள் அறிந்து கொள்ள, நூல்களை கட்டாயம் படிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

KOVAI
சனி, ஆகஸ்ட் 10, 2019
இந்து தமிழ் திசை



▲ ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்கில் தொல்லியல் அறிஞர்கள் ஒய்.சுப்பராயலு, புலவர் செ.ராசு ஆகியோருக்கு ஒடிசா மாநில அரசின் தலைமை ஆலோசகர் ஆர்.பாலகிருஷ்ண்ன் பாராட்டுப் பட்டயம் வழங்கினார். விழாவில், மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தினத்தந்தி சார்பில் அமைக்கப்பட்டு இருக்கும் அரங்கில் புத்தகங்களை ஆர்வமுடன் தேர்வு செய்தவர்களை படத்தில் காணலாம்.

# 'இந்தியாவில் முதலில் அச்சில் ஏறிய மொழி தமிழ்'

## புத்தக திருவிழாவில் ஒடிசா மாநில தலைமை ஆலோசகர் பேச்சு

ஈரோடு, ஆக.10–

இந்தியாவில் முதலில் அச்சில் ஏறிய மொழி தமிழ் என்று ஒடிசா மாநில அரசு தலைமை ஆலோசகர் கூறினார்.

### புத்தக திருவிழா

மக்கள் சிந்தனை பேரவை சார்பில், ஈரோடு வ.உ.சி. பூங்காவில் புத்தக திருவிழா கடந்த 2–ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் தினமும் மாலையில் சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று மாலை நடந்த நிகழ்ச்சிக்கு பெருந்துறை கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்லூரி அறக்கட்டளை தலைவர் பரமேஸ்வரி லிங்கமூர்த்தி தலைமை தாங்கினார்.

கொங்கு என்ஜினீயரிங் கல்லூரி தாளாளர் ஏ.வெங்கடாசலம் முன்னிலை வகித்தார். ஒடிசா மாநில அரசு தலைமை ஆலோசகர் ஆர்.பாலகிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, 'உயில் அல்ல உரிமை' என்ற தலைப்பில் பேசினார்.

### கல்வி

அப்போது அவர் கூறியதாவது:-

வரலாற்றை நாம் தவிர்க்கவும் முடியாது, அதில் இருந்து தப்பிக்கவும் முடியாது. கீறலில் தொடங்கியது தான் எழுத்து. அதனால் இன்று பத்திரப்பதிவு செய்யும் போது கடைசியாக கீறல் என்று எழுதப்பட்டு இருக்கும்.

இந்தியாவில் 21.1.2018 அன்று வரை எத்தனை கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது என்று அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. அதன்படி தமிழகத்தில் 38 ஆயிரம் கல்வெட்டுகளும், கன்னடம் மற்றும் தெலுங்கில் தலா 12 ஆயிரம் கல்வெட்டுகளும், மலையாளத்தில் 120 கல்வெட்டுகளும், இந்தியில் 200 கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதில் இருந்து நம்முடைய தமிழ்மொழி எவ்வளவு தொன்மையான மொழி என்பது தெரியவருகிறது. வெளிநாட்டில் இருந்து கப்பல் மூலமாக முதல் முதலாக அச்சு எந்திரம் கோவாவுக்கு கொண்டு வரப்பட்டது. அப்போது முதலில் அச்சில் ஏறியது நம்முடைய தமிழ்மொழி தான். கல்வி என்பது யாருக்குமான உயில் அல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.

அதைத்தொடர்ந்து பேராசிரியர்கள் ஒய்.சுப்பராயலு, கே.ராஜன், புலவர் செ.ராசு ஆகியோருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### 'தினத்தந்தி' அரங்கு

புத்தக திருவிழாவில் 230 அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளன. அனைத்து வகையான புத்தகங்களும் ஒரே இடத்தில் கிடைப்பதால் தினமும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் குவிகிறார்கள். குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் ஆர்வமாக வந்து புத்தகங்களை வாங்கி சென்றனர். இதில் மரண பயத்தில் இருந்து மீட்டு, மகிழ்ச்சியுடன் வாழ வைக்கும் இதுவும் கடந்து போகும் என்ற புத்தகம், நமக்குள் சில கேள்விகள், பழைய சோறு ஆகிய புத்தகங்கள் புதிய புத்தகங்களாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம், ஆயிரம் ஆண்டு அதிசயம், தமிழ் சினிமா வரலாறு(பாகம்1), ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு, மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள், ஆளுமைத்திறன், சிறகை விரிக்கும் மங்கள்யான், பரபரப்பான வழக்குகள், நம்ப முடியாத உண்மைகள், உலகை உலுக்கிய வாசகங்கள், கலாம் ஒரு சரித்திரம், 27 நட்சத்திர தலங்கள் பரிகார முறைகள், மகாசக்தி மனிதர்கள், சினிமாவின் மறு பக்கம் ஆகிய புத்தகங்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

### விலையில் சலுகை

மேலும் வாழ்வை வளமாக்கும் பூஜை–விரதமுறைகள், அதிசயங்களின் ரகசியங்கள், தூரமில்லை தொட்டுவிடலாம், இதயம் தொட்ட பழமொழிகள், பழங்கால இந்தியர்களின் விஞ்ஞானம், இலக்கியத்தில் இன்பரசம், பழகிப் பார்ப்போம் வாருங்கள், உடலும் உணவும், நலம்தரும் மூலிகை சமையல், ஆதிச்சநல்லூர்–கீழடி மண் மூடிய மகத்தான நாகரிகம், நோய் தீர்க்கும் சிவாலயங்கள், மருத்துவ பூங்கா, அதிகாலை இருட்டு, ஆலய வழிபாடு ஏன்? எதற்கு? எப்படி?. ஆயுளை அதிகரிக்கும் ஆரோக்கிய உணவுகள், பைபிள் மாந்தர்கள், கேள்வியும் நானே பதிலும் நானே, உலக நாயகன் ஆகிய புத்தகங்களை பொதுமக்கள் விரும்பி வாங்கிச்செல்கிறார்கள். அறிவோம் இஸ்லாம், சிகரம் தொடும் சிந்தனைகள், செய்தி தரும் சேதி, 23 தோஷங்கள் பரிகார ஆலயங்கள், அமானுஷ்ய ஆன்மிகம், நானும் சினிமாவும், வாருங்கள் சீரடி சாய்பாபாவை தரிசிப்போம், ரகசியமான ரகசியங்கள், புரட்டிப் போடும் புலன் விசாரணை, இறையருள் தரும் சாதனங்கள், சினிமாவின் மறு பக்கம்(பாகம்–2), திரை உலக அதிசயங்கள், நதி போல ஓடிக் கொண்டிரு, அருள்தரும் அதிசய சித்தர்கள், நீங்களும் தலை ஆகலாம், உலகம் பிறந்தது உனக்காக, இதயம் கவர்ந்த இலக்கிய காட்சிகள், விதியை மாற்றும் 40 சித்தர்கள் ஆகிய புத்தகங்கள் 'தினத்தந்தி' அரங்கில் பார்த்து வாங்கலாம். புத்தக திருவிழாவையொட்டி இங்கு வாங்கும் புத்தகங்களுக்கு விலையில் தள்ளுபடி உண்டு. புத்தக திருவிழா வருகிற 13–ந்தேதி நிறைவடைகிறது.

மக்கள் சிந்தனைப் பேரவை

மக்களுக்காகச் சிந்திப்போம்

வழங்கும்



# ஈரோடு புத்தகத் திருவிழா 2019

## பாரதியை வணங்க வைத்தது 'பாரதி யார்?' நாடகம்

ஈரோடு, ஆக.10: ஈரோடு புத்தகத் திருவிழாவில் நடைபெற்ற 'பாரதி யார்?' என்ற நாடகம் பார்வையாளர்களை நெகிழ வைத்தது.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோடு புத்தகத் திருவிழா ஈரோடு வஉசி பூங்கா மைதானத்தில் கடந்த 2ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. புத்தகத் திருவிழாவில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற சிந்தனை அரங்க நிகழ்வில் சென்னை எஸ்.பி.கிரியேஷன்ஸ் தயாரிப்பில் 'பாரதி யார்?' என்ற இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகம் நடைபெற்றது.

மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரை யாற்றினார். சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் பி.சி.துரைசாமி தலைமை வகித்தார். இயக்குநர் சாந்தி துரைசாமி முன்னிலை வகித்தார்.

நாடக நிகழ்வுக்குத் தலைமை வகித்து நடிகர் சிவகுமார் பேசியதாவது: பாரதி கணிதத்திலும், ஆங்கிலத்திலும் பெரிய மேதையாக வர வேண்டும் என்று அவருடைய தந்தை ஆசைப்பட்டார். ஆனால், அவர் தனது நண்பரான சோமசுந்தர பாரதியை கூட்டிக் கொண்டு கோயில் மண்டபங்களில் ஒளிந்து, கம்ப ராமாயணத்தையும், திருக்குறளையும் படித்தார். 11 வயது இருக்கிறபோது சுப்பையா என்கிற பாரதி, பாரதி என்று போற்றப்பட்டார். 15 வயதில் பாரதிக்கு செல்லம்மாள் உடன் திருமணம் ஆனது.

மதுரைக்கு வந்து சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராக 3 மாதங்கள் பணியாற்றினார். 1904இல் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலைக்கு சேர்ந்தார். 1908-இல் திலகர் கைது செய்யப்பட்டார். அவருக்கு பர்மாவில் 6 மாதம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. அதனால் பாரதியையும் கைது செய்து விடுவார்கள் என்று எண்ணிய அவருடைய நண்பர்கள் அவரைப் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தனர்.





நாடகத்தைப் பார்க்க திரண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதியினர்.
(வலது) நாடகத்தில், மனைவி செல்லம்மாளுடன் பேசிக்கொண்டிருக்கும் பாரதி.

### புத்தகத் திருவிழாவில் இன்று

ஈரோடு புத்தகத் திருவிழா மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் 11) நடைபெறும் நிகழ்வில் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை அறிவியலும் மானுடமும்: நேற்று–இன்று–நாளை என்ற தலைப்பில் பேசுகிறார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.குழந்தைவேல் பங்கேற்று, புதிய அறிவியல் கண்டுபிடிப்பாளருக்கான அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு விருதினை வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்.

அங்கு குவளைக்கண்ணனும், சுந்தரேச அய்யரும் அவருக்கு அடைக்கலம் கொடுத்தனர். அதைத் தொடர்ந்து வாஞ்சிநாதன் குருவாக இருந்த நீலகண்ட பிரம்மச்சாரிக்கு ஆங்கிலேயர்கள் 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்தனர். தண்டனை முடிந்து வெளியில் வந்த அவர் உணவுக்கே வழியில்லாத நிலையில் பாரதி வீட்டுக்கு செல்கிறார்.

அப்போது நீலகண்ட பிரம்மச்சாரி நிலையைப் பார்த்த பாரதி தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாட்டை எழுதினார்.

ஈரோடு கருங்கல்பாளையம் வந்து மனிதருக்கு மரணமில்லை என்ற உரையை நிகழ்த்தினார். 1921 செப்டம்பர் 11ஆம் தேதி பாரதி இறந்தார். பாரதிதாலாட்டைத்தவிர அனைத்தும் எழுதி உள்ளார். பாரத நாடு, பாரத தாய், ரோமாபுரியுடன் வாணிபம் செய்தது, தேசிய ஒருமைப்பாடு, நதி நீர் திட்டம், சேது சமுத்திர திட்டம், அந்நிய ஆதிக்க எதிர்ப்பு போன்றவற்றை தனது பாட்டின் மூலம் பாரதி தெளிவுபடுத்தியுள்ளார் என்றார்.

**பாரதியை வணங்க வைத்த நாடகம்:** 'பாரதி யார்?' என்ற நாடகத்துக்கு ஈரோடு புத்தகத் திருவிழா 25 ஆவது மேடை என நாடகம் தொடங்கும் போது தெரிவிக்கப்பட்டது.

பாரதியின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை ஆண்டுகளைக் குறிப்பிட்டு முக்கிய நிகழ்வுகள், பாரதியின் பாடல்கள், நடனம் மற்றும் அழுத்தமான வசனங்களுடன் காட்சிகள் இருந்தன.

1907 இல் சென்னையில் நடந்த சுதந்திரப் போராட்ட பொதுக்கூட்ட நிகழ்வுக்கு பாரதி வருகிறார் என்ற காட்சியில் பாரதிக்காக மேடையில் இருந்தவர்கள் ஆவலுடன் காத்திருக்க, பாரதி வேடமணிந்தவர் பார்வையாளர்கள் அமர்ந்திருந்த பகுதிக்குள் இருந்து நடந்து மேடைக்கு வருவது போல் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அப்போது பார்வையாளர்கள் எழுந்து நின்று பாரதி வேடமணிந்தவரை கைகூப்பி வணங்கினர். நாடகம் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டது. பாரதி வேடத்தில் இசைக்கவி ரமணன் நடித்தார்.

**ஏ.பி.நாகராஜன் குறித்த புத்தகம்:** சேலம் மாவட்டம், சங்ககிரி அருகே அக்கம்மாபேட்டை என்ற கிராமத்தில் பிறந்தவர் ஏ.பி. நாகராஜன், அவர் குறித்த புத்தகம் நாடக நிகழ்வுக்குப் பிறகு மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தப் புத்தகத்தை பொதுமக்கள் மேடைக்கு சென்று வாங்கிக்கொண்டு சிவகுமாருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

## புத்தகத் திருவிழாவில் ஆன்மிக நூல்கள் விற்பனை அதிகரிப்பு



கீதா பிரஸ் புத்தக அரங்கில் புத்தகங்களைப் பார்வையிட்ட கல்லூரி மாணவிகள்.

ஈரோடு, ஆக. 10: ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஆன்மிக நூல்கள் விற்பனை அதிகரித்துள்ளது.

கண்காட்சியில் பல்வேறு தலைப்புகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆன்மிக நூல்களை மட்டும் பதிப்பிக்கும் பதிப்பாளர்களும் ஏராளமான ஆன்மிக புத்தகங்களுடன் அரங்குகளை அமைத்துள்ளனர்.

இந்து மத நூல்கள்: இந்து மதக் கொள்கைகளை விளக்கும் வகையில் பல புத்தகங்களை பதிப்பாளர்கள் கொண்டு வந்துள்ளனர். குறிப்பாக கீதா பிரஸ், ஸ்ரீராமகிருஷ்ண மடம் ஆகிய பதிப்பகங்கள் தங்களது பதிப்புகளை விற்பனைக்காக வைத்துள்ளன. இந்து மத நம்பிக்கையாளர்களும், அடியார்களும் அதிகளவில் புத்தகங்களை வாங்கிச் செல்கின்றனர்.

இதுகுறித்து கீதா பிரஸ் மேலாளர் எச்.கணேஷ் பாபு கூறியதாவது:

கீதா பிரஸ் 100 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. இங்குள்ள அரங்கில் ரூ. 5 முதல் ரூ. 18 வரையிலான விலையில் 40 தலைப்புகளில் அறிவுரை நல்கும் நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. ரூ. 40 விலையில் பகவத் கீதை புத்தகங்கள் உள்ளன. இந்த நூல்கள் மாணவர்களால் அதிகமாக வாங்கப்படுகிறது.

தவிர சிவ மகா புராணம், விஷ்ணு மகா புராணம் ஆகிய புத்தகங்கள் தமிழ் மொழியில் கிடைக்கின்றன. வால்மீகி ராமாயணத்தில் 5 காண்டங்கள் அடங்கிய 3,664 பக்கங்கள் அடங்கிய 5 புத்தகங்கள் ரூ. 850 விலையில் கிடைக்கின்றன. இதுபோல் ஸ்ரீமத் பாகவத மகாபுராணம் 3 பாகங்கள் ரூ. 700 விலையில் கிடைக்கிறது. தவிர ஹிந்தி, சம்ஸ்கிருத மொழிகளில் ஏராளமான புத்தகங்கள் உள்ளன. அனைத்து மொழிகளிலும் மொத்தம் 189 தலைப்புகளில் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன என்றார்.

பிற மத நூல்கள்: இஸ்லாம், கிறிஸ்துவம், பௌத்தம் உள்ளிட்ட மதங்கள் தொடர்பான நூல்களும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இந்த புத்தகங்கள் 10 க்கும் மேற்பட்ட அரங்குகளில் இடம்பெற்றுள்ளன.

ஆன்மிக புத்தகங்களை மட்டும் வெளியிடும் நிறுவனங்களைத் தவிர பொதுவான நூல்களைப் பதிப்பிக்கும் பல்வேறு பதிப்பாளர்களும் ஆன்மிக புத்தகங்களை இந்த ஆண்டு அதிக அளவில் விற்பனைக்கு வைத்துள்ளனர்.

## தமிழ் காமிக்ஸ் நூல்களுக்கு சிறுவர்களிடம் அதிக வரவேற்பு



காமிக்ஸ் நூல்களைப் பார்வையிட்ட பள்ளி மாணவர்கள்.

ஈரோடு, ஆக. 10: ஈரோடு புத்தகத் திருவிழாவில் தமிழ் காமிக்ஸ் புத்தகங்கள் உள்ள அரங்குகளில் சிறுவர், சிறுமியரின் கூட்டம் அலை மோதியது.

ஒரு காலத்தில் சிறுவர்களுக்கென்று காமிக்ஸ் நூல்கள் தவிர வேறெந்த நூல்களும் கிடைக்காது. இப்போது சிறுவர் இலக்கியம் என்பது தனித்த ஒரு இலக்கியத் துறையாகவே வளர்ந்திருக்கிறது. குழந்தை இலக்கியத்திற்கென பால புரஸ்கார் என்ற பெயரில் சாகித்ய அகாதெமி ஒரு விருதையே வழங்குகிறது. தமிழகத்தின் முன்னணி பதிப்பகங்கள், அழகிய வண்ண அட்டைகள், ஓவியங்களோடு குழந்தைகளுக்கான புத்தகங்களைப் பதிப்பித்து வெளியிடுகின்றன.

தமிழில் 1950-60 இல் சிறார் இலக்கியம் செழிப்பாக இருந்ததாகவே தெரிகிறது. இடையில் ஏற்பட்ட சிறிய கணக்கம் இப்போது மாறிவிட்டது. புதிய புதிய படைப்புகள், புதிய புதிய எழுத்தாளர்கள் உருவாகி வருகிறன்றனர். ஏராளமான சிறார் இலக்கியப் படைப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன.

இதில் அந்தோணியின் ஆட்டுக்குட்டி, ரயிலின் கதை, சிறுவர் கலைக்களஞ்சியம், எங்கிருந்தோ வந்தான், நல்ல நண்பர்கள், நெருப்புக்கோட்டை, வாசித்தாலும் வாசித்தாலும் தீராது, குட்டி இளவரசன், சிறுவர் நாடோடிக் கதைகள், பனி மனிதன், உலகின் மிகச்சிறிய தவளை, வாத்துராஜா, ஆமைகளின் அற்புத உலகம், மாயகடிகாரம், ஜிமாவின் கைபேசி, யானை சவாரி, அற்புத உலகில் ஆலிஸ், விரால் மீனின் சாகசப் பயணம், புத்தக தேவதையின் கதை போன்ற புத்தகங்களை 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் சிறுவர்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.

ஆங்கிலத்தில் காமிக்ஸ் கல்வி, ஆய்வு, விளையாட்டு, விண்வெளி என்று பல்துறைகளில் வளர்கிறது. கிராபிக் நாவல் வளர்ச்சி கண்டுள்ளது.

தமிழில் கிராபிக் நாவல் ஒன்றிரண்டு மட்டுமே வந்துள்ளன. இவையும் போதிய கவனிப்புப் பெறவில்லை. காமிக்ஸ் புத்தகங்கள் மொழி, பண்பாடு, இலக்கியம், வரலாறு என நமது மண்ணின் அடையாளங்களுடன் படைக்கப்பட வேண்டும். அந்த வகையில் இந்த புத்தகத் திருவிழாவில் கிராபிக் நாவல் வடிவில் வந்துள்ள கல்கியின் 'பொன்னியின் செல்வன்' மாணவர்கள் மத்தியில் கவனம் பெற்றுள்ளது. ஏராளமான மாணவர்கள் வாங்கிச் செல்கின்றனர்.

இதுகுறித்து கொடுமுடி அருகே தாமரைப்பாளையத்தைச் சேர்ந்த தனியார் பள்ளி ஆசிரியர் பி.சண்முகசுந்தரம் கூறியதாவது:

பொன்னியின் செல்வன் நாவல் இன்றளவும் தொடர்ந்து பெரியவர்களைக் கவர்ந்து வரும் நிலையில் குழந்தைகள் அந்த நாவலை ரசிக்கத் தேவையான முயற்சியைப் பெரிதாக யாரும் எடுக்கவில்லை. குழந்தைகளும் இந்த நூலைப் படிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் இந்த நாவலை கிராபிக் வடிவில் வெளியிடக் காரணம். அந்த நோக்கம் நிறைவேறியுள்ளது என்றுதான் கூற வேண்டும். பள்ளி மாணவர்கள் ஏராளமானோர் இந்த நாவலை வாங்கிச் செல்கின்றனர். பெரியவர்கள் பலரும் பொன்னியின் செல்வன் கிராபிக் நாவல் வாசகர்களாக மாறி வருகின்றனர். குறிப்பாக பள்ளி ஆசிரியர்கள் பலரும் இந்த கிராபிக் நாவலை படிக்கத் தொடங்கியுள்ளனர். இதன் மூலம் அடுத்த புத்தகத் திருவிழாவில் இந்த நாவல் கூடுதல் கவனம் பெற வாய்ப்புள்ளது என்றார்.

## பெண்ணியம் சார்ந்த புத்தகங்கள் ஏராளம்

ஈரோடு, ஆக. 10: ஈரோடு புத்தகத் திருவிழாவில் பெண் எழுத்தாளர்கள் எழுதிய, பெண்கள் சார்ந்து எழுதப்பட்ட புத்தகங்கள் ஏராளமாக உள்ளன.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் நடத்தப்படும் ஈரோடு புத்தகத் திருவிழா ஆகஸ்ட் 2 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. 230 அரங்குகள் உள்ள புத்தகத் திருவிழாவில் மகளிர் எழுத்தாளர்கள் எழுதியுள்ள பெண்ணியம் சார்ந்த புத்தகங்கள், மகளிர் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்னைகள் குறித்துப் பேசும் ஏராளமான புத்தகங்கள் பல்வேறு அரங்குகளில் வைக்கப்பட்டுள்ளன.

மகளிர் பிரச்னைகளைக் கூறும் நூல்கள் குறித்து அறச்சலூர் நவரசம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நூலகர் எஸ்.சுபா கூறியதாவது:

கேரளத்தில் ஒளிந்திருக்கும் சாதியம், தலித் பெண்கள் சந்திக்கும் பிரச்னைகள், அரசியலில் தலித் சமூகத்தினரின் பங்கு உள்ளிட்டவை குறித்துப் பேசுகிறது 'தலித் பெண்ணின் இடைமறித்தல்கள்' என்ற புத்தகம். உலக வரலாற்றில் வீரமங்கையாகத் திகழும் ஜோன் ஆப் ஆர்க் குறித்து 'ஜோன் ஆப் ஆர்க் - வரலாற்றை மாற்றிய வீரமங்கை' என்ற புத்தகம் விளக்குகிறது.

மறுபதிப்பில் வந்துள்ள முனைவர் ர.விஜயலட்சுமி எழுதியுள்ள 'தமிழக மகளிர் தொடக்கக் காலம் முதல் ஆறாம் நூற்றாண்டு வரை' என்ற புத்தகம் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைக் குறிப்பிடுகிறது. நாட்டை விட்டு வெளியேறிய புலம்பெயர்ந்த மக்களின் சொல்லப்படாத கதைகள் குறித்துப் பேசுகிறது 'இடாவேணி' என்ற புத்தகம்.

போர் காரணமாக நாட்டை விட்டு வெளியேறும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்துப் பேசுகிறது 'இழப்பின் வரைபடம்' என்ற புத்தகம். உதாசீனம் செய்த கணவனை உதறிவிட்டுத் தன் உழைப்பால் உயரும் பெண்ணின் வாழ்க்கைப் போராட்டத்தைக் கூறுகிறது 'பணிக்கர் பேத்தி' என்ற புத்தகம். கார் ஓட்டுநராகச் சிறந்து விளங்கும் பெண்கள் குறித்து கூறுகிறது 'பெண் டிரைவர்' புத்தகம்.

சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை என்ற சிறுகதைத் தொகுப்பு, காலத்தால் புறக்கணிக்கப்பட்ட ஆப்ரிக்க-அமெரிக்கர்கள் குறித்து 'அன்புள்ள ஏவாளுக்கு' என்ற பெயரில் எழுதியுள்ளார் புலிட்சர் பரிசு பெற்ற எழுத்தாளர் ஆலிஸ் வாக்கர். அதைத் தமிழில் ஷஹிதா மொழிபெயர்த்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் சாமானியப் பெண்களின் வாழ்க்கை குறித்துப் பேசுகிறது 'சூன்யப் புள்ளியில் பெண்' என்ற புத்தகம். கவிஞர் குட்டி ரேவதியின் 600 கவிதைகளின் தொகுப்பான 'ஆதிவாயில்', சந்தியா பதிப்பகம் சார்பில் வேதகாலத்தில் வாழ்ந்த பெண்கள் சம உரிமையுடன் நடத்தப்பட்டனர் என்பதை விளக்கும் விதமாக 'வேதவாழ்வில் பெண் குரல்' என்ற புத்தகம் உள்ளது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா குறித்து மூத்த எழுத்தாளர் வாஸந்தி எழுதிய 'ஜெயலலிதா: மனமும் மாயையும்' என்ற புத்தகம், பெண் தெய்வ வழிபாடு குறித்து கூறும் 'பெருந்தெய்வ வழிபாடும், பெண் தெய்வ வழிபாடும்' என்ற புத்தகம். முகலாயப் பேரரசி நூர்ஜஹானின் ஆளுமை, அவரின் அரசியல் வியூகங்கள், வாழ்க்கை வரலாறு குறித்து கூறும் 'நூர்ஜஹான் சர்தார் ஜோகிந்தர் சிங்' என்ற புத்தகம் என ஆயிரக்கணக்கான தலைப்புகளில் பெண்ணின் புகழ், பிரச்னைகளைப் பேசும் புத்தகங்கள் பல்வேறு புத்தக அரங்குகளில் வைக்கப்பட்டுள்ளன. பெண்கள் இந்த நூல்களில் ஒரு சிலவற்றையாவது வாங்கிப் படிக்க வேண்டும் என்றார்.

பதிப்பகத்தார் சிலர் கூறியதாவது: மகளிர் கல்லூரிகளைச் சேர்ந்த சிலர் மட்டுமே பெண் படைப்பாளர்களின் புத்தகங்களை வாங்கிச் சென்றனர். இத்தகைய புத்தகங்களை பெண்கள் அதிகமாக வாங்கவில்லை. இந்த ஆண்டு மகளிருக்கான புத்தகங்களுக்கு என 2 நாள்களுக்கு முன்னரே தனியாக அரங்குதிறக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் நுழைவுவாயில் அருகிலேயே மகளிருக்கான புத்தகங்களுக்குத் தனி அரங்கை அமைக்க வேண்டும். பதிப்பாளர்களிடம் இருந்து புத்தகங்களைப் பெற்று மக்கள் சிந்தனைப் பேரவையே இந்த அரங்கை நடத்தலாம் என்றனர்.

# 'பாரதியை கண் முன் நிறுத்தும் வரிகள்'

ஈரோடு, ஆக. 11–

மக்கள் சிந்தனை பேரவை சார்பில், ஈரோட்டில் நடந்து வரும், புத்தக திருவிழாவில், 'பாரதி யார்?' என்ற இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகம், நேற்று நடந்தது.

தலைமை வகித்து, நடிகர் சிவகுமார் பேசியதாவது:

பாரதியார், கணிதம், ஆங்கிலத்தில் மேதையாக வர, அவரது தந்தை விரும்பினார். ஆனால், பாரதியார் தனது நண்பர் சோமசுந்தர பாரதியை அழைத்துக்கொண்டு, கோவில் மண்டபங்களில் ஒழிந்து, கம்பராமாயணம், திருக்குறளை கற்றார். அவரது, 11வது வயதில், சுப்பையா என்ற பாரதி, 'பாரதி' என்றே போற்றப் பட்டார்.

அவரது, 15 வயதில் செல்லம்மாளை திருமணம் செய்து கொண்டு, தனது அத்தையுடன் காசி சென்று, கல்லூரியில் படித்துக் கொண்டு, மாதம், 20 ரூபாய் ஊதியத்தில் பணி செய்தார். பின், மதுரை வந்து, சேது பள்ளியில் தமிழாசிரியராக, மூன்று மாதம் பணியாற்றி, 1904ல் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலைக்கு சேர்ந்தார். 1908ல் வந்தே மாதரம், வாழிய செந்தமிழ், எந்தையும் தாயும் மகிழ்ந்து, நெஞ்சு பொறுக்கவில்லையே போன்ற பாடல்களை எழுதி பதிப்பித்தார்.




ஈரோடு புத்தக திருவிழாவில், 'பாரதி யார்?' என்ற வரலாற்று நாடக நிகழ்ச்சிக்கு முன், நடிகர் சிவகுமார் பேசினார்.

தேச போராட்டத்துக்காக திலகர் கைதாகி, பர்மாவில் ஆறு மாதம் சிறையில் அடைக்கப் பட்டார். இதனால், பாரதியையும் கைது செய்து விடுவார்கள் என எண்ணி, அவரது நண்பர்கள் சிலர், புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தனர்.

இறுதியாக, ஈரோடு, கருங்கல்பாளையம் வந்து, 'மனிதருக்கு மரணமில்லை' என்ற உரையை நிகழ்த்திவிட்டு சென்றார். 1921 செப்.,21 இரவு, 1:30 மணிக்கு பாரதி மறைந்தார்.

தாலாட்டை தவிர அனைத்தும், பாரதி எழுதியுள்ளார். பாரத நாடு, பாரத தாய், ரோமாபுரியுடன் வாணிபம் செய்தது, தேசிய ஒருமைப்பாடு, நதி நீர் திட்டம், சேது சமுத்திரம் என பல வற்றை எழுதியுள்ளார். அவரது, ஒவ்வொரு வரிகளும், அவரை நம் கண்முன் நிறுத்தும். இவ்வாறு அவர் பேசினார்.

இதை தொடர்ந்து, சென்னை எஸ்.பி.,கிரியேஷன்ஸ் தயாரிப்பிலான, 'பாரதி யார்' என்ற இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகம் நடந்தது.

---






ஈரோடு புத்தக திருவிழாவில் நடிகர் சிவக்குமார் பேசிய காட்சி.

# நதி நீர் திட்டம் பற்றி அப்போதே விழிப்புணர்வு ஊட்டியவர் பாரதியார்

## நடிகர் சிவக்குமார் பேச்சு

ஈரோடு, ஆக. 11–

ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதான திடலில் மக்கள் சிந்தனை பேரவை சார்பில் புத்தகத் திருவிழா தொடங்கி நடந்து வருகிறது.

நேற்று மாலை 6 மணிக்கு நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் "பாரதி யார்?" என்ற தலைப்பில் நடனம், இயல், இசை கலந்த வரலாற்று நாடகம் நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு நடிகர் சிவக்குமார் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். அப்போது நடிகர் சிவக்குமார் பேசியதாவது:–

### மேதை

பாரதியார் இளம் வயதிலேயே மேதையாக காணப்பட்டார். எதற்கும் அஞ்சாமல் திகழ்ந்தார். மனதில் உள்ளதை பட்டென்று பேசி விடுவார். துணிச்சல் மிக்கவர் நம் நாடு சுதந்திரத்துக்காக அரும்பாடு பட்டவர்.

இதனால் சிறை தண்டனை அனுபவித்தார். எனினும் அவர் கலங்கவில்லை. சுதந்திர வேட்கையை ஊட்டி பல பாடல்களை பாடி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மீண்டும் அவர் கைது செய்யப்படலாம் என பாரதியாரை அவரது நண்பர்கள் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தனர்.

### ஈரோட்டில் பாரதியார்

பிறகு ஈரோடு கருங்கல் பாளையம் வந்தார் பாரதியார். அப்போதும் அவரது சுதந்திர வேட்கை தணியவில்லை. "மனிதனுக்கு மரணம் இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாட்டு மூலம் வீர முழக்க மிட்டார். 1921–ம் ஆண்டு செப்டம்பர் 11–ந் தேதி பாரதியார் இறந்தார்.

தாலாட்டு மட்டும் தான் அவர் பாடவில்லை. அத்தனை பாட்டுகளையும் அவர் பாடி உள்ளார். காதல், வீரம், பாசம், தேச ஒற்றுமை ஏன் நதி நீர் திட்டம், சேது சமுத்திர திட்டம் ஆகியவை பற்றியும் பாரதியார் அப்போதே பாடினார். நதி நீர் இணைப்பையும் வலியுறுத்தினார்.

இவ்வாறு நடிகர் சிவக்குமார் பேசினார்.

மேடையில் நடந்த பாரதி யார் நாடகம் அவரது வீர, தியாக வாழ்க்கையை நேரில் பார்த்தது போல் இருந்தது.

### மயில்சாமி அண்ணாதுரை

விழாவின் 10–வது நாளான இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு நடக்கும் சிறப்பு நிகழ்ச்சியில் "அறிவியலும், மானுடமும் நேற்று, இன்று, நாளை" என்ற தலைப்பில் மயில்சாமி அண்ணாதுரை பேசுகிறார்.

மேலும் சேலம் பெரியார் பல்கலைக்கழக பேராசிரியர் இரா.குறிஞ்சி வேந்தனும் சிறப்பு சொற்பொழிவாற்றுகிறார்.

இந்து தமிழ் திசை KOVAI
ஞாயிறு, ஆகஸ்ட் 11, 2019




▲ ஈரோடு புத்தகத் திருவிழாவில் நடைபெற்ற சிந்தனை அரங்கில் நடிகர் சிவகுமார் பேசினார். அருகில் மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன்.

# எண்ணும், எழுத்தும் சரியாக இருப்பதே சிறந்த மொழி

● புத்தகத் திருவிழாவில் சிந்துவெளி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் பேச்சு

■ நாமக்கல்

எண்ணும், எழுத்தும் சரியாக உள்ள மொழியே சிறந்தது என்ற அடிப்படையில், தமிழ் மிகப்பழமையானது, என சிந்துவெளி ஆய்வாளரான ஆர்.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஈரோட்டில் புத்தகத் திருவிழா நடைபெற்று வருகிறது. சிந்தனை அரங்க நிகழ்வில் மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் வரவேற்றார். 'உயில் அல்ல உரிமை' என்ற தலைப்பில் சிந்துவெளி ஆய்வாளரும், ஒடிஷா மாநில அரசு தலைமை ஆலோசகரான ஆர்.பாலகிருஷ்ணன் பேசியதாவது:

கல்வி, வரலாறு உயில் அல்ல; உரிமை. சொத்து, சட்டப்பூர்வமானவற்றை பிறருக்கு வழங்க ஆவணப்படுத்துவது உயில். சங்க இலக்கிய காலத்திலேயே, கல்வி என்பது பிறப்பிலேயே உரிமையாக வருவதை காண முடிகிறது. இந்த உரிமை, வரலாற்றின் மூலமே அறிய முடிகிறது.

ஆதிச்சநல்லூரில் ஆரம்பத்தில் ஜெர்மன், லண்டனைச் சேர்ந்தவர்களும், அதன்பின்னர் ஆங்கிலேயரும் அகழ்வாராய்ச்சி செய்தனர். அதனைத் தொடர்ந்து, 2004 வரை பல ஆண்டுகள் அங்கு ஆராய்ச்சி மேற்கொள்ளப்படவில்லை. தற்போது, மீண்டும் அங்கு அகழ்வாராய்ச்சி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அதுபோல, கீழடியில் அமர்நாத் ராமகிருஷ்ணன் மேற்கொண்ட ஆராய்ச்சி, அமெரிக்கா வரை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, பல முக்கிய தரவுகளை தந்தது. எதிர் காலத்தை கணிக்க நினைத்தால், நமது வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். கீழடியில் தமிழ் பிராமி எழுத்து, ஆறாம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தது என கண்டறியப்பட்டது.

அதுபோல, சிந்து சமவெளியில் பல கீரல் கொண்ட எழுத்து கிடைத்தது. அம்மொழியை அறிய முடியவில்லை. ஆனால், அங்கு கிடைத்ததும், கீழடியில் கிடைத்த கீரலும் ஒன்று என்பதை காண முடிந்தது. சிந்து சமவெளி காலத்திலேயே, கீழடியுடன் உள்ள தொடர்பை உறுதிப்படுத்த முடிகிறது. கீரலில் தொடங்கியதுதான் எழுத்து.

எண்ணும், எழுத்தும் சரியாக உள்ள மொழியே சிறந்தது என்ற அடிப்படையில், தமிழ் மிகப்பழமையானது.

கடந்த, 2,200 ஆண்டுக்கு முன்னர், 432 பேரின் எழுத்து, கவிதை கிடைத்துள்ளது. அதில், 76 பேர் பெண்கள். அதில் ஒரு பெண், வெண்ணிகுயத்தியார் என காண முடிகிறது. அப்போதே படித்தவர்களில் குறிப்பிட்ட சதவீதத்தினர் பெண்களாக இருந்துள்ளனர்.

இதுவரை கிடைக்கப்பட்ட கல்வெட்டுக்களை வகைப்படுத்திய போது, அதில், தமிழ் கல்வெட்டு – 38,000, கன்னடம், 12,000, தெலுங்கு 12,000, மலையாளம் 120, இந்தி 200 என இருந்தது. தமிழ்நாட்டில், பானைக்கீரல், தமிழ் பிராமி, கல்வெட்டு, ஓலைச்சுவடி என படிப்படியான வளர்ச்சியை, மொழியில் காண முடிகிறது. தமிழ்நாட்டில் கல்வி பரவலாக்கத்தையும், உரிமையாக இருந்ததையும் உறுதி செய்ய முடிகிறது, என்றார்.


முன்னதாக தொல்லியலறிஞர்கள் ஒய்.சுப்பராயலு, புலவர் செ.ராசு ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தினபூமி, கோவை
ஆகஸ்ட் 12, 2019 thinaboomi.com

# ஈரோடு புத்தகத் திருவிழாவில் இயல், இசை, நடனம்

ஈரோடு ஆக 12

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோடு புத்தகத் திருவிழா ஈரோடு வஉசி பூங்கா மைதானத்தில் கடந்த 2ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. புத்தகத் திருவிழாவில் நடைபெற்ற சிந்தனை அரங்க நிகழ்வில் சென்னை எஸ்.பி.கிரியேஷன்ஸ் தயாரிப்பில் பாரதி யார்? என்ற இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகம் நடைபெற்றது. மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரையாற்றினார். சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் பி.சி.துரைசாமி தலைமை வகித்தார். இயக்குநர் சாந்தி துரைசாமி முன்னிலை வகித்தார். நாடக நிகழ்வுக்குத் தலைமை வகித்து நடிகர் சிவகுமார் பேசியதாவது பாரதி கணிதத்திலும், ஆங்கிலத்திலும் பெரிய மேதையாக வர வேண்டும் என்று அவருடைய தந்தை ஆசைப்பட்டார். ஆனால், அவர் தனது நண்பரான சோமசுந்தர பாரதியை கூட்டிக்கொண்டு கோயில் மண்டபங்களில் ஒளிந்து, கம்ப ராமாயணத்தையும், திருக்குறளையும் படித்தார். 11 வயது இருக்கிற



போது சுப்பையா என்கிற பாரதி, பாரதி என்று போற்றப்பட்டார். 15 வயதில் பாரதிக்கு செல்லம்மாள் உடன் திருமணம் ஆனது. மதுரைக்கு வந்து சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராக 3 மாதங்கள் பணியாற்றினார். 1904இல் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலைக்கு சேர்ந்தார். 1908-இல் திலகர் கைது செய்யப்பட்டார்.

## மனிதருக்கு மரணமில்லை

அவருக்கு பர்மாவில் 6 மாதம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. நீலகண்ட பிரம்மச்சாரி நிலையைப் பார்த்த பாரதி தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாட்டை எழுதினார். ஈரோடு கருங்கல்பாளையம் வந்து மனிதருக்கு மரணமில்லை என்ற உரையை நிகழ்த்தினார். பாரதியை வணங்க வைத்த நாடகம் பாரதி யார்? என்ற நாடகத்துக்கு ஈரோடு புத்தகத் திருவிழா 25 ஆவது மேடை என நாடகம் தொடங்கும் போது தெரிவிக்கப்பட்டது. பாரதியின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை ஆண்டுகளைக் குறிப்பிட்டு முக்கிய நிகழ்வுகள், பாரதியின் பாடல்கள், நடனம் மற்றும் அழுத்தமான வசனங்களுடன் காட்சிகள் இருந்தன. 1907 இல் சென்னையில் நடந்த சுதந்திரப் போராட்ட பொதுக் கூட்ட நிகழ்வுக்கு பாரதி வருகிறார் என்ற காட்சியில் பாரதிக்காக மேடையில் இருந்தவர்கள் ஆவலுடன் காத்திருக்க, பாரதி வேடமணிந்தவர் பார்வையாளர்கள் அமர்ந்திருந்த பகுதிக்குள் இருந்து நடந்து மேடைக்கு வருவது போல் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அப்போது பார்வையாளர்கள் எழுந்து நின்று பாரதி வேடமணிந்தவரை கைகூப்பி வணங்கினர். நாடகம் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டது. பாரதி வேடத்தில் இசைக்கவி ரமணன் நடித்தார்.

தமிழ் முரசு
கோவை 12.8.2019

# மனிதனின் மூளையை கணினி மழுங்கடித்துவிட்டது


## விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேச்சு

ஈரோடு, ஆக. 12-

அன்றாட வாழ்வில் கணினி பயன்பாடு மனிதனின் மூளையை மழுங்கடித்துவிட்டது என்று ஈரோடு புத்தக திருவிழாவில் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசினார்.

ஈரோடு வ.உ.சி. மைதானத்தில் மக்கள் சிந்தனை பேரவை சார்பில் நடைபெற்று வரும் புத்தக திருவிழாவில் சிந்தனை அரங்கம் நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெற்றது. மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் வரவேற்றார்.

இதில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய துணைத்தலைவர், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசியதாவது : இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுடன் அறிவியல் தமிழையும் நான்காவதாக சேர்க்க வேண்டும். அறிவியல் என்பது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றை கொண்டது. புதிய கண்டுபிடிப்புகள் மட்டுமே மனிதனை உயரத்திற்கு கொண்டு செல்லும். கடந்த ஒரு வாரம் வரை இந்த பேரண்டம் 13 ஆயிரத்து 800 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக சொல்லப்பட்டது. சமீபத்தில் ஒரு நட்சத்திரத்தின் வயதை கண்டறிந்தபோது இந்த பேரண்டத்துக்கு 14 ஆயிரத்து 500 கோடி ஆண்டுகள் வயதாகிறது என்று



கூறப்படுகிறது.

மனிதன் கிட்டத்தட்ட 3 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியுள்ளான். ஆதிமனிதன் முதன் முதலில் கல்லை பயன்படுத்துவதை கண்டுபிடித்தான். அதுதான் முதல் அறிவியல் கண்டுபிடிப்பாகும். ஆதிமனிதன் தமிழைதான் பேசி உள்ளான் என்பதை உறுதியுடன் கூறுவேன்.. சந்திரனில் சென்று ஆய்வு செய்த பல நாடுகளை சேர்ந்தவர்கள் நீர் இல்லை என்று கூறினார்கள். ஆனால் 40 ஆண்டுகளுக்கு பிறகு நாம் முழு நிலவையும் ஆய்வு செய்து பல இடங்களில் நீர் இருப்பதை முதல் முறையிலேயே கண்டறிந்துவிட்டோம்.

அறிவியல் வளர்ச்சி சிறப்பாக இருந்தாலும், மனிதனின் அன்றாட வாழ்வில் கணினிகள் மனிதன் மூளையை மழுங்கடித்து விடுகிறது. இன்று வரை மனிதன் தன் புத்தி கூர்மையால் வளர்ந்து இருக்கிறான். ஆனால் தற்போது கணினி பயன்பாட்டால் சிந்திப்பது குறைந்து விட்டது. தொழில்நுட்ப கோளாறால் தவறு ஏற்பட்டாலும், நாம் அதை உண்மை என்று நம்பிவிடுகிறோம். கால்குலேட்டர் தவறான எண்ணை காண்பித்தாலும், கூகுல் மேப் தவறான வழியை காட்டினாலும் சிந்திக்காமல் நம்பும் நிலையில் மனிதர்கள் மாறிவிட்டார்கள். இது மனிதனை மீண்டும் கீழே கொண்டு செல்லும் வகையில் எச்சரிக்கை விடுக்கிறது.

அடுத்த மாதம் 7ம் தேதி சந்திராயன் 2 செயற்கை கோள் நிலவில் இறங்கும் இடத்தில்தான் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பியா போன்ற நாடுகள் நாளை இறங்கும். எனவே நாம் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறோம். ஆசியா, ஆப்பிரிக்கா, அண்டார்ட்டிகாவை போல நிலவு, செவ்வாய் கிரகங்களில் நாளை மற்றொரு கண்டம் உருவாகும். அங்கு நாம் சென்று குடியேறுவோம். சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இனி இந்தியாவும் பங்கேற்கும். நிலவில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைப்போம்.

இவ்வாறு விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசினார்.




பேராசிரியர் பாஸ்கருக்கு ரூ.1 லட்சத்துடன் கூடிய ஜி.டி. நாயுடு விருது வழங்கப்பட்ட காட்சி. மயில்சாமி அண்ணாதுரை, ஸ்டாலின் குணசேகரன் உள்பட பலர் அருகில் உள்ளனர்.

### இயல், இசை, நாடகம் போன்று

# அறிவியல் தமிழையும் நான்காவதாக சேர்க்க வேண்டும்

## புத்தக திருவிழாவில் மயில்சாமி அண்ணாதுரை பேச்சு

ஈரோடு, ஆக. 12-

ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடந்து வரும் புத்தக திருவிழாவில் சிந்தனை அரங்கம் நிகழ்ச்சி நேற்று மாலை நடந்தது.

வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் தலைமை தாங்கினார். பி.கே.பி. சாமி மெட்ரிக் மேல் நிலைப்பள்ளிக்கூட தாளாளர் பி.கே.பி.அருண் முன்னிலை வகித்தார். மக்கள் சிந்தனை பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்று பேசினார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் குழந்தைவேல் கலந்து கொண்டு ரூ.1 லட்சத்துடன் கூடிய ஜி.டி.நாயுடு விருதை கோவை கற்பகம் உயர்கல்வி அகாடமி உதவி பேராசிரியர் எஸ்.பாஸ்கருக்கு வழங்கினார். திடக்கழிவு மேலாண்மையில் குப்பைகளை பிரிக்க நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட கருவிக்காக அவருக்கு விருது வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய துணைத்தலைவர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

இயல்,இசை,நாடகம் என்ற முத்தமிழுடன் அறிவியல் தமிழையும் நான்காவதாக சேர்க்க வேண்டும். அறிவியல் என்பது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றை கொண்டது. அறிவியலாளர் என்பது சுயநலமின்றி சுற்றி உள்ளவர்களுக்கும் பயன் உள்ளதாக சிந்திப்பது அறிவியலை வளர்க்கும். புதிய கண்டு பிடிப்புகள் மட்டுமே மனிதனை மேலே மேலே கொண்டு செல்கிறது.

கடந்த ஒருவாரம்வரை இந்த பேரண்டம் 13 ஆயிரத்து 800 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக சொல்லப் பட்டது. ஆசியா, ஆப்பிரிக்கா, அண்டார்ட்டிகாவை போல நிலவு, செவ்வாய் கிரகங்களில் நாளை மற்றொரு கண்டம் உருவாகும். அங்கு நாம் சென்று குடியேறுவோம். சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இனி இந்தியாவும் பங்கேற்கும். நிலவில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைப்போம்.

உங்களுடைய மகன், மகள்கள் மற்ற நாடுகளுக்கு சென்று டாலரை சம்பாதித்து அனுப்புவது போல, நில்வில் சென்று குடியேறி ஹீலியம் எடுத்து பூமிக்கு அனுப்பும் வாய்ப்பு உருவாகும். அப்போது பூமியின் வளத்தையும் பெருக்க முடியும். அங்கு பல்வேறு நாட்டினர் எந்தவொரு சண்டையும் இல்லாமல் கைகோர்த்து ஒற்றுமையுடன் வாழலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை நிறுவனர் எம்.ஏ.முகமது முஸ்தபா உள்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மக்கள் சிந்தனைப் பேரவை

மக்களுக்காகச் சிந்திப்போம்

வழங்கும்



# ஈரோடு புத்தகத் திருவிழா 2019

# முத்தமிழுடன் அறிவியல் தமிழையும் சேர்க்க வேண்டும்

**மயில்சாமி அண்ணாதுரை**





ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்க நிகழ்வில் பங்கேற்ற பொதுமக்கள். (வலது) அறிவியல் மேதை ஜி.டி நாயுடு விருதினை கோவை கற்பகம் உயர் கல்வி அகாதெமியின் உதவிப் பேராசிரியர் எஸ்.பாஸ்கருக்கு வழங்குகிறார் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.குழந்தைவேல்.

**ஈரோடு, ஆக.11:** இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுடன் நான்காவதாக அறிவியல் தமிழையும் சேர்க்க வேண்டும் என்றார் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் நடத்தப்படும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. நிகழ்வுக்கு வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் தலைமை வகித்தார். சிங்கப்பூர் எம்.ஏ.முஸ்தபா, பி.கே.பி. பள்ளி தாளாளர் அருண் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுக உரையாற்றினார்.

நிகழ்வில் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்று 'அறிவியலும் மானுடமும்: நேற்று-இன்று-நாளை' என்ற தலைப்பில் பேசியதாவது:

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுடன் நான்காவதாக அறிவியல் தமிழையும் சேர்க்க வேண்டும். அறிவியல் என்பது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றைக் கொண்டது. புதிய கண்டுபிடிப்புகள் மட்டுமே மனிதனை மேலே கொண்டுசெல்கிறது. கடந்தவாரம் வரை இந்தப் பேரண்டம் 13 ஆயிரத்து 800 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக சொல்லப்பட்டது. அண்மையில் ஒரு நட்சத்திரத்தின் வயதைக் கண்டறிந்த போது இந்தப் பேரண்டத்துக்கு 14 ஆயிரத்து 500 கோடி ஆண்டுகள் வயதாகிறது என்று கூறப்படுகிறது. மனிதன் கிட்டத்தட்ட 3 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியுள்ளான். ஆதிமனிதன் முதன்முதலில் கல்லைப் பயன்படுத்துவதைக் கண்டுபிடித்தான். அதுதான் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு.

அடுத்ததாக தன்னுடைய கண்டுபிடிப்பைத் தெரியப்படுத்த மொழியை கண்டறிந்தான். கல்வியும், அறிவியலும் ஒருசேர பிறந்து வளர்ந்திருக்கிறது. அதன்பிறகு சக்கரம் என்பது மிகப்பெரிய கண்டுபிடிப்பாக உள்ளது.

இன்றைய வாழ்க்கை என்பது மின்சாரம் கண்டுபிடித்ததை அடுத்து தொடங்கியது. அறிவியல் வேகமாக வளர்ந்து மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் இருந்து நாளைய விளைவுகளை எண்ணி பார்த்தால் எல்லாமே நல்லதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இதை சிந்தித்து பார்க்கும்போது ஒருவித அச்சம் ஏற்படுகிறது. இந்த அச்சத்தின் பின்விளைவுகளை நினைத்து அறிவியல் வளர்ச்சியை சரியான புரிதலுடன் அமல்படுத்த வேண்டும். அன்றாட வாழ்வில் கணினிகள் மனிதனின் மூளையை மழுங்கடித்து விடுகின்றன. கணினி பயன்பாட்டால் சிந்திப்பது குறைந்து விட்டது என்றார்.

முன்னதாக பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. குழந்தைவேல், புதிய அறிவியல் கண்டுபிடிப்பாளருக்கான ஜி.டி. நாயுடு விருதினை வழங்கி பேசியதாவது:

மொழி, கலாசாரம், பண்பாடு போன்றவற்றில் மட்டும் நாம் பெரியவர்கள் இல்லை. அறிவியலிலும் பெரியவர்கள் என நிரூபித்துள்ளோம். ஆனால் கடந்த 70 ஆண்டுகளில் இந்தியாவில் அதிக அளவிலான கண்டுபிடிப்புகள் வரவில்லை என்ற ஆதங்கம் மக்களிடம் உள்ளது. இதனால் அறிவியலில் பின்தங்கிவிட்டோமோ என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. 70 ஆண்டுகளில் இந்தியாவில் 5 கண்டுபிடிப்புகள்தான் வந்துள்ளன என்றார்.

**உதவிப் பேராசிரியருக்கு ஜி.டி. நாயுடு விருது:** நிகழ்வில் கோவை கற்பகம் உயர்கல்வி அகாதெமி உதவிப் பேராசிரியர் எஸ்.பாஸ்கருக்கு ஜி.டி.நாயுடு விருதினை துணைவேந்தர் பொ.குழந்தைவேல் வழங்கினார். கேடயத்துடன் விருதுத் தொகை ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது. விருதுத் தொகையை எம்.ஏ.முஸ்தபாவை நிறுவனராகக் கொண்ட சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை வழங்கியது. திடக்கழிவுகளை பிரித்து எடுக்க செலவு குறைந்த தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தற்காக இந்த விருது பாஸ்கருக்கு வழங்கப்பட்டது.

### புத்தகத் திருவிழாவில் இன்று தினமணி ஆசிரியர் உரை

புத்தகத் திருவிழாவில் திங்கள்கிழமை (ஆகஸ்ட் 12) மாலை 6 மணிக்கு நடைபெறும் சிந்தனை அரங்க நிகழ்வில் தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் பங்கேற்று 'பார்வைகள் பலவிதம்' என்ற தலைப்பில் பேசுகிறார். மேலும் கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவர்களுக்குப் பரிசு, பாராட்டு சான்றிதழ் வழங்குகிறார். நிகழ்வில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா.குறிஞ்சிவேந்தன் பங்கேற்று 'கடல் கடந்த வேர்கள்' என்ற தலைப்பில் பேசுகிறார்.

### நூல் வெளியீடு...



பேராசிரியர் சு.துரை எழுதிய 'ஈழத்து இலக்கிய ஆளுமை வவுனியூர் இரா.உதயணன்' என்ற நூல் வெளியீட்டு விழா உலகத் தமிழர் படைப்பரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் லண்டன் வாழ் இலங்கை எழுத்தாளர் இரா.உதயணன், மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், நூலாசிரியர் கோவை வாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### இலக்கிய தேடல்.



புத்தகத் திருவிழா அரங்கில் தமிழ் இலக்கிய நூல்களைப் பார்வையிட்ட மாற்றுத் திறனாளி.

# விற்பனையில் முன்னிலை வகிக்கும் தன்னம்பிக்கை புத்தகங்கள்



தன்னம்பிக்கை புத்தகங்களை பார்வையிட்ட பெண்கள்.

**ஈரோடு, ஆக.11:** ஈரோடு புத்தகத் திருவிழாவில் தன்னம்பிக்கையை வளர்க்கும் புத்தகங்களின் விற்பனை அதிகமாக உள்ளது என புத்தக விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

மக்கள் சிந்தனைப் பேரவை நடத்தும் ஈரோடு புத்தகத் திருவிழா கடந்த 2 ஆம் தேதி தொடங்கியது. ஈரோடு வஉசி பூங்கா வளாகத்தில் நடைபெறும் இந்த புத்தகத் திருவிழா வரும் செவ்வாய்க்கிழமை (ஆகஸ்ட் 13) முடிவடைகிறது. இதில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பார்தி புத்தகாலயம், கிழக்குப் பதிப்பகம், கண்ணதாசன் பதிப்பகம், கற்பகம் புத்தகாலயம், சிக்ஸ்த் சென்ஸ் பதிப்பகம், கீதா அச்சகம், மணிவாசகர் பதிப்பகம் உள்ளிட்ட சுமார் 100 பதிப்பகங்கள் 230 அரங்குகளை அமைத்து புத்தகங்களை விற்பனை செய்து வருகின்றன.

இதில் பல்வேறு தலைப்பிலான நூல்கள் இருந்தாலும், தன்னம்பிக்கையை வளர்த்தல் தொடர்பான புத்தகங்களே அதிக அளவில் விற்பனையாகின்றன. குறிப்பாக, தன்னம்பிக்கையை மேம்படுத்தும் விதமாக வெளிநாட்டு மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களின் விற்பனை அதிகம். மாணவர்கள், இளைஞர்கள், நடுத்தர வயதினர் உள்ளிட்டோரும் இந்த நூல்களையே அதிகமாக விரும்பி வாங்குகின்றனர். எனவே, ஒட்டுமொத்த விற்பனையில் இந்த வகையான நூல்களின் விற்பனை ஏறத்தாழ 50 சதம் இருக்கும் என விற்பனையாளர்கள் தெரிவித்தனர். புத்தகத் திருவிழா தொடங்கியது முதலே பள்ளி மாணவர்களின் வருகையே அதிக அளவில் உள்ளது. பெற்றோருடன் வரும் இவர்கள் மகாத்மா காந்தியின் சத்திய சோதனை, கணித, அறிவியல் நூல்கள், திருக்குறள், நேரு, சுபாஷ் சந்திரபோஸ் உள்ளிட்ட தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், ஸ்பைடர் மேன் நூல் போன்றவற்றை அதிக அளவில் வாங்குகின்றனர்.

இதற்கு அடுத்து வணிகம் தொடர்பாக ஆலோசனை தரும் நூல்கள், பங்குச் சந்தை குறித்த நூல்கள் உள்ளிட்டவற்றின் விற்பனை கணிசமான அளவில் இருக்கின்றன. ஏறத்தாழ 65 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான கல்கியின் பொன்னியின் செல்வன், 1940-களில் வெளியான சிவகாமியின் சபதம், சாண்டில்யனின் கடல் புறா போன்றவற்றின் தொகுப்புகளை இப்போதும் ஏராளமானோர் வாங்கிச் செல்கின்றனர். இதேபோல, ஆன்மிகத்தில் கம்பராமாயணம், மகாபாரதம் மற்றும் ஜாதகம், எண் கணிதம் உள்ளிட்டவற்றின் விற்பனையும் பரவலாக இருக்கின்றன.

இந்த விழாவில் குழந்தைகளின் கூட்டம் அதிமாகக் காணப்படுவதால், விற்பனையும் ஓரளவுக்கு இருப்பதாக விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

புத்தகத் திருவிழா வரும் செவ்வாய்க்கிழமை நிறைவடைவதால், கடைசி 2 நாள்களில் கூட்டம் அதிகமாக வரும் என்ற எதிர்பார்ப்பில் விற்பனையாளர்கள் உள்ளனர்.

# கலாம் புத்தகங்களுக்கு அமோக வரவேற்பு



கண்ணதாசன் பதிப்பக அரங்கில் கலாம், கண்ணதாசன் எழுதிய புத்தகங்களைப் பார்வையிட்ட பள்ளி மாணவிகள்.

**ஈரோடு, ஆக.11:** ஈரோடு புத்தகத் திருவிழாவில் குடியரசு முன்னாள் தலைவர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் எழுதிய புத்தகங்கள், கவிஞர் கண்ணதாசன் புத்தகங்கள் அமோகமாக விற்பனையாகி வருகின்றன.

மக்கள் சிந்தனைப் பேரவை நடத்தும் 15-ஆவது புத்தகத் திருவிழா, ஈரோடு வ.உ.சி. பூங்கா அரங்கில் கடந்த 2 ஆம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வரும் செவ்வாய்க்கிழமை வரை விழா நடைபெறுகிறது.

கொங்கு மண்டலத்தில் கல்வி நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் அது தொடர்பான நூல்கள், ஆய்வு நூல்கள், அறிவியல் நூல்களுக்கும் அதிக வரவேற்பு இருக்கும். இந்த ஆண்டு குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் எழுதிய புத்தகங்களுக்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளது.

பெரும்பாலான பதிப்பக அரங்குகளில் அப்துல் கலாம் எழுதிய புத்தகங்கள் விற்று தீர்ந்து விட்டன. பதிப்பக உரிமையாளர்கள் எதிர்பார்த்ததைவிட அதிக எண்ணிக்கையில் விற்பனையாகியுள்ளது. மேலும், 2009, 2014 ஆண்டில் ஈரோடு புத்தகத் திருவிழாவில் அப்துல் கலாம் பங்கேற்று பேசிய உரை அடங்கிய குறுந்தகடுகளும் அதிக அளவில் விற்பனையாகின.

இதுகுறித்து கண்ணதாசன் பதிப்பகத்தைச் சேர்ந்த அலுவலர் கூறியதாவது:

அப்துல் கலாமின் 'அக்னிச் சிறகுகள்' புத்தகத்தை மாணவ, மாணவிகள் அதிகமாக விரும்பி வாங்கிச் செல்கின்றனர். அவரது எளிமையான வாழ்க்கை வரலாறை ஏற்கெனவே படித்து தெரிந்தவர்கள், மற்றவர்களுக்கு அதை வாங்கிகொடுக்க முயற்சி செய்து வருகின்றனர். இதனால், கலாம் எழுதிய புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அப்துல் கலாம் எழுதிய 'அக்னிச் சிறகுகள்' புத்தகம் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகியுள்ளது.

**கண்ணதாசன் புத்தகங்கள்:** கண்ணதாசன் எழுதிய 'வனவாசம்' புத்தகம் முழுமையாக விற்று தீர்ந்துவிட்டது. 'சேரமான் காதலி' என்ற புத்தகம் 500 பிரதிகளில் 30 புத்தகங்கள் மட்டுமே மீதம் உள்ளது. 'அர்த்தமுள்ள இந்து மதம்' புத்தகம், 'தென்றல் வளர்த்த தமிழ்', 'ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை' விளக்க உரைகள், 'ஒரு நதியின் கதை' போன்ற புத்தகங்கள் மக்களால் தேடப்படுகிறது. இந்த ஆண்டில் கண்ணதாசன் புத்தகங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாக விற்பனையாகியுள்ளது. இளைஞர்கள், கல்லூரி மாணவ, மாணவியர் ஏராளமானோர் இந்தப் புத்தகங்களை வாங்கிச் செல்கின்றனர். இளைஞர்களின் கவனம் கண்ணதாசன் படைப்புகள் மீது திரும்பியுள்ளதை ஈரோடு புத்தகத் திருவிழாவில் உணர்கிறோம் என்றனர்.

ஈரோடு புத்தகத்திருவிழா:

# நிலவு, செவ்வாய் கிரகங்களில் மற்றொரு கண்டம் உருவாகும்

## விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேச்சு

ஈரோடு, ஆக.12-

நிலவு, செவ்வாய் கிரகங்களில் மற்றொரு கண்டம் உருவாகும் என்று ஈரோடு புத்தகத்திருவிழாவில் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கூறினார்.



ஈரோட்டில் நடந்து வரும் புத்தக திருவிழாவில் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசிய போது எடுத்த படம்.

### ஜி.டி.நாயுடு விருது

ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடந்து வரும் புத்தகத் திருவிழாவில் சிந்தனை அரங்கம் நிகழ்ச்சி நேற்று மாலை நடந்தது. நிகழ்ச்சிக்கு வேளாளர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர் தலைமை தாங்கினார். பி.கே.பி. சாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கூட தாளாளர் பி.கே.பி.அருண் முன்னிலை வகித்தார். மக்கள் சிந்தனை பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் குழந்தைவேல் கலந்துகொண்டு ரூ.1 லட்சத்துடன் கூடிய ஜி.டி.நாயுடு விருதை கோவை கற்பகம் உயர்கல்வி அகாடமி உதவி பேராசிரியர் எஸ்.பாஸ்கருக்கு வழங்கினார். திடக்கழிவு மேலாண்மையில் குப்பைகளை பிரிக்க நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட கருவிக்காக அவருக்கு விருது வழங்கப்பட்டது.

### அறிவியல் தமிழ்

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய துணைத்தலைவர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கலந்துகொண்டு 'அறிவியலும் மானுடமும்: நேற்று-இன்று-நாளை' என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுடன் அறிவியல் தமிழையும் நான்காவதாக சேர்க்க வேண்டும். அறிவியல் என்பது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றை கொண்டது. அறிவியலாளர் என்பது சுயநலமின்றி சுற்றி உள்ளவர்களுக்கும் பயன் உள்ளதாக சிந்திப்பதாகும். புதிய கண்டுபிடிப்புகள் மட்டுமே மனிதனை மேலே மேலே கொண்டு செல்கிறது.

கடந்த ஒரு வாரம் வரை இந்த பேரண்டம் 13 ஆயிரத்து 800 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக சொல்லப்பட்டது. சமீபத்தில் ஒரு நட்சத்திரத்தின் வயதை கண்டறிந்தபோது இந்த பேரண்டத்துக்கு 14 ஆயிரத்து 500 கோடி ஆண்டுகள் வயதாகிறது என்று கூறப்படுகிறது.

### அச்சம்

இன்றைய வாழ்க்கை என்பது மின்சாரம் கண்டுபிடித்ததை அடுத்து தொடங்கியது. இது அறிவியல் வேகமாக வளர்ந்து மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்தநிலையில் இருந்து நாளைய விளைவுகளை எண்ணி பார்த்தால் எல்லாமே நல்லதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இதை சிந்தித்து பார்க்கும்போது ஒருவித அச்சம் ஏற்படுகிறது. இதே வேகத்தில் சென்றுகொண்டே இருந்தால் கூடிய சீக்கிரத்தில் மனிதன் இல்லாமல் போய்விடும் நிலை உருவாகும். இந்த அச்சத்தின் பின்விளைவுகளை நினைத்து அறிவியல் வளர்ச்சியை சரியான புரிதலுடன் வாழ வேண்டும்.

சந்திரனில் சென்று ஆய்வு செய்த பல நாடுகளை சேர்ந்தவர்கள் நீர் இல்லை என்று கூறினார்கள். ஆனால் 40 ஆண்டுகளுக்கு பிறகு நாம் முழுநிலவையும் ஆய்வு செய்து பல இடங்களில் நீர் இருப்பதை முதல் முறையிலேயே கண்டறிந்துவிட்டோம்.

### தவறான விளைவுகள்

அறிவியல் வளர்ச்சி சிறப்பாக இருந்தாலும், நாம் என்ன சாப்பிட வேண்டும்? யாரை திருமணம் செய்ய வேண்டும்? யாருக்கு ஓட்டு போட வேண்டும்? போன்ற உரிமைகளையும் எந்திரங்களே நிர்ணயிக்கும் நிலை ஏற்படலாம். எனவே அறிவியலை நன்கு புரிந்து செயல்பட்டால், எதிர்காலத்தில் வரும் தவறான விளைவுகளில் இருந்து தப்பிக்கலாம்.

### மற்றொரு கண்டம்

வருகிற செப்டம்பர் மாதம் 7-ந் தேதி சந்திராயன்-2 செயற்கைகோள் நிலவில் இறங்கும் இடத்தில்தான் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பியா போன்ற நாடுகள் நாளை செயற்கைகோளை இறக்கும். எனவே நாம் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறோம். ஆசியா, ஆப்பிரிக்கா, அண்டார்ட்டிகாவை போல நிலவு, செவ்வாய் கிரகங்களில் நாளை மற்றொரு கண்டம் உருவாகும். அங்கு நாம் சென்று குடியேறுவோம். சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இனி இந்தியாவும் பங்கேற்கும். நிலவில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைப்போம்.

உங்களுடைய மகன், மகள்கள் மற்ற நாடுகளுக்கு சென்று டாலரை சம்பாதித்து அனுப்புவது போல, நிலவில் சென்று குடியேறி ஹீலியம் எடுத்து பூமிக்கு அனுப்பும் வாய்ப்பு உருவாகும். அப்போது பூமியின் வளத்தையும் பெருக்க முடியும். அங்கு பல்வேறு நாட்டினர் எந்தவொரு சண்டையும் இல்லாமல் கைகோர்த்து ஒற்றுமையுடன் வாழலாம்.

இவ்வாறு விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கூறினார்.

நிகழ்ச்சியில் சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக் கட்டளை நிறுவனர் எம்.ஏ.முகமது முஸ்தபா உள்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.



தினத்தந்தி சார்பில் அமைக்கப்பட்டு இருக்கும் அரங்கில் புத்தகங்களை தேர்வு செய்தவர்களை படத்தில் காணலாம்.

### 'தினத்தந்தி' அரங்கு

புத்தக திருவிழாவில் 171-ம் எண் அரங்கில் 'தினத்தந்தி' பதிப்பக வெளியீட்டு புத்தகங்கள் வைக்கப்பட்டு உள்ளன. அங்கு மகிழ்ச்சியுடன் வாழவைக்கும், இதுவும் கடந்து போகும், நமக்குள் சில கேள்விகள், பழைய சோறு, சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம், ஆயிரம் ஆண்டு அதிசயம், தமிழ் சினிமா வரலாறு (பாகம் 1), ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு, மகிழ்ச்சியான வாழ்வுக்கு மகத்தான மந்திரங்கள், உலகை உலுக்கிய வாசகங்கள், கலாம் ஒரு சரித்திரம், 27 நட்சத்திர தலங்கள் பரிகார முறைகள் உள்பட பல்வேறு புத்தகங்கள் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன. வாழ்வை வளமாக்கும் பூஜை-விரதமுறைகள், இதயம் தொட்ட பழமொழிகள், உடலும் உணவும், நலம்தரும் மூலிகை சமையல், வாருங்கள் சீரடி சாய்பாபாவை தரிசிப்போம், இறையருள் தரும் சாதனங்கள் போன்ற புத்தகங்களை பெண்கள் அதிகமாக விரும்பி வாங்கி செல்கிறார்கள். இளைஞர்களை கவரும் வகையில், சிகரம் தொடும் சிந்தனைகள், புரட்டிப்போடும் புலன் விசாரணை, உலகம் பிறந்தது உனக்காக, இதயம் கவர்ந்த இலக்கிய காட்சிகள் உள்ளிட்ட ஏராளமான புத்தகங்கள் கிடைக்கும். இந்த புத்தகங்கள் தள்ளுபடி விலையில் வழங்கப்படுகிறது. புத்தக திருவிழா நாளை (செவ்வாய்க்கிழமை) நிறைவடைகிறது.

# 'புத்தகம் தரும் உணர்வு கணினியில் கிடைப்பதில்லை'

ஈரோடு, ஆக. 14–

ஈரோடு புத்தக திருவிழாவின், நிறைவு நாளான நேற்று மாலை நடந்த சிந்தனை அரங்கில், தென்னிந்திய புத்தக பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர் சங்க தலைவர் வைரவன் முன்னிலை வகித்தார். இதில், இஸ்ரோ முன்னாள் இயக்குனர் வாசகம் பேசியதாவது:

இந்திய விண்வெளி ஆராய்ச்சி துறையில், 1967ல், 17 பேர் பணி செய்தோம். எனக்கு ஓராண்டு முன்பாக சேர்ந்த, மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமுடன் சேர்ந்து, நானும் பணி செய்தேன். தற்போது, 17 ஆயிரம் பேர் நேரடியாக, 25 ஆயிரம் பேர் வெளியே இருந்தும், இஸ்ரோவில் (ஐ.எஸ்.ஆர்.ஓ.,) பணி செய்கின்றனர்.

செய்தி தொடர்புக்கான செயற்கைகோளை, 1977 முதல், 85ல் உருவாக்கி அனுப்பினோம். அதை அடிப்படையாக வைத்தே, சந்திரயான், மங்கள்யான் உட்பட பல கோள்கள் அனுப்பியுள்ளனர். இவற்றின் மூலம், தகவல் தொழில் நுட்பம், நூல்கள், புத்தகங்கள் என பலவும் விரிவடைந்துள்ளன. உலகில், 30 கோடி நூல்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளன. அமெரிக்காவில் ஆண்டுக்கு ஒரு கோடி நூல் வெளியிடப்படுகிறது. அந்தளவுக்கு இந்தியாவில் வெளியாவதில்லை.

அலெக்ஸாண்டிரியா நூலகம், யாழ்பாண நூலகம் அழிக்கப்பட்டாலும், கணினி, இணையமொழி, புதிய தொழில் நுட்ப வாசிப்புகள் வந்தாலும், புத்தகங்கள் என்றும் அழியாதவை. புத்தகங்கள், எழுத்துக்களில் கிடைக்கும் உணர்வுகள், கணிப்பொறிகளை கையாள்வதால் கிடைப்பதில்லை. அமெரிக்காவில் 'உச்ச நாடாளுமன்ற நூலகம்' உலக அளவில் தரமான நூல்கள், கட்டுரைகள், ஆய்வுத்தகவல்களை முழுமையாக பதிவு செய்கின்றனர். மைக்ரோ பிலிம் மூலம் பாதுகாக்கின்றனர். அதுபோன்ற ஆவணப்படுத்தும் நூலகம், தமிழகத்தில் வர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் வரவேற்று பேசுகையில், ''ஈரோட்டில், 2020 ஜூலை, 31 முதல் ஆக., 11 வரை, 16வது புத்தக திருவிழா நடக்கும்,'' என்றார். மக்கள் சிந்தனை பேரவை செயலாளர் அன்பரசு நன்றி கூறினார்.




■ ஈரோடு, புத்தக திருவிழாவின் நிறைவு நாளான நேற்று, சிந்தனை அரங்கில், இஸ்ரோ முன்னாள் இயக்குனர் வாசகம் பேசினார்.



# புத்தகங்களை ஆவணப்படுத்தும் நூலகம் அமைக்கப்பட வேண்டும்

## இஸ்ரோ முன்னாள் இயக்குநர் ஆர்.எம்.வாசகம்

ஈரோடு, ஆக. 13: நவீன தொழில் நுட்பங்கள் மூலம் புத்தகங்களை ஆவணப்படுத்தும் நூலகம் தமிழகத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று இஸ்ரோ முன்னாள் இயக்குநர் ஆர்.எம்.வாசகம் பேசினார்.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோடு புத்தகத் திருவிழா ஆகஸ்ட் 2 ஆம் தேதி தொடங்கி 13 ஆம் தேதி வரை நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு, தி சென்னை சில்க்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கே.ஆறுமுகம் தலைமை வகித்தார். பபாசி தலைவர் எஸ்.வைரவன் வாழ்த்திப் பேசினார். மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுக உரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற இஸ்ரோ முன்னாள் இயக்குநர் ஆர்.எம்.வாசகம் பேசியதாவது: கடந்த 1967 இல் இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறையில் 17 பேர் பணி செய்தோம். எனக்கு ஒரு ஆண்டுக்கு முன்பாக முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பணியில் சேர்ந்திருந்தார். அவருடன் நானும் பணியாற்றினேன். தற்போது 17,000 பேர் நேரடியாகவும், 25,000 பேர் வெளியே இருந்தும் இஸ்ரோவுடன் பணியாற்றுகின்றனர். நாங்கள் முதன் முதலாக செய்தி தொடர்புக்கான செயற்கைக் கோளை 1985 இல் அனுப்பினோம். அதனை அடிப்படையாக வைத்தே சந்திராயன், மங்கள்யான் உள்பட பல செயற்கைக்கோள்களை அனுப்பி உள்ளனர். இக்கோள்கள் மூலம் தகவல் தொழில் நுட்பம் என பலவும் விரிவடைந்துள்ளன.

உலகில் மொத்தமாக 30 கோடி நூல்கள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஆண்டுக்கு ஒரு கோடி நூல்கள் வெளியிடப்படுகின்றன. அந்த அளவுக்கு இந்தியாவில் புத்தகங்கள் வெளியாவதில்லை. அலெக்ஸாண்டிரியா நூலகம், யாழ்ப்பாண நூலகம் போன்றவை அழிக்கப்பட்டாலும், கணினி, இணையமொழி, புதிய தொழில்நுட்ப வாசிப்புகள் வந்தாலும் புத்தகங்கள் என்றும் அழியாதவை என்று நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

சென்னை கன்னிமாரா நூலகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு புத்தகம் கடைசி நாளை சந்திக்கிறதா என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. அங்கு பல்வேறு நாட்டினர் பங்கேற்றுப் பேசினர். இதில் பேசிய அனைவருமே எத்தனை தளங்கள் வந்தாலும், தரமான நூல்கள் வந்து கொண்டே இருக்கும் என நிறைவு செய்தனர்.

அமெரிக்காவில் உள்ள உச்ச நாடாளுமன்ற நூலகத்தில் உலக அளவில் தரமான நூல்கள், கட்டுரைகள், ஆய்வுத் தகவல்களை முழுமையாகப் பதிவு செய்கின்றனர். மைக்ரோ பிலிம் மூலம் பாதுகாக்கின்றனர். அதுபோன்ற பல வகையில் ஆவணப்படுத்தும் நூலகம் தமிழகத்தில் வர வேண்டும். எந்த புத்தகம் வந்தாலும், அங்கு இருக்கும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

**2020 இல் ஜூலை 31 இல் புத்தகத் திருவிழா தொடக்கம்:** 12 நாள்களாக நடைபெற்ற ஈரோடு புத்தகத் திருவிழா பணிகளில் பங்களிப்புச் செலுத்திய அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. புத்தகங்களை வாங்கிச் செல்லவும், சிந்தனை அரங்க நிகழ்வில் கலந்து கொள்ளவும் வந்திருந்த பல்லாயிரம் பேருக்கும் அடுத்த ஆண்டு புத்தகத் திருவிழா 2020 ஆம் ஆண்டு ஜூலை 31 முதல் ஆகஸ்ட் 11 ஆம் தேதி வரை நடைபெறும் என்ற தகவலுடன் கூடிய நன்றி அறிவிப்புத் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. மேலும், மக்கள் சிந்தனைப் பேரவை புரவலர் திட்டம் குறித்த அறிவிப்பும், விளக்க துண்டறிக்கைகளும் வெளியிடப்பட்டன. மக்கள் சிந்தனைப் பேரவைச் செயலாளர் ந.அன்பரசு நன்றி கூறினார்.




புத்தகத் திருவிழா நிறைவு விழாவில் பேசுகிறார் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் ஆர்.எம்.வாசகம்.

KOVAI
செவ்வாய், ஆகஸ்ட் 13, 2019

இந்து தமிழ் திசை

## லட்சக்கணக்கான வாசகர்களை வசப்படுத்திய

# ஈரோடு புத்தகத் திருவிழா இன்று நிறைவு



ஈரோடு புத்தகத் திருவிழாவில் கோவை கற்பகம் உயர்கல்வி அகாடமி உதவி பேராசிரியர் எஸ். பாஸ்கருக்கு ஜி.டி.நாயுடு விருதினை துணைவேந்தர் பெ.குழந்தைவேல் வழங்கினார். அருகில் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை உள்ளிட்டோர்.

■ ஈரோடு

லட்சக்கணக்கான வாசகர்களால் கொண்டாடப் பட்ட ஈரோடு புத்தகத் திருவிழா இன்று நிறைவடைகிறது.

மக்கள் சிந்தனைப் பேரவை நடத்திய 15-ம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா, வ.உ.சி.பூங்கா மைதானத்தில் கடந்த 2-ம் தேதி தொடங்கியது. நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் புத்தகத் திருவிழாவில் பங்கேற்று, லட்சக் கணக்கான புத்தகங்களை வாங்கிச் சென்றனர்.

நாள்தோறும் மாலை நடந்த சிந்தனை அரங்கில் பல்வேறு துறைகளின் புகழ்பெற்ற ஆளுமைகள் பங்கேற்றனர். ஈரோடு, திருப்பூர், நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் புத்தகத் திருவிழாவில் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றனர். ஈரோடு ஆட்சியர் சி.கதிரவன் குடும்பத்தினருடன் நேற்று முன் தினம் புத்தகக்கண்காட்சியில் பங்கேற்று புத்தகங்களை வாங்கினார்.

### ஜி.டி.நாயுடு விருது

ஈரோடு புத்தகத் திருவிழாவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், கோவை கற்பகம் உயர்கல்வி அகாடமி உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ்.பாஸ்கருக்கு, ஜி.டி.நாயுடு விருதினை சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் பெ.குழந்தைவேல் வழங்கினார். கேடயத்துடன் விருது தொகை ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது. விருது தொகையை எம்.ஏ. முஸ்தபாவை நிறுவனராகக் கொண்ட சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை வழங்கியது. திடக்கழிவுகளை பிரித்து எடுக்க செலவு குறைந்த தொழில்நுட்பத்தை கண்டு பிடித்ததற்காக இந்த விருது பாஸ்கருக்கு வழங்கப்பட்டது.

### இன்று நிறைவு விழா

ஈரோடு புத்தகத் திருவிழாவை, சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் தொடங்கி வைத்த நிலையில், இன்று (13-ம் தேதி) மாலை நடக்கும் நிறைவு விழாவில், இஸ்ரோ முன்னாள் இயக்குநர் ஆர்.எம்.வாசகம், 'பபாசி' தலைவர் எஸ்.வைரவன், மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன், தி சென்னை சில்க்ஸ் நிர்வாக இயக்குநர் கே.ஆறுமுகம் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் பங்கேற்ற வாசகர்களுக்கு, மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்று மாலை நடக்கும் நிறைவு விழாவில், அடுத்த அண்டு புத்தகத்திருவிழா நடக்கும் தேதி அறிவிக்கப்படவுள்ளது.

# Books worth ₹7 crore sold at Erode Book Festival

STAFF REPORTER
ERODE

Over seven lakh people, including school students, visited the 12-day Erode Book Festival, held at VOC Park Grounds here.

Organised by *Makkal Sindhanai Peravai* for the 15th year, over 150 publishers from across the country exhibited books that was visited by three lakh children and over four lakh public. On an average about 58,000 people, including children, visited the exhibition. Apart from the book exhibitions, eminent personalities from various fields spoke on various topics on all the days.

T. Stalin Gunasekaran, president of the *Peravai*, said that there were visitors from Malaysia, Norway, Spain, Australia and Singapore. He added that books were sold to over ₹ 7 crore during the exhibition.

At a function held on the concluding day, the best award, G.D. Naidu Award, for scientific innovation was presented to Bhaskar, Assistant Professor from Coimbatore. He was also given a cash award of ₹ 1 lakh for his innovation. Also, 15,000 saplings were distributed to the visitors.



The Erode Book Festival at VOC Park Grounds was a big draw and nearly seven lakh people, including school students visited the fair.. • M. GOVARTHAN